தமிழ்

சிறப்பாசிரியர் : குன்றக்குடி அடிகளார்

50 காசு

மலர் 1 | 1961 ஜூன் 15 | இதழ் 1

இலக்கிய விருந்து தருவோர்

மயிலை சிவமுத்து

ஞா. தேவநேயப்பாவாணர்

கா. அப்பாதுரையார்

மா. இராசமாணிக்கனார்

அ. மு. பரமசிவானந்தம்

வலம்புரி அண்ணாமலை

சுப்பு ஆறுமுகம்

வே. கபிலன்

பூவை எஸ். ஆறுமுகம்

இருகூரான்

தமிழ்ப்பித்தன்

விகரு. இராமநாதன்

வெங்கடேசன்

தமிழ்முடி

நாரா நாச்சியப்பன்

முகம்மது மைதீன்

கம்பதாசன்

கவிஞர் கண்ணதாசன்

வளரும் தமிழ் வாழ்க!

"தமிழ்" என்னும் தீஞ் சுவை இலக்கியத் திங்களிதழ் வெளி வருதல் கண்டு பேருவகை யெய்துகின்றேன். தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களைச் சிறப்பாசிரியராகக் கொண்டுள்ளமையால் இத் தீந்தமிழ்த்திங்களிதழ்பெருமை பெறுகின்றது. "தமிழ்" நாடோறும் வளர்ந்து நனி சிறந்தொளிர வாழ்த்துகின்றேன்.

நல்ல தமிழ் ஏட்டிற்கு நாட்டு மக்கள் நல்லாதரவு தந்து வளரும் மொழி வாழ உதவுமாறு வேண்டுகின்றேன். நாம் செலவிடும் ஒவ்வொரு காசும் நம் மொழி வளர, நம்நாடு உயர நம் மக்கள் முன்னேற செலவிடுவதாக இருந்தால் நம் நிலை மேலும் சிறப்புடைத்தாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. நல்ல தமிழ் ஏடுகளுக்கு உள்ள ஆதரவு பெருகி வளர வேண்டும்.

இச்செய்தியினைத் தமிழ் மக்கள் மனதிற் கொண்டு வளம் பெறுவார்கள் என்று நம்புகின்றேன்.

தமிழ் மொழியின் உயர்வும் தாழ்வும் தம் சொந்த உயர்வாகவும் தாழ்வாகவும் கொண்டிலங்கும் தமிழ் எழுத்தாளர் மரபு தன்னல மறுப்பு இயக்கத்தைச் சார்ந்தது. தமிழ் ஏட்டின் சீரிய தமிழ்த் தொண்டு நம் தாய் மொழிக்குப் பேரணியாக விளங்குவதாக என்று வாழ்த்துகின்றேன்.

எத்திக்கும் புகழ் மணக்க இருந்த பெருந் **தமிழ்** அணங்கு மீண்டும் தமிகத்தில் புகழ்ப் பரணி பாடி பவனி வர புறப்பட்டு விட்டாள். தமிழ் அணங்கின் வாழ்வை வளம் பெறச் செய்ய நல்வரவேற்புத் தாருங்கள்.

தமிழ்நெறிக்காவலர்
பேராசிரியர்
மயிலை சிவமுத்து

எண்ணிற் சிறந்தது; எழுத்திற் சிறந்தது;
பண்ணிற் சிறந்தது; பண்பிற் சிறந்தது;
தமிழ்! தமிழ்! தமிழ்!

வாழும் தமிழ்

நடமாடும் மனிதனுக்கு முதுகெலும்பு;

மகிழ்ச்சி தரும் பூங்காவிற்கு மலர்ச்செடிகள்;

திருக்கோயிலுக்குத் திருவருள் நிறைந்த மூர்த்தி;

இவைகள் அழகுத் தருபவைகள்-இன்றியமையாதவையும் கூட. அதுபோல வாழ்கின்ற, வாழ விரும்புகின்ற சமுதாயத்திற்குத் தாய்மொழி இன்றியமையாத ஒன்று. தாய்மொழி சிந்தனையின் ஊற்று-அறிவின் தாயகம், அறநெறியின் அடிநிலம். தாய்மொழி வழியிலேயேதான் சமுதாயம் சிறக்கமுடியும்.

தமிழினத்தின் தாய்மொழி தமிழ். தமிழ் காலத்தால் மூத்த மொழி; கருத்தாலும் மூத்தமொழி; எளியமொழி. உலக மொழிகளின் வரிசையில் நிற்க வேண்டிய மொழி. வாழ்க்கையோடியைந்த மொழி. எப்படி வாழவேண்டும்? ஏன் வாழ்கிறோம்? என்ற வினாக்கள் நாகரீகம் அடைந்த சமுதாயத்தின் வினாக்கள், இந்தவினாக்களை இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே எழுப்பி விடைகண்ட மொழி தமிழ்மொழி. உலகத்தில் உள்ள அனைத்து மொழிகளுக்கும், மொழிக்கு மட்டுமே இலக்

கணம் உண்டு. ஆனால் தமிழில் மொழியோடு, அம்மொழி பேசி வாழும் மக்கள் வாழ்க்கை முறைக்கும் இலக்கணம் கண்டார் தொல்காப்பியர். தமிழ் இனிமையானது; தமிழ் சிறந்தது. அதனிலும் சிறந்த உயிர்ப்புடையது. உலகு ஏற்றுக்கொள்ளும் தகுதியுடையதாக விளங்குவது தமிழ் நாகரீகம்!

உலகைப் பற்றிய பேச்சு இன்று அதிகம். அழிவியல் வழிப்பட்ட அறிவியல் வளர்ச்சியால் அஞ்சுகிற மனிதகுலம் உலகம் தழீஇய ஒருமை பேசுகின்றது! உறவுமுறை கொண்டாடுகின்றது. ஆனால் புறநானூற்றுத் தமிழ் அன்பின் அடிப்படையில் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று முழங்கியது "பிறப் பொக்கும் எல்லா வுயிர்க்கும்" என்று வள்ளுவம் பேசுகிறது. தமிழ், உலகை நோக்கி வளர்ந்த மொழி. உலகை வளர்த்த மொழி. உலகப் பொதுமறையாக விளங்கும் திருக்குறள் தமிழ்தந்த செல்வம், தமிழிலக்கியங்கள் வாழ்க்கையை மையமாகக்கொண்டே வளர்ந்துள்ளன. வாழ்விற்கு ஒவ்வாத வறண்ட கற்பனைக் காவியங்கள் தமிழில் இல்லை என்றே கூறலாம். அப்படியே ஒன்றிரண்டு இருந்தாலும் அவை பிற இலக்கியத் தொடர்பு கொண்ட பிறகு, பிற்காலத்தில் எழுந்தவைகளாகவே இருக்கும். வையத்துள் வாழ்வாங்கு வாழும் நெறியே வண்மைத் தமிழின் மூச்சு. பல துறைகளிலும் வளர்ந்து வளம்பெற்ற பைந்தமிழ்-பிறமொழி நுழைவால் தனித்தன்மை இழந்தது. தமிழுக்குரிய சிறப்புக்களில் ஒன்று அது தனித்தியங்கும் ஆற்றலுடைய உயர் தனிச் செம்மொழியாக விளங்குவது. இத்தன்மை மாறிக் கலப்புத் தமிழ் "மணிப்பிரவாளநடை" என்ற பெயரில் உலவத் தொடங்கியது. இக்கலப்புத் தமிழை எதிர்த்து முன்னை நாளில் நாயன்மார்களும் ஆழ்வார்களும் அண்மையில் மறைமலை அடிகளும், திரு.வி.கவும் பரிதிமாற் கலைஞரும் தனித்தமிழை வளர்த்தார்கள். "தனித்தமிழ்" உணர்வைச் சிலர், மொழிவழி அறிவின் தெளிவின்மை காரணத்தால் "மொழி வெறி" என்று குற்றம் சாட்டுகின்றனர். தமிழினத்திற்கு என்றுமே மொழிவெறி இருந்தது இல்லை. இனிமேலும் இருக்க

முடியாது. முதல் இலக்கண நூலாகிய தொல்காப்பியமே வட மொழிச் சொற்களைத் தேவைப்படும் பொழுது எடுத்தாள வழி வகை வகுத்துள்ளது. ஆனல் தமிழில் சொல் இல்லாமல்இருந்து தேவைப்பட்டாலே எடுத்துக் கொள்ளலாம். இருப்பதை இழந்து விட்டு எடுத்துக் கொள்வது தனிமனித வாழ்வில் காட்டவேண்டிய பரந்த மனப்பான்மை-விட்டுக்கொடுக்கும் கொள்கைகளைச் சமுதா யப் பொதுக் கொள்கைகளில் கையாளக்கூடாது. தனிமனித வாழ் வியல் வேறு, சமுதாய வாழ்வியல் வேறு. சமுதாயத்திற்குத் தற்காத்துக் கொள்கின்ற கொள்கை உயிர் போன்றது. மீண்டும் தமிழர்கள் தனித்தமிழிலேயே சிந்திக்கவேண்டும்; எழுதவேண்டும். தமிழ்வழி வளர்த்துள்ள நாகரீகத் துறையிலேயே நிலைபெற்று வாழ வேண்டும்.

தமிழுக்குச் சென்ற காலத்தில் சிறப்பு நிறைய உண்டு. நிகழ்காலம் மனநிறைவு உடையதில்லை என்றே நாம் கருதுகின் ருேம். இனி எதிர் காலத்தின் சிறப்புக்குத் தமிழர்கள் முயல வேண்டும். தமிழ் எங்கும்—எப்பொழுதும் இடம் பெறவேண்டும். ஆட்சியில் அருமைத் தமிழ் முழுமையும் இடம்பெற வேண்டும். தமிழ் நாடு அளவில் மட்டும் ஆட்சிமொழியாக அமைந்தால் மட்டும் போதாது. பாரதம் ஒன்று, என்றவழி தமிழர்கள் வாழ் வதானுல் பாரதத்தின் ஆட்சி மொழி இந்தியாக மட்டும் இருப்பது நீதியுமல்ல; நெறியுமல்ல. பாரதத்தின் ஆட்சி மொழியாக இந்தி யோடு இன்பத்தமிழும் மற்றைய தேசீய இன மொழிகளில் தகுதி படைத்த மொழிகளும் திகழ வேண்டும். கல்லூரிகளில் தமிழே பயிற்சி மொழியாக இருக்க வேண்டும். பயிற்சி மொழி தமி ழானுல் தமிழில் வளர்ச்சிவழி அறிவியல் வளரும். செந்தமிழ் நாடு செழிக்கும். அருளியல் முதல் அரசியல் வரை அறிவியல் உள்ளிட்டு எங்கும் தமிழே இடம் பெற வேண்டும்.

தமிழைக் காலத்தின் தேவைக்கேற்ற முறையில் வளர்க்க வேண்டும். தமிழில் அறிவியல் நூல்கள் பல வெளிவர வேண்டும்.

மற்றும் பொருளியல்—தாவரஇயல்—முதலிய எல்லாத் துறைகளிலும் தமிழில் நூல்கள் வெளிவருதல் வேண்டும். அப்பொழுது தமிழ் வளரும்; வாழும். இத் துறையில் தமிழறிஞர்கள்-ஆங்கிலம் பயின்ற தமிழறிஞர்கள் முன்னின்று பணிபுரிய வேண்டும்.

"தமிழை" இத் துறைகளில் வளர்க்கும் எண்ணத்துடனேயே "தமிழ்" மலர்கிறது. மணம் வீசுகிறது. இத் "தமிழ்" தமிழுக்குப் புதுமையூட்டும்; பொதுமைகாட்டும். தமிழை வளர்ப்பது தமிழரின் கடமை. வாழ்க தமிழ்! வளர்க தமிழ் நெறி.

மறைமலைஅடிகள் நினைவுச்சின்னம்

மறைமலை அடிகள் தம் வாழ்நாளில் தொகுத்த சுமார் 4000-க்கு மேற்பட்ட நூல்களை, தமது இறுதி உயிலில் தமிழ் மக்களின் உடையாக்கி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரிடம் ஒப்புவித்துச் சென்றார். கழகத்தார் தாங்கள் தொகுத்த நூல்களையும் சேர்த்து சென்னையில் "மறைமலையடிகள் நூல் நிலையம் என்ற பெயரில் நடத்தி வருகின்றனர்.

மறைமலை அடிகள் தமது உயிலில் பல்லாவரத்தில் சாவடித் தெருவிலுள்ள தமது மாளிகையை விற்று விற்பனைத் தொகையை தமது நான்கு புதல்வர்களுக்கும், அம்பலவாணர் வழிபாட்டிற்கும் பங்கீடு செய்ய வேண்டுமெனக் குறிப்பிட்டிருக்கிறார்.

சுமார் 30 ஆயிரம் மதிப்புள்ள இம்மாளிகையை விற்க கோர்ட் ஆணையாளர் ஏற்பாடு செய்து வருவதால் தமிழ்நாடு அரசாங்கமே அதனை வாங்கி அடிகளின் நினைவுச் சின்னமாக-மக்கள் சொத்தாக ஆக்கித் தரும்படியும் அடிகள் தொண்டிற்கு இதுவே சிறந்த கைமாறு என்றும் மறைமலை அடிகள் நூல்நிலைய நிர்வாகத்தினர் மந்திரி சுப்ரமணிய அவர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்திருக்கின்றனர்.

பாரதத்தில் படித்தவர்கள்

66-ம் பக்கத்தில் உள்ள எண்ணிக்கைபற்றித் திகைக்க வேண்டாம். படித்தவர்கள் 1000-க்கு உள்ள விகிதம் அது

இயல் நூல் வளர்ச்சி

பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரையார்

மனித இன வாழ்வில் வளமும், வள ஆர்வமும் ஊட்டுவது கலை. அதற்கு உதவுவது தொழில். மனித இன வாழ்வின் பின்னணியாகிய இயலுலகினையும் அதன் ஆற்றல்களையும் அவற்றின் தொடர்புகளையும் உணர வகை காண்பவை அறிவு நூல்கள்.

மனிதன் இயலறிவில் மூன்று இயல்பான படிகள் உண்டு. முதலது பொது அறிவு. இது சூழலாலும் இன மரபாலும் சமுதாய மொழி வாழ்வாலும் ஏற்படும் நாகரிக அறிவேயாகும். அடுத்தது பகுத்தறிவு, இது பொது அறிவின் ஒப்பீட்டால் பொய்ம்மை மெய்ம்மை வேறுபாடு கண்டு, மெய்ம்மையின் கூறுகளை நுணுகிநோக்கி, மெய்ம்மையை இயக்கும் மெய்ம்மைகளான வாய்மைகளை உணர்கிறது. மூன்ருவதுபடி மெய்யறிவு. பகுத்தறிவு நுணுகிப் பிரித்துக் கண்டதனை ஒன்றுபட வைத்துப் பரவலான முழு உண்மையை வாய்மையின் வாய்மையை உணரும் முயற்சியே அது.

பொது அறிவு வளர்பவை கலைகள், இலக்கியம். பகுத்தறிவை வளர்ப்பன இயல் நூல் துறைகள் அல்லது விஞ்ஞானம். மெய்யறிவு காண்பது மெய்விளக்கத் துறை (Philospoy) அஃதாவது தத்துவ நூல். சமயங்கள் உண்மையில் சமுதாய அரசியல் கட்டுப்பாடுகட்கு இடந் தந்துள்ள தத்துவ நூற்கோட்பாடுகளே.

இயல் நூல் மக்கள் வாழ்விலும், சமுதாய அரசியல் பொருளியல் துறைகளிலும் பேராற்றல் பெற்ற உலகை ஆட்டிப்படைத்து வருவது சென்ற நான்கு நூற்ருண்டுகளுக்குள்ளாகவேதான். இதற்குமுன் விஞ்ஞானம் இருந்ததில்லை; புத்தம் புதுவதாக அண்மையில் தோற்

றிய ஒன்றே அது என்ற எண்ணம் உலகப் பொது மக்களிடையேயும் மிகப்பல விஞ்ஞான மாணவரிடையே யும்கூட நிலவி வருகிறது. இது முற்றிலும் சரியல்ல. இயல்நூல் பலவேறு நாகரிக வகைகளிலும் படிகளிலும் பல்வேறு வடிவில் மனித இன வாழ்வில் தொன்று தொட்டு இயங்கி வருகிறது. ஒவ்வொரு நாகரிகத் தலை முறையிலும் பெறப்பட்ட இயல் நூலறிவு அடுத்த நாக ரிகத் தலைமுறையில் பெரி தும் புதிய பொது அறிவாக மாறி விடுவதாலுமே, சில சமயம் தொடர்பு மரபிழந்து நலிந்து அல்லது அழிந்து படு வதனுலுமே, நாம் அதன் தொடர்ச்சியை ஒரே தொடர் வடிவின் வளர்ச்சி யாகக் காண்பதில்லை.

சென்ற நான்கு நூற் ருண்டுகளுக்குமுன், அதா வது இயல் நூல் மேலை ஐரோப்பாவில் பரவத் தொடங்குமுன், ஆயிரம் ஆண்டுகளாக அது மைய இஸ்லாமிய அராபிய உல கின் உடைமையாய் இருந் தது. அதற்குமுன் அதாவது கி. பி. 5-ஆம் நூற்ருண்டுக்கு முற்பட்டுக் கிரேக்க நாட்டி லும்இந்தியாவிலும், விஞ்ஞா னத் துறைகள் வளம்பெற்றி ருந்தன.

நாகரிக உலகில் ஆரியர் புகுவதற்குமுன் அந்நாகரிகக் கலை எங்குமே இயல் நூலறிவு பரவி ஒளி வீசிற்று என்று கூறுகிருேம். எகிப்து, சுமேரியா என்ற பாபி லோன் அல்லது இராக், தென்னகம், சீனம் இங்கெல் லாப் பகுதிகளிலும் அறிவு நூலடிப்படையான உயர்ந் தொரு மனித இன நாகரிகம் விளங்கிவந்தது.

மனித இனத்தையும் மனித இன நாகரிகத்தையும் போலவே விஞ்ஞானமும் பிறந்த இடம் தென்கிழக் காசியாவும் அதன் மைய மான தமிழக ஈழப்பரப்புக் களேயாகலாம். முதலில் உல கிலே இரும்பு வழங்கிய பகு தியும், இலக்கியமும் இலக் கணமும் விஞ்ஞானமும் கலை களும் ஒருங்கே தொன்று தொட்டு வளர்ந்து வரும் பகுதியும், சர்க்கரை, அரிசி, நன்செய் புன்செய்ப் பயிர்த் தொழில், இராட்டைக் கைத் தறிகளின் நூற்பு நெசவுத் தொழில்கள், கப்பல் தொழில் ஆகியவை மிகப் பழங்காலத்திலேயே வளர்ந்த பகுதியும் தென் னகமேயாகும் என்று கருத இடமுண்டு.

தென் திராவிட இனத்

தின் ஒரு பெருங் கிளையாகிய நாகருக்கும் விஞ்ஞானம், நாகரிகம் ஆகியவற்றுக்கும் உள்ள தொடர்பை 'நாகரிகம்' என்ற சொல்லே காட்டும். நாகர் பிற்காலக் குற வரைப்போல மலைவாணர். பிறதிணைகளில் வில்லிகள் மறவர் (பாலை), வேளாளர் (மருதம்), குறும்பர், ஆயர் (முல்லை), திரையர், மீனவர் (நெய்தல்) ஆகியவர் நாகரைப் போலத் திராவிட இனத்தின் பிற கிளைகள் ஆவர். ஆரிய இனம் என்று வரலாற்றாசிரியர் குறிக்கும் இனம் உண்மையில் வேளாளரின் ஒரு வடகோடிக் கிளை மட்டுமே. தெற்கு வேளாளர் பிற திராவிட இனக் கிளைகளுடன் நாகரிகப்பட்ட பின்னும் இவ்வடகோடி வேளாளர் நாடோடிகளாய்ப் பனிக் காடுகளில் சுற்றித் திரிந்து கி. மு. 1500-க்குள் உடல் வலுவிலும் குழுவாற்றலிலும் மேம்பட்டு மீண்டும் தம் இன நாகரிகக் கிளைகளின்மோதி அவர்கள் நாகரிகத்ததைச் சிலவிடங்களில் அழித்தும் சிலவிடங்களில் மேற்கொண்டும் சிலவிடங்களில் வளர்த்தும் நம்கால மனித இன நாகரிக நிலைக்குக் காரணம் ஆனார்கள். விஞ்ஞானம் உலகில் பழமை மிக்கதானாலும் ஆரியர் கலந்த மனித இன நாகரிகத்தில் சென்ற நானூறு ஆண்டுகளுக்குள்ளே தான் வளரத் தொடங்கியுள்ளது.

விஞ்ஞானம் மிகத் தொடக்கக் காலத்தில் நாகரிடையே தனி மனிதர் விஞ்ஞான அறிவாகவும், ஆற்றல் சான்ற ஆட்சியாளர் சிலர் மூலம் இன்ப வாழ்வுக்குரிய துணையாகவும் விளங்கிற்று. நாகரிகம் என்ற சொல்லுக்கு இன்றும் இன்பவாழ்வு என்ற பொருள் ஏற்படுவதற்குக் காரணம் கட்டற்ற விஞ்ஞான இன்ப வாழ்வு வாழ்ந்த நாகர்களேயாவர். தற்காலத் தென்கிழக்காசியாவில் அடிப்படை இனம் இந்த நாகர் இனமே.

பண்டை நாகரும் தமிழரும் மொழியால் ஒன்றுபட்டவர். பண்பால் வேறுபட்டவர். கட்டற்ற இன்ப வாழ்வுக்கு மாறாகக் கட்டுப்பாடுகள் கொண்ட பண்பார்ந்த வாழ்வைத் தமிழர் பேணினர். விஞ்ஞான அறிவை அவர்கள் பொது நலம், குடிசைத் தொழில் நலம் ஆகிய இரண்டுக்குள் மட்டும் வைத்து வரையறுத்தனர். நாகர்களின் பகட்டான புறநாகரிகம் தாண்

டித் தமிழரின் அகப்பண்பார்ந்த நாகரிகம்ஆயிரக் கணக்கான ஆண்டுகள் பரவியதன் காரணம் இதுவே. தவிர, புத்த சமண சமயங்கள் நாகரிடையே தோன்றி, அவர்கள் விஞ்ஞான அறிவை இவ்வுலக வாழ்வுத் தொடர்பிலிருந்து அகற்றி அவ்வுலகம் நோக்கிய அகநிலை (ஆன்மிக) அறிவாக மாற்றிவிட்டது. கட்டுற்ற தமிழர் சித்தாந்தங்களுடன் கட்டற்ற வேதாந்தமாக வளர்ந்து இணைந்து அந்த அறிவு இன்று 'இந்து சமய'க் கதம்பமாக இயங்குகிறது.

திரையரின் கிளைகளாகிய பிளிசியரும் கிரீசிலும் இத்தாலியிலும் ஸ்பெயினிலும் பிரான்சு பிரிட்டனிலும் ஆரியர் வருகைக்கு முன் வாழ்ந்த பிற திரையர் இனப் பிரிவினரும் நாகரது விஞ்ஞான அறிவைக் கடல் வாழ்வு, வாணிகம் ஆகியவற்றுக்கு மட்டுமே பயன்படுத்தினர்.

கிரேக்கரிடையிலும் இடைக்கால சமஸ்கிருத ஆரியரிடையிலும் விஞ்ஞானம் வாழ்க்கையுடனொட்டாத கோட்பாட்டறிவாகவே வளர்ந்தது. விஞ்ஞானத் துறையில் இருவர் அறிவும் மிகப் பெரிதானாலும், அது மேலை விஞ்ஞானத்துக்கு வழி வகுத்ததேயன்றி அந்நாளைய வாழ்வில் ஒரு சிறிதும் தொடர்பு கொள்ளாமல் போனதன் காரணம் இதுவே. ஆயினும் சமஸ்கிருத இந்தியாவில் விஞ்ஞானம் சமயத்துடன் மோதவில்லை. கிரீசிலோ அது சமயத்துடன் மோதத் தொடங்கிவிட்டது.

கிறித்தவ சமயம் மேலை உலகில் பரவியதுடன் விஞ்ஞானம் பரவாமல் ஒடுங்கிவிட்டது. ஆனால், இஸ்லாமிய உலகில் விஞ்ஞானம் மீண்டும் புது வளர்ச்சி பெற்றது, நாகர்களைப் போல முற்றிலும் தனி மனிதன் இன்ப வாழ்வுக்கோ, தமிழர், திரையர் போல முற்றிலும் தொழில் வாணிகத்துக்கோ இஸ்லாமியர் விஞ்ஞானத்தைப் பயன்படுத்தவில்லை. ஆனால், கிரேக்கரைப் போலப் பொது அறிவை வளர்ப்பதற்கும், புதிய முறையில் தனிமனித வாழ்வில் அரும்பொருள்கள், அருமருந்துகள், வாழ்க்கைமுறைகள் (இன்ப வாழ்வுக் கருவிகள்) அமைப்பதற்கும் அதைப் பயன்படுத்தினர்.

கி. பி. 16-ஆம் நூற்றுண்டுக்குள் மேலையுலகுக்கு விஞ்ஞானத் துறையின் கோட்

பாட்டறிவு அராபிய இஸ்லாமியரிடமிருந்தும், தொழிலறிவும் பிற வளங்களும் தென்னக மக்களிடமிருந்தும் சென்று ஒன்றுபட்டன. தற்கால விஞ்ஞானம் முதலாளித்துவ விஞ்ஞானமாகப் புதுவளம் பெற்றது இவ்வகையிலேயே. சமயமும் மாந்தரீகமும் முற்கால மக்களை ஆட்டிப் படைப்பதை விட மிகுதியாக இன்று விஞ்ஞானம் மனித இனத்தை ஆட்டிப் படைக்கிறது. நாகர் விஞ்ஞானம்போல இன்ப வாழ்வுக்கு அது பயன்படுகிறது. தமிழர், திரையர் விஞ்ஞானம் போல அது வாணிகத் தொழில் துறைகளுக்கு உதவுகிறது. ஆனால் முன் என்றுமில்லா வகையில் அது மனித இனத்தைச் சுரண்டி ஆதாயம் பெறும் முதலாளி வகுப்பிற்கும்; அடக்கியாளும் ஏகாதிபத்தியங்களுக்கும் உரிய வேட்டைக் கருவியாகியுள்ளது.

சுதந்திரம், குடியாட்சி, சமதருமம் முதலிய வானளாவிய தத்துவங்கள் முதலாளித்துவ விஞ்ஞானத்தின் கோர, ஆட்சிமீது பூசப்படும் அழகுச் சாயங்களேயன்றி வேறல்ல. ஏனெனில் விஞ்ஞானம் உண்மைச் சுதந்தரத்தைப் பணக்காரர், வல்லடிக்காரர் சுதந்திரமாகவும்; உரிமைப் பாதுகாப்பை அவர்கள் பாதுகாப்பாகவும் மாற்றியுள்ளது.

விஞ்ஞானம் மட்டுமன்றி ஒருவர் அறிவுத் துறைகளும் கலைகளும் கல்வியும் இன்று விஞ்ஞான முதலாளித்துவ ஆட்சிக்கு அடிமைப்பட்ட அறிஞர்கள் கையிலேயேயுள்ளன. அறிஞர் கார்ல்மார்க்ஸ் இதனைக் கண்டு சுட்டியுள்ளார். ஆனால், அந்த விஞ்ஞான ஆட்சியைத் தொழிலாளர் கைப்பற்றப் 'புரட்சி'யன்றி வேறு வழி அவர் காட்டவில்லை. அவர் புரட்சி அறிவுப் புரட்சியன்று, அரசியற் புரட்சி ஆகும். அத்துடன் முதலாளித்துவம் தானே அழிவது என்ற உண்மையையும் அவர் கூறிப்போந்துள்ளார்.

பண்புப் புரட்சியால் இந்நிலை எய்த முடியும் என்று காந்தியடிகள் நம்பினார். ஆனால், அந்த நம்பிக்கை உலகில் பரவவில்லை. அவரும் அதற்கான திட்டமிட முனையவில்லை. ஏனெனில் விஞ்ஞானத்தில் அவர் கருத்துச் செலுத்தவேயில்லை.

பண்பு அறிவுப் புரட்சிகளால் நாகரின் கட்டற்ற விஞ

ஞானக் கேடுகளை அகற்ற எழுந்த பண்பே தமிழுலகில் தமிழினம் கண்ட பண்பு. அதனை வகுத்துரைத்தவர் வள்ளுவர். முப்பால் ஓர் ஒழுக்க நூலோ, சமய நூலோ வாழ்க்கை நூலோ மட்டும்கூட அல்ல, விஞ்ஞானத்தையும் கலையையும் மக்கள் வாழ்க்கையுடனிணைத்து ஒருமித்த வளர்ச்சி காண்பதற்குரிய ஒரு முறையே முப்பால் முறை.

வள்ளுவத்தின் முப்பால் அடிப்படையாக, ஒரு புதிய வாழ்க்கைத் தத்துவம், புதிய சமய தத்துவம், புதியபொருளியல் தத்துவம், புதிய விஞ்ஞான முறை ஆகியவற்றைக் கண்டு அறிஞரனைவரும் 'நம் இடைக்கால மனித நாகரிகத்துக்கு' ஒரு முட்டுக்கட்டைப் புதிய நாகரிகம் தோற்றுவிக்கத் தமிழினம், தமிழின அறிஞர் முயல்வார்களாக.

வருங்கால உலக வளம் வருங்கால விஞ்ஞான வளர்ச்சி ஆகியவற்றின் பொறுப்புஇனித் தமிழகத்தினுடையதே. தமிழர் வாளா இருப்பின் உலகழிந்து உலகுடன் தமிழரும் அழிய நேரிடும். தமிழர் புத்தெழுச்சி இதைத் தடுப்பதுடன் நில்லாது உலகில் ஒரு பொங்குமா வளம் பரப்பும் அரும்பயன் பெறுவர்.

பர்மாவில் பரதநாட்டிய அரங்கேற்று விழா

18-6-61 ஞாயிற்றுக் கிழமை மாலை 4 மணி அளவில் இரங்கூன் காந்தியார் நினைவு மண்டபத்தில் இந்தியத் தூதுவராலய கான்சுலர் பகுதி முதற் செயலாளர் திரு F.S.தேவார் SA IFS அவர்கள் தலைமையிலும், அகில பர்மா தமிழர் சங்கத் தலைவர் திரு. எஸ். இலட்சுமணன் அவர்கள் முன்னிலையிலும் —சக்குப்பாய் அங்குத்துரை அவர்களின் புதல்வி, செல்வி முகவை மதிவாணியின் அரங்கேற்றம் சிறப்புற நடை பெற்றது.

கடல் கடந்து வாழும் நம் தமிழ்க் குடும்பத்தின் ஆடற்கலை-அரங்கேற்றத்தை நாமும் உளமார வாழ்த்துகிறோம். செல்வியின் கலை ஆர்வம் வாழ்க! வளர்க!





கொடி அசைந்ததும் காற்று வந்ததா?
காற்று வந்ததும் கொடி அசைந்ததா?
நிலவு வந்ததும் மலர் மலர்ந்ததா?
மலர் மலர்ந்ததும் நிலவு வந்ததா?
பாடல் வந்ததும் தாளம் வந்ததா?
தாளம் வந்ததும் பாடல் வந்ததா?
பாவம் வந்ததும் ராகம் வந்ததா?
ராகம் வந்ததும் பாவம் வந்ததா?
கண் திறந்ததும் காட்சி வந்ததா?
காட்சி வந்ததும் கண் திறந்ததா?
பருவம் வந்ததும் ஆசை வந்ததா?
ஆசை வந்ததும் பருவம் வந்ததா?
வார்த்தை வந்ததும் வாய் திறந்ததா?
வாய் திறந்ததும் வார்த்தை வந்ததா?
பெண்மை என்பதால் நாணம் வந்ததா?
நாணம் வந்ததால் பெண்மை ஆனதா?

கவிஞர் கண்ணதாசன்

தமிழருவி

அமுதம் பிறந்த கடல்குடித்த-குள்ள
அகத்திய முனிவன் பொதிகையிலே
குமுதம் மலர நிலவெழவே-தென்றற்
கூடப் பிறந்த தமிழருவி!

பஞ்ச காவியம் ஐந்தருவி!-வள்ளுவன்
படைத்த திருக்குறள் பாலருவி!
விஞ்சும் கம்பனின் தேனருவி!-பாரதி
வீர சுதந்திரத் தமிழருவி!

குலாபக் கண்சூழ் வெண்மை யென-நுரையைக்
காட்டிச் சிரிக்கும் கலையருவி
உலாவும் கொண்டல் முத்தணிந்து-என்றன்
உடலுயி ரான தமிழருவி!

புதிய கனவாம் குமிழ்மகவை-மென்அலை
புரளத் தலாட்டும் அனை அருவி!
கதியில் மீன், புலி, விற்சரமாய்க்-காலக்
கதைசொலிப் பாடும் தமிழருவி!

மகாகவி கம்பதாசன்

வாழும் கவிஞன்

வரலாறு எல்லாருடைய செயலையும், ஆற்றலையும், திறமையையும், புகழையும் தன் இதயத்திலே வைத்துப் பாதுகாத்துக் கொண்டிருப்பதில்லை - மாவீரர்கள், வாரி வழங்கிய வள்ளல்கள், செயற்கரியசெயல் புரிந்த பெருந்தகைகள், மக்கள் இலக்கியம் படைத்தவர்கள் இவர்களைமட்டுமே வரலாறு தன் மடியிலே சுமந்து தாலாட்டி என்றும் புகழ் பாடிக் கொண்டிருக்கிறது. அதிலும் சிலர் வரலாற்று ஏடுகளோடு சரி-சரித்திர நூல்களில் இடம் பிடித்துக்கொள்வதோடு சரி-மேடைப் பேச்சாளர்களின் நாவன்மையின் நளினங்களோடு சரி-ஆளுவோர் விழாக்களோடு நின்றுவிடுவார்கள். பளிங்குக் கற்களில் நினைவுச் சின்னங்களாக உருவம்பெற்று விடுவதோடு சில முற்றுப் பெறும். ஆனால், எல்லாக் காலங்களிலும் வழி வழி வரும் சந்ததிகளின் இதயங்களிலும் ஒளி விட்டுப்பிரகாசிக்கவும் — அவர்கள் வழிபட்டு வணங்கி வழிகாட்டியாக ஏற்றுக் கொள்ளவும்-விழி நிறைந்துவிழாக் கொண்டாடவுமான மக்கள்-அன்பிற்குரியவகளான தலைவர்கள் - கவிஞர்கள் விரல்விட்டுச் சொல்லக்கூடிய சிலர்தான். அவர்களில் முதன்மையானவர் — **ரவீந்திரநாத தாகூர்.**



பிஞ்சு வயதிலேயே இலக்கணப் பிழையின்றிக் கவிதை

தாகூர்

புனைவதில் திறமை பெற்றிருந்தார். தினசரி வங்கத்திலேயுள்ள மலையடி வாரங்களுக்குச் சென்று, தான் இயற்றிய கவிதைகளை இசை கலந்து எதிரொலிக்கப் பாடுவாராம்- இதனால் இயற்கை அன்னையின் செவிகளில் தனது இசை தினசரி ஒலித்துக்கொண்டிருப்பதாகச் சொல்லிப் பெருமைப்படுவாராம்.

கால வளர்ச்சியில் தாகூருடைய கவிதைகளில் புதிய சக்தி பிறந்தது. உணர்ச்சிகள் பொங்கி வழிந்தன. வெறும் மலர்களையும், அருவிகளையும், அடவிகளையும், வானையும், நிலவையும் — இயற்கையின் கோலத்தையும் பாடிக்கொண்டிராமல், ஒண்டியிருக்கக் குடிசையின்றி வீதிகளில் சுருண்டு கிடப்போரின் துயர்பற்றிப் பாடினார். இதற்கு எவர் காரணம்? அவர் துயர்துடைக்கவழி என்னஎன்பதற்கு வகை கூறினார். சமுதாயத்தில் நடமாடும் அறியாமைப் பேய்களைச் சாடினார்—

“பாடுபடுவோர் வீட்டில்
பசிப்பேயின் திமிராட்டம்,
கூடுவிட்டு வந்தபுள்
கொண்டாட்டம் போடுதல்
போல்
தேடிவந்து கொல்லுகின்ற
சிக்கு, நோய் நொடிகள்,
ஏடுதனைத் தொட்டறியா
எழுத்தறியா அறியாமை,
மூடப்பழக்கங்கள்......இப்படிக்

குமுறுகிறார்— இப்படியே அவர் $1\frac{1}{2}$ லெட்சம் வரிகள் கவிதைகளாகவும் இதைப்போல மூன்றுமடங்கு வசனங்களாகவும் எழுதியுள்ளார். தாகூருடைய கவிதையில் பொங்கி வரும் காட்டாற்று வெள்ளத்தின் வேகத்தைக் காணமுடியும். ரஷ்யாவில் கவிஞருடைய கவிதைகளுக்கு பெருத்த வரவேற்பிருந்தது. எழுச்சிமிக்க கவிதைகளைப் புனைந்தமா கவிஞனைக் காண சோவியத் மக்கள் பெரிதும் விரும்பினர். அழைப்பிற்கிணங்கத் தாகூர் ரஷ்யா சென்றார், மக்கள் அவருக்குப் பல பட்டங்களை வழங்கிச் சிறப்பித்தனர்.

தாகூர் கவிஞர் மட்டுமல்ல. தெளிந்த சிந்தனையுள்ள அரசியல்வாதியுமாவார். மாகாத்மா காந்தி பல இக்கட்டான சமயங்களில் தாகூரின் யோசனைகளைக் கேட்டு அதன்படி நடந்து கொள்ளுவாராம். தாகூர் மக்கள் கவிஞர், தத்துவஞானி, தெளிந்த அரசியல்வாதி நோபல் பரிசு பெற்ற முதல் இந்தியக் கவிஞர்.

தாகூரின் நூறுவது ஆண்டு பிறந்த தின விழாவை ஒட்டி இந்திய அரசு அஞ்சல் தலைகளில் தாகூரின் உருவம் பொறித்து வெளியிட்டுச் சிறப்பித்தனர். இந்தப் பெருமையெல்லாம் விட, தாகூர் மக்கள் கவிஞர்-வாழும் கவிஞர் என்பதில்தான் புகழ்! பெருமை!

கென்னிவர்ஸ்டான்

பிரடிரிக்வான் பல ஊர்களைச் சுற்றிவிட்டுக் கடைசியாக அம்ஸ்டர்டாமுக்கு வந்து சேர்ந்தான். டச்சுப் பிரதேசமான அம்ஸ்டர்டாம் பெரிய நகரம். அங்கு பெரிய பெரிய கப்பல் வியாரிகள் இருந்தார்கள். அவர்களுடைய வீடுகள் மன்னர்களின் மாளிகைகளைப் போலிருக்கும். ஒவ்வொரு வியாபாரியிடமும் நூற்றுக்கணக்கானவர்கள் வேலை செய்து வந்தார்கள்.

பிரடிரிக்வான் மிகவும் ஏழை. அவன் தான் ஏழையாக இருப்பதைக் குறித்து வருந்தாத நாளே இல்லை எனலாம். தன் ஏழ்மையைப் போக்கவே அவன் பல ஊர்களுக்குச் சென்ருன். எந்த ஊரிலும் அவன் ஏழ்மையைப் போக்கவோ, அவனுடைய எண்ணத்தை மாற்றவோ ஏதும் உதவவில்லை. அவன் அம்ஸ்டர்டாம் வந்ததும் அந்த ஊருக்கு வரவேண்டும் என்ற எண்ணத்துடனில்லை. வழி தவறி எங்கேயோ போக வேண்டியவன் அந்த ஊருக்கு வந்து சேர்ந்தான்.

நகரத்திலுள்ள ஒவ்வொரு வீட்டையும் பிரடிரிக்வான் பார்த்துக்கொண்டே நடந்தான். ஒரு பெரிய தெருவில் கிட்டத்தட்ட மன்னரின் மாளிகையைப் போன்ற ஒரு பெரிய வீட்டைக் கண்டான். அந்த வீட்டின் சுவர்கள் வெள்ளைச் சலவைக்கற்களால் கட்டப்பட்டிருந்தன. வாயில் கதவு கருப்பு மரத்தால் செய்யப்பட்டு, தங்கத் தகடுகள் வேய்ந்து அதில் நல்ல ரத்னக் கற்கள் பதிக்கப்பட்டிருந்தன. வெளியில் நின்றிருந்த காவல்காரன் ஒரு சிற்றரசனைப் போல் உடை உடுத்திருந்தான். வீட்டின் முன்ஞல் பல கோச் வண்டிகள் நிறுத்

ஜெர்மானியக் கதை

தமிழாக்கம்: வி. எஸ். வெங்கடேசன்

தப்பட்டிருந்தன. ஒவ்வொரு வண்டியும் ஒன்றைவிட ஒன்று சிறந்ததாக இருந்தது. பலர் வீட்டினுள் செல்வதும் திரும்பி வருவதுமாக இருந் தார்கள். அவர்களில் ஒருவன் கூட சாதாரண உடை உடுத் திருக்கவில்லை.

பிரடிரிக்வான் அந்த வீட் டின் முன் நின்று வெகுநேரம் வரை பார்த்துக்கொண்டிருந் தான். அவ்வளவு பெரிய அழ கான வீடு யாருடையது என் பதை அறிய அதிக ஆவல் ஏற்பட்டது. அந்த வழியாகச் சென்ற ஒருவரிடம், "ஐயா இந்த அழகான வீடு யாரு டையது?" என்று ஜெர்மன் மொழியில் கேட்டான். அவனோ டச்சுக்காரன், அவ னுக்கு ஜெர்மன் மொழி தெரி யாது. அதனால் அவன் டச்சு மொழியிலேயே, "கென்னி வர்ஸ்டான்" (நீங்கள் சொல் வது புரியவில்லை) என்று சொன்னான்.

பிரடிரிக்வானுக்கு டச்சு மொழி தெரியாது. அதனால் அவன் அந்த வீட்டின் சொந் தக்காரனுடைய பெயர், 'கென்னிவர்ஸ்டான்' என்று தீர்மானித்துக் கொண்டான். மேலும் கென்னிவர்ஸ்டான் பெரிய பணக்காரனாக இருக்க வேண்டும் என்றுஎண்ணினான். அவன்அந்த எண்ணத்துடனே யே பல தெருக்களைக் கடந்து கப்பல் துறைமுகத்திற்கு வந்து சேர்ந்தான். துறை முகத்தில் பல கப்பல்கள் வந்து நின்று கொண்டிருந் தன. அவற்றில் பல கப்பல்கள் கிழக்கிந்தியத் தீவுகளுக்குச் சென்று விலை உயர்ந்த பொருள்களை ஏற்றிக் கொண்டு வந்திருந்தன. அந்தக் கப்பல்களிலிருந்து சாமான்களை இறக்கிப் பல வண்டிகளில் ஏற்றிக்கொண் டிருந்தார்கள். இதைக் கண்ட பிரடிரிக்கிற்கு அந்தக் கப்பல் கள் யாருடையவை என்று அறிந்து கொள்ள ஆவல் ஏற் பட்டது. துறைமுகத்தி லிருந்த ஒரு அதிகாரியிடம் சென்று குனிந்து வந்தனம் செய்தான். மிகவும் பணி வுடன், "இப்போது சாமான் களை இறக்குகின்றார்களே அந்தக் கப்பல்கள் யாருடை யவை?" என்று ஜெர்மன் மொழியில் கேட்டான்.

அந்த அதிகாரிக்கு ஜெர்மன் மொழி தெரியாது. அதனால்

அவர் டச்சு மொழியில், "கென்னிவர்ஸ்டான்" என்ருர். உடனே பிரடிரிக்வான் 'ஆகா இவ்வளவு கப்பல்கள் இருந்தால் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது? அவன் வீடு இதையும்விடப் பெரிய தாக இருக்கலாம். கதவு மாத்திரம் என்ன? சுவர் களில்கூட தங்கத் தகடுகள் அடித்து நவரத்னக் கற்களைப் பதிக்கலாம்' ஏன்று எண்ணி ஞன். உடனே அவனுக்கு மற்ருெரு எண்ணமும் உண் டாயிற்று. 'தானும் என்ரு வது ஒருநாள் கென்னிவர்ஸ் டானைப் போலப் பெரிய பணக்காரனுகலாம்' என்று எண்ணினன்.

அன்று அதற்கு மேல் அவன் எங்கும் போகவில்லை. ஒரு ஓட்டலில் சாப்பிட்டு அங்கேயே தங்கிவிட்டான். மறுநாள் காலை ஓட்டலிலி ருந்து புறப்பட்டு ஒரு பெரிய தெருவிற்கு வந்தான். அங்கு நூற்றுக் கணக்கானவர்கள் தலைகவிழ்ந்து கொண்டு வர, நால்வர் ஒரு சவப்பெட்டி யைத் தூக்கி வந்தார்கள். ஆடம்பரமான உடை உடுத் திய அவர்களைக் கண்டதும் பிரடிரிக்கிற்கு இறந்துபோன வர் பெரிய பணக்காரராக வும், சிறந்தவராகவும் இருக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. அதே சமயம் அவர் யார் என்பதை அறிய ஆவலும் உண்டாயிற்று. அத ஞல் அவன் சவத்துடன் செல் லும் ஒருவரிடம் பயத்துட னும் பணிவுடனும், "இறந் தவர் யார்?" என்று கேட் டான்.

ஜெர்மன் மொழி தெரி யாத அவர் "கென்னிவர்ஸ் டான்" என்று சொல்லிவிட்டு சவத்துடன் சென்ருர்.

பிரடிரிக்வானிற்குவருத்தம் தாங்கவில்லை. அத்துடன் அவன் மனத்துயரமும் வில கிற்று. 'பாவம் கென்னி வர்ஸ்டான். எவ்வளவு பணம் இருந்து என்ன பயன்? எத்த

---

100 வயதைத் தாண்டிய 450 கிழவர்கள்

சோவியத் ரஷ்யாவைச் சேர்ந்த துர்மினியா ராஜ்யத் தில் நூறு வயதிற்கு மேற் பட்டவர்கள் சுமார் 450 பேர் இருக்கிருர்களாம்.

ஒருலட்சம் பேருக்கு 33 நபர்கள் என்ற விகிதத்தில் இந்தக் கிழவர்கள் வாழ் கின்றனர்.

ஜேயோ கப்பல்கள் ஏழு கடல் களைக் கடந்து சென்று வாணிபம் செய்தும் என்ன பயன்? தங்கத் தகடு வேய்ந்து, நவரத்னக்கற்கள் பதித்த கதவும் சலவைக் கல் மாளிகையும், நூற்றுக்கணக்கான வேலைக் காரர்களும், இருந்துதான் என்ன பயன்?' என்று நினைத்தான். அவனுக்கு அவ்வளவு பெரிய பணக்காரனுடைய சவ அடக்கத்திற்குச் சென்று வரவேண்டும் என்ற ஆவலும் ஏற்பட்டது. அவனும் அவ ருடன் சென்றான். கடைசியாகச் சவ அடக்கம் செய்யும் இடமும் வந்தது. அங்கு ஒரு சிறு குழி வெட்டியிருந்தார்கள். சவ அடக்கத்திற்கு வந்தவர்களில் ஒருவன்கூட ஒரு வார்த்தையும் பேசவில்லை. மௌனமாக சவப் பெட்டியைக் குழியில் போட்டுப் புதைத்தார்கள். எல்லோரும் மௌனமாக அங்கிருந்து சென்றார்கள்.

பிரடிரிக்வான் அங்கேயே வெகுநேரம் நின்றிருந்தான். அங்கிருந்து புறப்பட்டு ஒரு ஜெர்மானியரின் ஓட்டலுக்கு வந்தான். அங்கு வயிறுரச் சாப்பிட்டான். பிறகு அந்த ஊரிலிருக்க அவனுக்கு விருப்பம் இருக்கவில்லை. அவன் அன்றே அங்கிருந்து புறப்பட்டான். அதன் பிறகு அவன் தான் ஏழையாக இருப்பதைக் குறித்து வருத்தப் பட்டதே இல்லை. எப்போதாவது மனம் கலங்கினல் உடனே அவன் அம்ஸ்டர் டாமில் கண்ட கென்னிவர்ஸ் டானையே நினைத்துக்கொள் வான். அவனுடைய பெரிய மாளிகை, பல கப்பல்கள், சிறிய சவக்குழி ஆகியவற்றை எண்ணி மனத்தைத் தேற்றிக் கொண்டுவிடுவான்.

கம்பெனிகளின் லாபம்

பர்மா ஆயில் கம்பெனி

1959-ஆம் ஆண்டில் வரி செலுத்திய பிறகு பர்மா ஆயில் கம்பெனிக்குக் கிடைத்த நிகர லாபம் 88, 99, 947 பவுன்கள்.

1960ம் ஆண்டில் வரி செலுத்திய பிறகு கிடைத்த நிகர லாபம் 92, 35, 798 பவுன்கள்.

இது 1959-ஆம் ஆண்டில் கிடைத்த நிகர லாபத்தை விட 3, 35, 851 பவுன்கள் அதிகம்.

மங்காய் !

மங்காய் மங்காய் மடமங்காய் !
மருவாக் காதல் வெறுஞ்செங்காய் !
நங்காய் வாய்க்கு நுங்காவாய்
நானுன் வாழ்வில் பங்கேற்பேன்
எங்கே ! காதற் பசிதீர்க்க
இதழைத் தந்தால் போதுமடீ
செங்கால் நாரைக் காலெனவே
செவ்வா னொளிரும் நேரமலோ !

நெஞ்சில் மாங்கனி கொண்டவளே
நெருப்பின் சிவப்பை என்கண்ணில்
கொஞ்சம் ஏற்ற உதவிடுவாய்
குளிர்வெண் மதியைப் போன்றவளே
கெஞ்சிக் கேட்டும் அஞ்சுகமே
கேள்விக் குறிபோல் நிற்கின்றாய்
அஞ்சிற் கிடைக்கா தெச்சுகமும்
அன்பே விரைந்து தழுவிடடீ !

● ம. முகமதுமைதீன் ●

● எந்தப் பதவியும் வகிக்காத ஒருவரின் கரங்களை மிகப் பெரும் பதவிகளை வகிப்பவர்களும்—அயல் நாட்டுத் தூதுவர்களும் குலுக்குகிறார்கள் என்று பெருமிதத்தோடு சொல்லிக் கொண்டிருக்கும் சோவியத் வலராற்றுக்குச் சொந்தக்காரன்.

●● அவன் வானத்தில் வட்டமிட்டுக் கொண்டிருந்த பொழுது அவன் உள்ளத்தில் வட்டமிட்டுக் கொண்டிருந்த இரண்டாவது செல்வம்-லேனா.

யூரிககாரினும்-குழந்தை லேனாவும்

யூரி ககாரின்

'அம்புலியைப் பிடித்துத் தருகிறேன் சாப்பிடம்மா சாப்பிடு' என்று வேடிக்கை காட்டி, அழும் குழந்தைக்கு, அமுதூட்டுவர் தாய்மார்கள். 'நிலவைப் பிடித்துத்தா' என அடம்பிடித்தழுத இளம்பிஞ்சுக்கு அதைக் கண்ணாடி மூலம் காட்டிக் களிப்பூட்டியதாகக் கதையுண்டு இங்கே. சந்திர மண்டலம்-சூரிய மண்டலம் என்று பல மண்டலங்கள் வானுகில் இருப்பதாகவும் அங்கே தேவர்கள் தவிர வேறு யாரும் செல்ல இயலா தென்றும்-சந்திரனையும் -சூரியனையும் ஆண்டுக்கொருமுறை பாம்பு கவ்வி விடுவதாகவும் கற்பனைக் கதையுண்டு நம்மிடத்தில். வானுலகம்-வான வெளிஎன்றால் என்ன? அங்கே என்ன இருக்கிறது! கடல், நதி, தரை, பயிர், பசுமை, உயிர், வெம்மை, குளுமை, வேறு ஜீவன், அணுக்கள் ஏதேனும் வாழுகின்றனவா ?-தினம் பொழுது விடிகிறது-கதிரின் ஒளிப் பரப்புக்கள்—மதியம், மாலை, இருள்—வான வெளியில் ஓர்மாற்றம்-நட்சத்திரக் கூட்டம், நிலவு, விடிவெள்ளி-படுக்கையில் விழுந்து கிடந்தவர்கள், பகலவன் ஒளி கண்டு விழித்தெழுகிறோம்-வேலை தொடர்கிறது. உலகில் இந்த வேடிக்கை தினம் நடந்துகொண்டே இருக்கிறது.

வானவெளியில் இந்த மாற்றங்களைத் தினசரி இயற்கை ஒழுங்காகச் செய்து வருகிறது. இது நமக்குப் பெரும் ஆச்சரியம்தான். இந்த மாற்றங்களுக்கான காரணங்களை நாம் தெளிவாகப் படித்திருக்கிறோம். ஆனால், நாமும் வான வெளிக்குப் போகமுடியுமா?-சந்திரனை அருகிலிருந்து

பார்க்க இயலுமா?-இந்த எண்ணங்கள்—சிந்தனைகள் நமக்குத் தோன்றியதே இல்லை.

நிலாவைப் பார்க்கும் பொழுது-அதை விளையாட்டுப் பொருளாக்கிக் காட்டி மழலைக்குச் சோறூட்டவும்-அதன் ஒளியில் நிலாச்சோறு சாப்பிட்டு மகிழவும்—வான வெளிக்கு நாம் போக இயலாதென்று கற்பனை செய்து கொண்டு - வானவெளிக்கு இதிகாச காரணங்களைக் காட்டி அங்கே நாம் போக எண்ணுவதே அதன் புனிதத் தன்மைக்கு மாசு ஏற்படுத்துவதாகும் எனச் சபித்து, இது போதும் என்று சிந்தனைகளுக்கு வரம்பு கட்டிக்கொண்டவர்கள் இந்திய மண்ணில் ஏராளம்! ஏராளம் !!

இங்கிருந்து ஏழாயிரம், எண்ணூறு பிரம் கல் தொலைவிற்கு அப்பாலே இருந்து, தினம் நமக்குப் புதிய புதிய செய்திகள் கிடைத்த வண்ணமிருக்கின்றன. சந்திர மண்டலத்திற்குப்போக ஆராய்ச்சி நடக்கிறது-இன்று விஞ்ஞானிகளால் பரிசோதித்துப் பார்க்கப்பட்ட ராக்கெட் சந்திரனைச் சுற்றிக்கொண்டிருக்கிறது. இன்னும் மூன்று நாட்களில் அது குறித்த இடத்திற்குத் திரும்பும்—மறுநாள்-சந்திரமண்டலத்திற்கு இரண்டு குரங்குகள் வைத்து அனுப்பப்பட்டன. அவை உயிரோடு திரும்பி வந்துள்ளன—அதற்கும் மறுநாள் மனிதன் சந்திர மண்டலத்திற்குச் சென்று எந்தவிதமான ஆபத்தும் இல்லாமல் பூமிக்குத் திரும்பியுள்ளான். இதுவரை நாம் சந்திரனின் ஒரு பகுதியை மட்டும் பார்த்துக்கொண்டிருந்தோம். சந்திரமண்டலத்திற்குச் சென்று திரும்பிய மனிதன் அதன் மறு பகுதியையும் படம் பிடித்துக்கொண்டு வந்திருக்கிறான். அதன்மீது ஆராய்ச்சி நடந்து கொண்டிருக்கிறது—இப்படி பரபரப்பான செய்திகள்-ஆதாரபூர்வமான விளக்கப் படங்களுடன் சோவியத் நாட்டிலிருந்தும் - அமெரிக்க மண்ணிலிருந்தும் வெளியாகி நம்மையெல்லாம் வியப்பில் ஆழ்த்திக்கொண்டிருக்கின்றன.

இந்தச் செய்திகளையெல்லாம் சாதாரணமாக்கிக் காட்

டிடவல்ல ஒரு செய்தி-பெருஞ் சாதனை இரண்டு திங்களுக்கு முன்னால் சோவியத் நாட்டில் நிகழ்ந்திருக்கிறது. நாம் எங்கே போக இயலாது-அப்படி நினைப்பதே தவறு என்று கருதிக் கொண்டிருந்தோமோ அந்தவானுலகிற்கு-வானவெளிக்கு ஓர் சோவியத் மாவீரன் முதன் முதலாகச்சென்று திரும்பியுள்ளான். அவன் பெயர் உலக வரலாற்றில் பொன்னெழுத்துக்களால்பொறிக்கப் பட்டுபோற்றப்பட இருக்கிறது. அந்தப் புரட்சிகரமான பெயர்- இன்று உலகின் கோடிக் கணக்கான இதயங்களில் எதிரொலித்துக் கொண்டிருக்கும் அம்மாவீரனின் பெயர்தான் யூரி ககாரின்.

கவலையோடு இருக்கிறார் ககாரின் மனைவி **வால்யா**

வானவெளிக்கு மிருகங்கள் சென்று எந்தவித ஊனமும், இல்லாமல் திரும்பிவிட்டன. இனி அங்கே மனிதன் சென்று திரும்ப வேண்டியதுதான்- அதில் வெற்றி என்றால்- அங்கே எல்லாரும் போகலாம் நிலம் வாங்கலாம்-குடியேறலாம்-அற்புதமான வாழ்க்கை! ஆனால், அதற்கு யார் முன்வரத் தயாராய் இருக்கிறார்கள். அந்த கூண்டில் அடைபட்டு வானவெளியில் பல்லாயிரக் கணக்கான மைல்கள் பிரயாணம் செய்து அங்குள்ள நிலைமைகளை அறிந்துவர யார் தங்களை அர்ப்பணித்துக் கொள்வார்கள். மின்னல் வேகத்தில் வானில் பறக்கும் அந்தக் கூண்டில் அடைபட்டுக் கிடக்கும்

பொழுது உயிர்த் துடிப்பில், மூச்சில், உடலில் எங்கேனும் பலவீனம், ஆபத்து நேரிடுகிற தென்றால்-மக்கள், மனைவி, சுற்றம், கொஞ்சி மகிழ்ந்த பிஞ்சுக் குழவி இவர்களையெல் லாம் மறந்து அந்த அகண்ட வெளியிலேயே அனாதையாய்-உருக் குலைந்து......அப்பப்பா இந்தச் சோதனைக்கு யார் ஒப்புவர்! தன்னைத்தானே அழித்துக்கொள்ள எந்த உயிர் சம்மதிக்கும் - அதுவும் சோதனை-பயங்கரச் சோதனை.

இத்தக் கேள்விகள் சோவி யத் விஞ்ஞானிகளின் உள்ளத் தில் நிழலாடியபோதுதான்- "இதோ நான் தயார்! எனது தாய்நாட்டிற்குக் கிடைக்க இருக்கும் வெற்றிக்கான எந்தச் சோதனைக்கும் நான் உடன்படுகிறேன் — அதிலே அழிவு இருக்கலாம் என்றால் அதை இதயப்பூர்வமாக வர வேற்கிறேன். இந்த மாபெரும் சோதனையின் மூலம் நான் பிறந்த இந்த சோவியத் மண் ணில் பல வெற்றிக் கொடிகள் பறக்கும் என்றால்-உலகம் தன் வாழ்த்துக்களையெல்லாம் இங்கே குவிக்கும் என்றால்-இந்தச் சோதனையின் மூலம் மார்தட்டிச் சொல்லும் மிகப் பெரும் புகழ் கிடைக்க இருக் கிறதென்றால் - அதனால் ஏற் படும் இன்னல்களை நான் அகங் குளிர வரவேற்கிறேன். நான் நிச்சயம் வானவெளியில் பறந்து வெற்றியோடு திரும்பு வேன் - என்னை அனுப்பி வையுங்கள்" என்று ஓடிவந்து ஒப்புதல் தந்தான் மாவீரன் யூரி ககாரின்.

சோவியத் விஞ்ஞானிகள் சோர்வு நீங்கினர். தங்களது அயராத உழைப்பிற்கு இரவு பகல் என்று பாராமல் ஓயாமல், ஒழியாமல் செய்த சிந்தனைக்கு, திரை விழுந் தாலும், நரை எழுந்தாலும் எத்தனை ஆண்டுகளாயினும் சரி இந்தச் சோதனையில் வெற்றிபெற்றே தீருவது என்ற தங்கள் முயற்சிக்கு பேராதரவு தரும் வகையில் ஓர் தியாக புருஷன் கிடைத்து விட்டான் என்ற அளவிடற் கரிய மகிழ்ச்சி அவர்களுக்கு. அவனைப் பாராட்டி, உளங் குளிர வரவேற்று - அவன் வான வெளியில் பறக்கும் நேரத்தில் எந்தவித ஆபத்தும் அவனை நெருங்காவண்ணம் கருவிகள் மூலம் பல ஏற்பாடு

கள் செய்து வெற்றியுடன் திரும்புக என வாழ்த்தி வான வெளிக்கு அனுப்பி வைத்தனர்.

வானவெளியிலிருந்து பார்க்கும் பொழுது உலகத்தின் ஒரு பாதி இருளாகவும்-மறுபாதி ஒளி மயமாகவும் தெரிந்ததாம். யூரி ககாரின் மிக்க வியப்போடு சொல்லுகிறார். இந்த பரந்த உலகம் அங்கிருந்து பார்க்கும் பொழுது கடலில் சின்னஞ்சிறு பந்து மிதந்து கொண்டிருப்பதைப் போல் தென்பட்டதாம்.

வானவெளியில் பறக்கும் பொழுது உடல் நிலை சீராகவே இருந்ததாம். இரண்டு மணி நேரத்திற்கொருமுறை ஏற்பட்ட லேசான நெஞ்சு வலியைத் தவிர வேறெந்த விதமான மாறுதலும் இல்லையாம்.

யூரி ககாரின் வானவெளியில் பிரயாணம் செய்து கொண்டிருந்தபொழுது அவர் மனைவி வால்யா மிகக் கவலையோடிருந்தாராம். இல்லத்தில் திருப்பிவிடப்பட்டிருந்த டெலிவிஷனும், ரேடியோவும் நிறுத்தப்படவே இல்லையாம். ''அவர் விண்வெளியில் இருக்கிறார். எல்லாம் நேர்த்தியாய் இருப்பதாய்க் கூறுகிறார்''— என்று செய்திகள் வெளியாகும் போதெல்லாம் நடுங்கும் கைகளுடன் சாதாரண நோட்டுப் புத்தகத்தில் மணியையும் நிமிடங்களையும் வால்யா குறித்து வைத்துக் கொள்வாராம்.

ககாரின் குழந்தைகளான காலயாவும், லேனவும் ''அப்பா எங்கேம்மா'' என்று கேட்கும்பொழுது அவர்களின் கையில் ஆப்பிள் பழத்தைக் கொடுத்து கவனத்தை வேறு முறையில் திருப்பி குழந்தைகளை சிரிக்கவைத்து அனுப்பி விட்டு-முத்து முத்தாய் கண்ணீர் சிந்துவாராம் ககாரின் மனைவி வால்யா. அங்கே வந்து குழுமியிருக்கும் அக்கம் பக்கத்து வீட்டுக்காரர்கள் வால்யாவுக்கு ஆறுதல் சொல்லுவார்களாம். ''நான் ஏன் கவலைப்படுகிறேன். அவர் வெற்றியோடு திரும்ப இருக்கிறார். இந்த நாடு அவரை மகிழ்ச்சி ஆரவாரத்தோடு வரவேற்பதில் எனக்குத்தானே பெருமை''- என்று சொல்லி விட்டுக் கண்ணீரைத் துடைத்

துக்கொண்டு புன்னகைத்தாராம் வால்யா. இது போன்ற பல செய்திகளை சோவியத் நாட்டிலிருந்து வரும் ஏடுகள் மிகச் சுவைபடச் சொல்லுகின்றன.

1961 ஏப்ரல் 12-ஆம் நாள் சோவியத் மக்கள் மகத்தானதொரு சாதனையை முடித்துக்கொண்டு திரும்பும் வெற்றித் திருமகனை விழிகளிலே மகிழ்ச்சி பொங்க-உள்ளம் வெற்றிக் கூத்தாட லட்சோபலட்சம் கையொலிகளுக்கிடையே ஆரவாரத்துடன் வரவேற்றனர்.

இத்தருணத்திற்காக மாஸ்கோ இரண்டு நாட்களாய்க் காத்துக்கொண்டிருந்ததாம். மக்கள் உணர்ச்சி வசப்பட்டிருந்தனராம். வீதிகளெங்கும் மக்கள் கூட்டம் கொடிகள் - தலைவர்களின் படங்களால் எல்லா மாளிகைகளும் அலங்கரிக்கப்பட்டிருந்ததாம். இரண்டு நாட்களுக்குமுன் 300 கிலோமீட்டர் உயரத்தில் உலகை சுற்றி வந்த ககாரின் ஏழு இராணுவ விமானங்கள் புடைசூழ தளத்தில் இறங்கி, அவரை வரவேற்பதற்காக விரித்திருந்த சிவப்புக் கம்பளத்தின் மீது நடந்து கம்யூனிஸ்ட் கட்சி சோவியத் சர்க்கார் தலைவர்கள் அமர்ந்திருந்த மேடைக்கு அழைத்துச் செல்லப்பட்டாராம்.

தாய்த்திருநாட்டின் வீரப் புதல்வனை இதயங்குளிரக் கட்டித் தழுவி வரவேற்றாராம் சோவியத் தலைமை அமைச்சரான குருஷேவ்.

“சோவியத் சமுதாயம் தோன்றி கடந்த நாற்பத்தி நான்கு ஆண்டுகளில் உலக வரலாற்றுச் சிறப்புடைய வெற்றிச் சாதனை இது. விண்வெளியை வெற்றி கொண்ட நெஞ்சத் துணிவுள்ள முன்னோடி உலகின் முதல் அண்டவெளிப் பிரயாணி எங்கள் சோவியத் மனிதன். சோவியத் மண்ணில் பிறந்து, சோவியத் சமுதாயத்தில் வளர்ந்த பிரஜை. அவருடைய பெயர் உலகமக்கள் அனைவருக்கும் தெரியும். முற்போக்கு மனித குல மனத்தின் பெருமைக்குரியவராக ஆகிவிட்டார் யூரிககாரின்”—என்று பாராட்டினாராம் குருஷேவ்.

ககாரினை வாழ்த்தி ஏராளமான செய்திகள் பல நாடுகளிலிருந்து வந்து குவிந்தனவாம்.

எத்தகைய அதிகாரப் பொறுப்பும் வகித்திராத ஒருவரின் கைகளை-மிகப்பெரும் பதவிகளை வகிப்பவர்களும் -அயல்நாட்டுத் தூதுவர்களும் குலுக்கினர்களாம். புறவெளியிலிருந்து திரும்பி வந்திருந்த ககாரின் கைகுலுக்கல் மிக உறுதியாக இருந்ததாம். விண் வெளிப் பிரயாணியின் கை குலுக்கலின் வலிமை தாங்காது சில தூதுவர்களின் முகத்தில் வேதனைச் சுளிப்பு நெளிந்ததைக் கண்டு ககாரினுக்கு அருகிலிருந்த நிகிதா குருஷேவ் புன்னகைத்தாராம். இந்தச் செய்திகளை சோவியத்ஏடொன்று மிகப் பெருமிதத்தோடு சொல்லுகிறது.

மிகச் சாதாரணக் குடும்பத்தில் பிறந்த யூரி ககாரின்-அவரே நினைத்திராத-எவருக்கும் எளிதில் கிட்டாத மாபெரும் புகழைப் பெற்றார். உலகப் பெருந் தலைவர்களில் ஒருவராகத் திகழும் குருஷேவின் பாராட்டுதலையும் பெற்றார். அவர் விண்வெளியிலிருந்து இறங்கி சோவியத் மண்ணில் கால் பதித்த நேரத்தில் பிறந்த குழந்தைகளுக்கெல்லாம் யூரிககாரின் என்றே பெயர் சூட்டப்பட்டுள்ளதாம். ரஷ்யத் தலைநகரிலுள்ள முக்கியத் தெருவொன்றிற்குக் ககாரின் பெயர் வைக்கும்படி உத்திரவிடப் பட்டுள்ளதாம். இத்தனைக்கும் மேலாக ரஷ்ய விஞ்ஞானிகளால் சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள ஓர் உலோகத்திற்கு 'ககாரினேட்' என்று பெயரிட்டிருக்கிறார்களாம்.

அப்பப்பா மிக எளியவர் வலிமை மிகுந்த ஒரு சமுதாயத்தினரின் இதயங்களில் இடம் பெறுகிறார். உலகத்தாரால் விண்வெளிக்கு முதன் முதலில் சென்று திரும்பிய மாவீரன் எனப் பாராட்டுப் பெறுகிறார்.

நாமும் நம் இதயப்பூர்வமாக அவரை வாழ்த்துவோம். சோவியத் விஞ்ஞானிகளின் சாதனையும்-அந்தச் சாதனை வெற்றி முகட்டிலே நின்று மகிழ்ச்சிக் கூத்தாடுவதற்கு உறுதுணையாய் இருந்த தியாக புருஷன் யூரிககாரினும் வாழ்க! அவர்தம் திறம் வெல்க! வளர்க!

மணிக் காளை

விகரு. இராமநாதன்

கொம்பைச் சீவிக் கூராக்கி, எண்ணெய் தடவி, எலுமிச்சம் பழங்கள் இரண்டைக் குத்திவிட்டு, நெற்றிப் பட்டையை எடுத்துவர உள்ளே சென்றான் மாரி.

களத்திலே குதிக்கத் தயாராய் இருந்த மணிக் காளை, தலையை ஓர் உலுப்பு உலுப்பி, ஜாம்பவான்போல நிமிர்ந்து நின்றது.

அந்தப் பார்வையிலேதான் என்ன அழகு! பளபளக்கும் அதன் கொம்பும், வெள்ளை வெளேரென்ற தோற்றமும், உருண்டு திரண்ட திமிலும், வளர்ந்து மடிந்திருந்த தாடையும் பார்ப்போரைக் கதி கலங்கச் செய்தன.

மஞ்சிவிரட்டு என்று புறப்பட்டு விட்டாலே வெற்றி அதன் பக்கம்தான்.

இதுவரை எந்த மஞ்சிவிரட்டிலும் பிடிபட்டதே கிடையாது.

மணிக் காளையைப் பற்றித் தெரியாதவர்களே அந்த வட்டாரத்தில் கிடையாது என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

மணிக்காளை மஞ்சிவிரட்டுப் பொட்டலுக்கு வந்தால் ஒரு பிள்ளை அருகில் நெருங்காது. கிட்டத்தட்ட பத்து மஞ்சிவிரட்டுகளில் கெலித்துவிட்ட மணிக் காளைக்கு விலை ஆயிரம் ரூபாய்வரை ஏறிவிட்டது.

இந்த வருடமும் மாரி அதை மஞ்சிவிரட்டுக்குக் கொண்டு செல்லத்தான் போகிறான். அதனால்தான் இவ்வளவு தடபுடல். இந்த வருடமும் கெலித்து விட்டால் விலை என்ன ஆகுமோ! யார் கண்டார்கள்?

மணிக் காளையின் நெற்றியிலே பொட்டிட்டு தலைக் கயிற்றைப் பிடித்துக்கொண்டு முன்னே நின்றான் மாரி. மாரியின் மனைவி ராக்காத்தாள் தேங்காய் உடைத்து கற்பூரம் கொளுத்தி மணிக் காளைக்கும் மாரிக்கும் பொட்டு வைத்து வழி கூட்டினாள்.

'ஜல், ஜல்' என்ற சதங்கை ஒலிக்க மாரி மணிக் காளையுடன் மஞ்சிவிரட்டுக்குப் புறப்பட்டான்.

பகல் மணி மூன்று. மஞ்சிவிரட்டுத் தொழு முழுவதும்

நிரம்பிவிட்டது. கொட்டு முழக்கோடு 'நாட்டார்' வந்தார்கள். கொம்பு ஊதப்பட்டது. முறைப்படி சடங்குகள் நடந்தன. எல்லா மாடுகளுக்கும் 'கச்சை' கொடுக்கப்பட்டது. மாரி சண்டை போட்டு மணிக் காளைக்கு இரண்டு கச்சைகள் வாங்கிக் கொண்டான். எல்லா மாடுகளும் தொழுவை விட்டுக் கிளம்பின. மாரியும் மணிக் காளையை உருவி விட்டான்.

மணிக் காளை ராஜ நடை போட்டுப் பொட்டலுக்கு வந்தது. அதன் வீரதீரச் செயல்களை அறியாத ஒரு சிலர் அதனைப் பிடிக்க நெருங்கினர். பாவம்! அவர்கள் பட்ட பாடு ஆண்டவனுக்குத் தான் தெரியும்.

நீண்ட நேரம் மணிக் காளை பொட்டலில் விளையாடிக் கொண்டிருந்ததால் வழக்கம் போல அது தானாக வீட்டுக்கு வந்துவிடும் என்று எண்ணி மாரி வீட்டை நோக்கி நடையைக் கட்டினான்.

மாலை மணி ஆறு ஆகிவிட்டது. இன்னும் மணிக் காளை வரவில்லை. ஒருகால் தொழுவத்திற்குச் சென்றிருக்கலாம் என்று எண்ணித் தொழுவத்திற்குச் சென்றான். அங்கேயும் அதைக் காணவில்லை.

காலமோ நகர்ந்து கொண்டிருந்தது. மணியோ ஏழு எட்டு என்று உருண்டுகொண்டிருந்தது. அப்படியும் இப்படியுமாக மணி ஒன்பதும் ஆகி விட்டது. அப்பொழுதும் அது வரவில்லை.

மாரிக்குச் சந்தேகம் வந்து விட்டது. பொறாமைக்காரர்கள்ஏதாவது செய்துவிட்டார்களோ என்று எண்ணினான்.

உடனே மணிக் காளையைத் தேடுவதற்கு ஏற்பாடு செய்தான். ஆனால், பலன் ஏதும் கிடைக்கவில்லை.

காலை விடிந்ததும் விடியாததுமாக வரிந்து கட்டிக் கொண்டு, வெளியே புறப்பட்டான் மாரி.

ஆனால்...இதென்ன ஆச்சரியம்! மணிக் காளை எதிரே வந்துகொண்டிருக்கிறதே!

ஆனால்...ஆனால்...

பொலிவிழந்து, சோர்வுற்று, வீரமெல்லாம் இழந்துவிட்டு, தாலியறுபட்ட நிலையில், களத்திலே தோல்வியுற்ற இராவணன்போல, நடக்கக்கூடச் சக்தியற்று வந்துகொண்டிருந்தது.

---

* மனிதர்களுக்குள் அப்படி நடப்பதில்லை
* ஆனால் மிருகங்களுக்குள் அது சகஜம்
* மிருகமும் அதைப்பற்றி உணரும் சக்தி பெற்றால்.........?

அதன் நிலையைக் கண்ட மாரிக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. மஞ்சிவிரட்டிலே தோல்வியுற்ற—பிடிபட்ட அதன் மூஞ்சியிலே விழிக்கவே கஷ்டமாக இருந்தது. கையிலே வைத்திருந்த கயிற்ருல் அதன் மூஞ்சியிலே ஓர் அடி கொடுத்தான்.

பாவம்! நன்றியுள்ள ஜன்மம்! அதையும் பொறுத்துக் கொண்டது.

வனப்போடு இருக்கும்வரை தான் பிழைப்பு என்பதை அறியாத விலைமாது போன்ற அந்த மிருகம்—அந்த ஜன்மம் அவன் கொடுத்த அடியை வாங்கிக்கொண்டு எங்கோ நடந்து கொண்டிருந்தது.

மாரி அன்றெல்லாம் கரித்துக் கொட்டிக்கொண்டிருந்தான். 'நன்றி கெட்ட கழுதை! இவ்வளவு நாளாகப் போட்டு வளர்த்தேன்; தின்று கொழுத்த பிறகு என்னை ஏமாற்றிவிட்டதே. இந்த வருடம் மட்டும் பிடிபடாமல் வந்து தொலைந்திருந்தால்... ஆகா...ரூபாய் ஆயிரத்தி அயிநூறுக்கு விற்றிருக்கலாமே! மோசம் செய்துவிட்டதே! இனிமேல் ஒரு காசுக்குக்கூட மதிக்கமாட்டார்களே. இதற்குக் கொட்டி அழுத பணமெல்லாம் வீண்தானு? பட்ட பாடெல்லாம் பலனற்றுப் போக வேண்டியதுதானு ?'

மாரியின் சிந்தனை பலவாறு கத்திரிந்து அலைந்தது. கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தான். என்ன விலைக்கு வந்தாலும் விற்றுவிடுவதென்று தீர்மானித்து விட்டான்.

மணிக் காளைக்கு இரண்டு நாளாக ஆகாரமே கிடைக்கவில்லை. முன்பெல்லாம் புண்ணுக்கிற்கும் பருத்தி விதைக்கும் பஞ்சம் ஏற்பட்டதேயில்லை. 'போதும், போதும்' என்று சொல்கிற மட்டும் கிடைத்து வந்தது. வைக்கோலைப் பற்றிக் கவலையே இல்லை. வைக்கோல் போரையே வேண்டுமானுலும் தின்னலாம். அவ்வளவு சுதந்திரம் இருந்தது அந்த வீட்டில்.

இன்று...!

ஏனென்று கேட்க—ஏறிட்டுப் பார்க்கக்கூட நாதியில்லை.

இதைப் பற்றிக் கொஞ்சம் நினைத்துப் பார்த்தது மணிக் காளை. பாவம்! அழுவதைத் தவிர அதனுல் வேருென்றும் செய்ய முடியவில்லை. அழுதது! அழுதது! அழுது கொண்டே இருந்தது!

மேலும் இரண்டு நாட்கள் ஓடின.

தன்னை விற்றுவிடப் போகிருர்கள் என்ற செய்தி அதற்குத் தெரிந்துவிட்டது. நான்கு நாட்களாகச் சரியான ஆகாரம் இல்லாதிருந்தபோதிலும், அன்று வைக்கப்பட்டிருந்த காய்ந்த புல்லையும், தொட்டி நிறைய ஊற்றப்பட்டு,

அதன்மீது தவிடு என்ற ஒன்று தூவப்பட்டு, மாட்டுத் தண்ணீர் என்ற பெயரில் காட்சியளித்துக் கொண்டிருந்த நீரையும் குடிக்காமல், தனக்கு ஏற்படப் போகின்ற பிரிவை எண்ணி வருந்த ஆரம்பித்தது.

தன்னை எவன் வாங்கப் போகிறானே, அவன் எப்படிப் பட்டவனோ? என்ன வேலையில் போடப் போகிறானோ? நல்லவனோ, கெட்டவனோ? என்றெல்லாம் நினைக்கத் தொடங்கியது.

தன்னுடைய எதிர் காலத்தைவிட, தனக்கு நேர இருக்கின்ற நன்மை தீமைகளையும் விடத் தன்னுடைய எஜமானனைப் பற்றித்தான் அதிகமாக நினைக்கத் தொடங்கியது.

"சீ! மனிதன் எவ்வளவு கேவலமானவன். எத்தனையோ முறை பிடிபடாமல் ஜெயித்து அதனால் பேரும் புகழும் பணமும் சம்பாதித்துக் கொடுத்திருக்கிறேன். அதையெல்லாம் நினைக்காமல் ஒருமுறை தோல்வி கண்டதையே பெரிதாக நினைத்துச் சாகிறானே! நாம் பண்ணி விட்ட இந்தச் சிறிய தவறு தானா அவனுக்குப் பெரிதாகத் தெரியவேண்டும்? இதற்காக என்னையே விற்றுவிடத் தீர்மானித்து விட்டானே. அதற்காக எனக்கு ஆகாரம் கூடச் சரியாகத் தரவில்லையே. மனிதன் இவ்வளவு கேவல

சிகரெட் "எமன்"

சிகரெட் எமன் மனிதர்களின் உயிரை வாங்குவதில் பரபரப்பாக வேலை செய்து வருகிறான் என்கிறார்-சிகரெட் பிடிப்பதினால் ஏற்படும் தீமையை நன்குணர்ந்த ஓர் அமெரிக்க விஞ்ஞானி.

ஒருநாளைக்கு ஒரு பாக்கெட் சிகரெட் புகைத்தால் ஒருவருக்கு அவரின் ஆயுளில் எட்டு ஆண்டுக் காலம் குறைந்து விடுகிறது.இரண்டு பாக்கெட் புகைப்பவர் 16, ஆண்டுகளை இழக்கிறார்.

சிகரெட் குடிக்கும் ஒருவர் தான் சிகரெட் குடிப்பதற்காக எடுத்துக் கொள்ளும் காலத்தைப் போல் மும்மடங்கு காலத்தை தனது ஆயுளில் இழந்துவிடுகிறாராம்.

ஒருமணி நேரம் ஜெட் விமானத்தில் பிரயாணம் செய்வதில் எவ்வளவு அபாயங்களுக்கு உட்படுவோமோ அதைவிட மும்மடங்கு அபாயங்கள் உள்ளன ஒருமணி நேரம் சிகரெட் பிடிப்பதில் என்கிறார் அவர்.

மானவனு? சுயநலத்திற்கும் ஒரு அளவில்லையா? உலகத்திலேயே உயர்ந்த இனம் மனித இனம் என்கிருர்களே, அதெல்லாம் வெறும் பித்தலாட்டம் தானு? நாளை இவனே படுத்துக்கொண்டால் அப்புறம் இவனை யார் கவனிப்பார்கள்? இவனுக்கும் நம்மைப்போன்ற நிலை வந்துவிட்டால்...? அப்போது என்ன செய்வான்?... சீச்சீ! இவனைவிட்டுவிட்டுப் போவதேமேல். இவ்வளவு சுயநலக்காரனிடம் இருக்கவே கூடாது.''

இப்படியாக மணிக் காளை தன் சகோதரி அழகியிடம் சொல்லிக் கொண்டிருந்தது.

அழகி என்பது மணிக் காளையோடு மாரியின் வீட்டில் வளர்ந்துவந்த பசுவுக்கு இடப்பட்ட பெயர்.

ஒரே தாய்வயிற்றில் பிறந்த கன்றுகள்தாம் மணிக் காளையும் அழகியும்.

மணிக் காளைக்கு வயது ஏழு. அழகிக்கு வயது ஐந்து. மாரி என்னவோ இரண்டையும் வஞ்சகம் இல்லாமல்தான் வளர்த்தான். இப்போது என்னவோ அவன் மனம் மாறி விட்டது. மனிதனுடைய மனம்தான் நிலையாக இருப்பதில்லையே.

யார் யாரோ வந்து மணிக் காளையைப் பார்த்துவிட்டுப் போனுர்கள். ஆனுல் யாரும் வாங்கிய பாடாய் இல்லை.

தரகர்கள் வருவதும் பார்ப்பதும் போவதுமாக இருந்ததால் மாரி மணிக் காளையை மேய்ச்சல் தளத்திற்கும் அனுப்பவில்லை. கட்டோடு போட்டுக் கொன்றுன்.

அழகி மட்டும் மேய்ச்சல் தளத்திற்குப்போய் வந்தது.

மாலையில்வீட்டிற்குவந்ததும் அழகி தன் அண்ணனிடம்நடந்ததைக்கேட்பதும், அண்ணன்-மணிக் காளை நடந்ததைச் சொல்வதும், அதைக் கேட்டு அழகி கண்ணீர் விடுவதும், அது கண்டு அழகிக்கு மணிக் காளை ஆறுதல் சொல்லுவதும், பிறகு இரண்டு ஜன்மங்களும் தலை விதியை நொந்து கொண்டு தூங்குவதுமாக நாட்களைக் கழித்தன.

ஒன்றை இரண்டாக்கி இரண்டை மூன்ருக்கி நகர்ந்து கொண்டிருந்த காலச் சக்கரம் ஒன்பதைப் பத்தாகவும் ஆக்கியது. நாட்கள் ஓடஓட கட்டோடு கிடந்த மணிக் காளை துரும்பாய் இளைத்து விட்டது.

பேரம் பேச வந்தவர்கள் மணிக் காளையின் மெலிந்த தோற்றத்தைக் காரணமாக வைத்துக்கொண்டு மிகக் குறைந்த விலைக்குக் கேட்க ஆரம்பித்தார்கள்.

இது கண்ட மாரி செய்வதறியாது விழித்தான். கடைசியில் மனைவியின் யோசனைப்படி மணிக் காளையை நன்ரு

கப் போஷிக்க ஆரம்பித்தான். முன்போல் புண்ணுக்கும் பருத்திக் கொட்டையும் கழநித் தண்ணீரும் வைத்தான்.

இங்கேயும் சுயநலம்தான். நல்ல தீனி வைத்து மாட்டைத் தேற்றிவிட்டால் நல்ல விலைக்கு விற்றுவிடலாமல்லவா? இந்த எண்ணத்தில் தான் மார்ரி முன்போல் தீவனம் கொடுக்க ஆரம்பித்தான்.

இந்த மனிதனை என்னவென்று சொல்லுவது? மாரியின் செய்கையைக் கண்டு நினைத்து நினைத்துச் சிரித்த மணிக்காளை கிடைத்தது லாபம் என்று வயிறு புடைக்கத் தின்று தீர்த்து வந்தது.

இப்படியாக ஒரு பதினைந்து நாட்கள் ஓடின.

மீண்டும் தரகர்கள் வந்தார்கள்; பார்த்தார்கள். மணிக்காளை விலை ஆடத் தொடங்கியது. கடைசியில் நூறு ரூபாய் தகராறில் விட்டுப் போய்விட்டது.

பிறகு யாருமே வரவில்லை. வந்த இரண்டொருவரும், "இது மஞ்சிவிரட்டு மாடு, கொழுத்துப் போயிருக்கிறது. வேலைக்குப் படிந்து வராது. அதோடும் புதுப்பிடி மாடு, இதை வைத்துப் பழக்க முடியாது," என்று சொல்லிவிட்டார்கள்.

பாவம். மாரி தலையில் கையை வைத்துக் கொண்டு 'ஓ'வென்று அழத் தொடங்கி விட்டான்.

இப்போதெல்லாம் மாரியின் பரிதாபமான நிலையைக் கண்டு சிரிப்பதைத் தவிர மணிக் காளைக்கும் அழகிக்கும் வேறு வேலையே கிடையாது.

மணிக் காளை என்னவே எல்லா வேலைக்கும் தயாராகத் தான் இருந்தது. ஆனால், அதை எப்படி மாரிக்குத் தெரியப்படுத்துவது?

மாரி கொஞ்ச நாட்களாகப் பைத்தியம் பிடித்தவன் போலத் திரிந்தான்.

ஆனால், மணிக்காளை மட்டும் நிம்மதியாக இருந்துவந்தது.

பாவம்! கொஞ்ச நாட்களில் அந்த நிம்மதியும் குலைந்து போயிற்று. மறுபடியும் தொல்லை வந்து சேர்ந்துவிட்டது.

ஒருநாள், மாரியும் அவனுடைய நண்பனும் மணிக் காளையைப் பார்வையிட வந்திருந்தார்கள்.

மாரியின் நண்பன் மணிக் காளையின் ஒவ்வொரு அங்கத்தையும் நோட்டமிட்டுவிட்டு, "ஏண்டா மாரி, இதை அடுத்த ஊர்ப் பண்ணையிலே கொண்டுபோய் மாப்பிள்ளைக் காளையாய் விட்டுவிட்டால் என்ன?" என்று ஒரு புதிய யோசனையைத் தூண்டிவிட்டான்.

மாரிக்கு அது சம்மதமா கவே இருந்தது.

அவர்கள் பேசிக்கொண்டிரு ந்ததைக் கேட்டுக்கொண்டே யிருந்த மணிக்காளே மிகவும் வருத்தப்பட்டது. அதற்கு என்னவோ அது பிடிக்க வில்லே. இருந்தாலும் என்ன செய்ய முடியும்? ஆகவே, அது வாளா இருந்துவிட்டது.

மாரியும் நண்பனும் பேசி ஒரு முடிவுக்கு வந்தார்கள். உடனே மாரி என்ன நினேத் தானே என்னவோ, திடீ ரென்று அவனுக்கு ஒரு யோ சனே தோன்றிற்று. அந்த யோசனேயை வெளியிட் டான்.

அதைக்கேட்ட மணிக்காளே கதி கலங்கிவிட்டது. அன்று இரவெல்லாம் அதற்குத் தூக் கமே பிடிக்கவில்லே. விடிந் தால் அந்தப் பாவிகள் வந்து விடுவார்கள். அதை எண்ணி யெண்ணி — அவன் சொன்ன அந்தக் கொடூரமான வார்த்தைகளே நினேத்து நினேத்துப் புழுங்கிக்கொண்டி ருந்தது. நாளே நடக்கப் போகின்ற அந்தப் பயங்க ரத்தை—அதனுல் தனக்கும் தங்கை அழகிக்கும் இடை யிலே ஏற்படப் போகின்ற புதிய உறவை நினேக்கவே அருவருப்படைந்தது மணிக் காளே.

'ஒரே தாய்வயிற்றில்பிறந்த காளேயும், பசுவும்......சீச்சீ! என்ன கேவலம்! இதை எப் படி நினேத்துப் பார்ப்பது? இது மனிதர்களுக்கே கேவல மில்லேயா? அவர்களுக்குள்ளே அப்படியா நடக்கிறது? நாம் வாயில்லாப் பிராணிகள் என் பதால் எதற்கு வேண்டுமானு லும் நம்மைஉட்படுத்துவதா? நமக்கென்று தனிப்பட்ட உணர்ச்சிகள் இல்லேயா? இவர்கள் செய்கிற அக்கிரமங் களுக்கு ஒரு முடிவே இல் லேயா? எல்லாக் காளேகளேயும் போல என்னேயும் நினேத்து விட்டார்களா? நான் ஒருக் காலும் இதற்கு உட்பட மாட்டேன். என்னுல் என் தங்கை...சீச்சி! முடியவே முடியாது. மற்ற காளேகள் இது விஷயத்தில் எதுவும் முரண்டு பண்ணுமல் இந்த முட்டாள் மனிதர்களின் நோக்கங்களுக்கு அடிமையாய் விட்டதால்தான் நம் வம்சத் தையே கேவலமாக நினேத்து விட்டார்கள். அவர்களே இப் படியே விட்டுக்கொண்டிருக்க முடியாது. நமக்கும் உணர்வு கள்-உயிர்ப்புகள் உண்டு. மான அவமானங்கள் உண்டு. மாரியின் முயற்சி என் விஷ யத்தில் ஒருகாலும் நடக் காது. என்னே என்ன வேண்டு மானுலும் செய்யட்டும். நான் ஒருவனுவது மனித வர்க் கத்தை எதிர்த்து மன்முடி உயிர் விடுவேன். கேவலம், கேவலம்...என் தங்கை...அந்த அப்பாவிப் பசு இதைக் கேள்

விப்பட்டால் எவ்வளவு வேத னைப்படும்?'

மணிக் காளை நீண்ட நேர மாக ஏதோ போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தது.

மறுநாள் விடிந்ததும் மாரி யும் இன்னும் சிலரும் வந்து மணிக் காளையைப் பிடித்து ஆயத்தப் படுத்தினார்கள். பாவம், அழகி ஒன்றும் புரியா மல் விழித்துக் கொண்டிருந் தது. அதையும் இரண்டு பேர் பிடித்துக் கொண்டார்கள். ஆனால்... நடந்ததென்ன!

இருவர் மணிக் காளையின் கூரிய கொம்புகளுக்கிடையே சிக்குண்டனர். இன்னுமொரு வருக்கு நல்ல காயம். மாரி தப்பிவிட்டான். அவர்கள் என்ன முயன்றும் மணிக் காளையை அவர்கள் நோக்கத் திற்குக் கொண்டுவர முடிய வில்லை. அது எங்கோ விலகி விலகி ஓடிக்கொண்டி ருந்தது.

இரண்டு நாட்களாகியும் மணிக் காளை வீட்டிற்கே வர வில்லை. அபலையாகிவிட்ட அழகி, அண்ணனைக் காணாது ஏங்கித் தவித்தது.

மாரி மணிக் காளையை எப் படியும் பிடித்துத் தன் எண் ணத்தை நிறைவேற்றிக் கொள்ள எத்தனித்தான்.

ஆனால், மணிக் காளை நாளாக ஆக அதை நெருங் கியவர்களோடு மூர்க்கத்தன மாகப் போராடத் தொடங்கி விட்டது. கண்டவர்களை எல் லாம் பாயவும் தலைப்பட்டது. தோட்டம், துரவு, வயல்; வரப்புகளில் எல்லாம் புகுந்து அட்டகாசம் செய்யத் தொடங்கியது. வெறி கொண்ட காளைபோல ஊர் எங்கும் அலைந்தது. அதைக் காணவே அவ்வூர் மக்கள் அஞ்சி நடுங்கினர்.

கடைசியில் அதைப் பிடிக்க வேண்டும் என்ற எண்ணத் தையே கைவிட்டுவிட்டான் மாரி.

மஞ்சிவிரட்டில் தோற்ற மணிக் காளை மனித வர்க்கத்தையே வென்றுவிட்டது.

இப்போது அது ராஜாக் காளையாக, தனிக் காட்டு ராஜாவாக, யாருக்கும் பயப் படாமல் நடை போட்டுக் கொண்டிருந்தது.

ஆனால், அதன் மனத்திலே ஒரே ஒரு குறை. மாரியின் வீட்டை விட்டுப் போனதி லிருந்து அதன் தங்கை அழகி யைக் காண முடியவில்லை. கண்டு அதனிடம் நடந்ததைச் சொல்ல, அதற்கு ஆறுதல்கூற முடியவில்லை. எப்படிக் கூற முடியும்? அதைக் காணு கின்ற போதுதான் பீதி யடைந்த மக்கள் அடித்து விரட்டுகிறார்களே!

இறைவன் படைப்பில், மாந்தனினம் தவிர மற்றெல்லா உயிரினங்களும், மூளைவளர்ச்சியும் மொழி வளர்ச்சியு மின்மையால், தோன்றிய நாள் தொட்டு முன்னேற்றமின்றிக் கிடக்கின்றன. மாந்தனோ, தன் மூளை வளர்ச்சியினாலும் மொழி வளர்ச்சியினாலும் நாளுக்கு நாள் முன்னேறி வருகின்றான். ஒரு நூற்றாண்டிற்கு முன் நரவூனுண்ணிகளாயிருந்தவரெல்லாம், இன்று உலகம் வியக்குமாறும் ஐக்கிய நாட்டமைப்பை எதிர்க்குமளவும், முன்னேறியிருக்கின்றனர். இதற்கு ஆப்பிரிக்கர் சிறந்த எடுத்துக்காட்டு. அரை நூற்றாண்டிற்கு முன் எழுத்தறியாப் பேதைகளாயிருந்த இரசியர் இன்று ஆசிரியனை' வென்ற மாணவராய், அறிவியலிலும் புதுப்புனைவிலும் சிறந்த அமெரிக்கரையும் அறைகூவியழைக்கின்றனர். முதலமெரிக்கரின் முன்னோரான ஆங்கிலரும், மூன்று நூற்றாண்டுகட்கு முன் எல்லாத்துறையிலும் பொறிவினையின்றிக் கைத்தொழில் செய்துவந்தவரே.

உலகில்ஏனைய நாட்டாரெலாம் அகவிருளில் மூழ்கிக் கிடந்த முதுபழங்காலத்தில், தமிழன் முழுமொழி வளர்ச்சியும்பல்கலைஇலக்கியமும்நாகரிகப் பண்பாடும்செங்கோலரசியலும் அடைந்திருந்தான். தொன்று தொட்டு வரலாற்றுக் காலம் வரை, மேனாடுகளெல்லாம் தமிழன் நெய்தநாட்டுத் துணியினாலேயே தம்

ஞா. தேவநேயப் பாவாணர்

-ஜெ-

மானங் காத்துவந்தன. அத்தகைய தமிழன் இன்று 'குப்பையுயர்ந்தது, கோபுரந் தாழ்ந்தது!' என்னும் பழமொழிக்கிலக்காய், இரப்போராய்வந்த அயலாராலும் உடனுண்ணத் தகாதவரென்று தள்ளப்பட்டு, தன் மானம், பகுத்தறிவு, நெஞ்சுரம் ஆகிய முதன்மையான மக்கட் பண்பு மூன்றையுமிழந்து, முன்னோர் பெருமையறியாமல், உயர்நிலைக் கல்விக்குத் தகாதவனென்றும் இழித்திடப் படுகின்றான். இந்நிலைமை தமிழனாலேயே தமிழனுக்கு நேர்ந்துள்ளது.

இத்தகைய நிலையில், தமிழன் முன்னேற வேண்டின் போராட்டம் இன்றியமையாதது. அப்போராட்டத்திலும், தன்னலமற்ற தறுகண் மறவரே முன்னணியில் நிற்றல் வேண்டும்.

போராட்டம் பின் வருமாறு நிகழ்தல் வேண்டும்.

1. முன்னோர் பெருமையறிதல்

ஒருநாட்டார் தம் முன்னோர் பெருமை யறிந்தால்தான், தாம் பிறர்க்கு எவ்வகையிலும் அடிமைப்படாவாறு தம்மைக் காத்துக் கொள்ள முடியும். இற்றிலர் (Hitler) இங்கிலாந்தின் மேற் படையெடுக்க விருந்தபோது ஏற்கெனவே 55 முறை அயலார் படையெடுப்பினின்று தப்பிய இங்கிலாந்து இன்றும் தப்பவல்லது என்று சர்ச்சில் ஊக்கியதினாலேயே, ஆங்கிலேயர் அச்சமும் அவநம்பிக்கையும் நீங்கித் தம் நாட்டைக் காத்தற்கு வேண்டும் ஆற்றல் பெற்றனர். முன்னோர் பெருமையுரைப்பது வரலாறு. அதுவே ஒரு நாட்டார்க்கு உரிமை யாவணம்; பழங்குடி மக்களையும் வந்தேறிகளையும் பிரித்துக் காட்டும் பட்டியல். ஆதலால் தமிழகத்தின் பண்டை வரலாற்றை யறிவதுடன், அதை அறியாத பிறர்க்கு அறிவித்தலும் வேண்டும்.

2. தாழ்வுணர்ச்சி நீங்குதல்

தமிழகம் வெப்பநாடாதலால், தமிழர் பெரும்பாலும் கரியரும் கரும் பொன்னருமாவர். பண்டைக்காலத்திற் பேதைமை மிக்கிருந்ததினால், அற்றைத்தமிழர் வடக்கிலுள்ள குளிர் நாட்டினின்று வந்த வெள்ளையரைத் தேவரென்றும், அவரது எடுப்பொலி மொழியைத் தேவமொழியென்று, நம்பித் தம்மைத் தாமே தாழ்த்திக் கொண்டனர், இதன் தீய விளைவைக்கண்ட திருவள்ளுவர்,

"பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்."

"ஒழுக்க முடைமை குடிமை யிழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்."

என்று தெளிவாகக் கூறி ஈராயிர மாண்டாகியும், ஆங்கிலக் கல்வி கற்றும், அறிவியலுண்மை கண்டும், நெடுங்கால அடிமையுணர்ச்சி நீங்காது, பகுத்தறிவாட்சியில் ஆப்பிரிக்கரினும் கீழ்ப்பட்டிருக்கின்றனர், தமிழர். இந்நிலைமை நீங்கினாலன்றி முன்னேற்றத்திற்குள்ள ளவும் இடமில்லை.

3. ஒற்றுமைப்பாடு

ஒரு வீடு போன்றே ஒரு நாடும் ஒற்றுமைப்பட்டிருத்தல் வேண்டும். இன்றேல் உலைந்து குலைந்துபோம். சேர சோழ பாண்டியர் மூவரும் ஒற்றுமையாயிருந்தவரை, அசோகனும் தமிழகத்திற் கால் வைக்க முடியவில்லை. அதன்பின் ஒற்றுமை குலையவே, முகலாயப் பேரரசு, விசயநகரப்பேரரசு, மராட்டியப் பேரரசு ஆகிய மூன்றன் வயப்பட்டுத் தமிழகம் முழுவதும் சின்ன பின்னமாய்ச் சிதைந்து போயிற்று.

இன்று குலவேற்றுமை, மதவேற்றுமை, கட்சி வேற்றுமை ஆகிய முப்பெரு நோயாலும், இருந்த வலிமையுங் குன்றி வருகின்றது. "பல்குழுவும் பாழ்செயும் உட்பகையும்" தமிழ் நாட்டின் வேரறுக்கின்றன. ஆட்சி முறையில் கருத்து வேறுபடினும், தமிழ் மொழி, கலை, நாகரிகம், பண்பாடு ஆகியவற்றில், தமிழர் ஒன்றுபட்டிருத்தல் வேண்டும். இவ்வொற்றுமையின் மையாலேயே, வடக்கு மேற்கு மிருந்து வந்த அயலார் சிறந்து வாழவும், கிழக்கும் தெற்கும் சென்ற தமிழர் இறந்து வீழவும் நேர்ந்துளது. ஆதலால், திருச்சி முத்தமிழ்க் கழகத்தார்போல் தமிழர் ஒற்றுமைக்கான வழி கோல வேண்டும்.

4. தமிழர் தமிழரல்லாதார் என்ற பாகுபாடு.

எந்நாட்டிலும் மக்களை நாட்டியல் முறையில் பகுக்கும் இரட்டைப் பகுப்பில் உள் நாட்டாரே முதற்கண் குறிக்கப்பெறுவர். இந்நாட்டிலோ, பிராமணர்—பிராம

ணரல்லாதார் என்று தமிழர் முதன்மையின்றிப் பின் வைக்கப்படுகின்றனர். அகத்தார்க்கு முன்னிடமும் புறத்தார்க்குப் பின்னிடமும் கொடுப்பதே முறைமையாதலால், தமிழர்-தமிழரல்லாதார் என்ற பகுப்பே தக்கதாம்.

5. மொழிப்பற்று

நாடுகளெல்லாம், பெரும்பாலும், மொழியடைப் படையிலேயே அமைந்திருப்பதனாலும், அதன்வழியாகவே முன்னேறுவதாலும், தமிழர் யாவரும் தமிழ்ப்பற்றுக் கொண்டிருத்தல் வேண்டும். எந்நாட்டாராயினும் தமிழ்ப்பற்றுடையார் தமிழரே, இந்நாட்டாராயினும் அஃதில்லார் அயலாரே.

தமிழ்ப்பெயரே தாங்குதலும், இயன்றவரை தூய தமிழிற் பேசுதலும், எழுதுதலும், திருமணமும், சடங்குகளும், கோயில் வழிபாடும் தமிழிலேயே நடப்பித்தலும், மக்களுலகத்தில் தேவமொழியில்லையென நம்புதலும், இந்திக் கட்டாயக் கல்வியைத் தமிழ் நாட்டில் அடியோடொழித்தலும், தமிழ் நாட்டிற்குத் தமிழ் நாடென்றே பெயரிடு

எப்படித்தான் எழுதினுனே?

நியூயார்க் நகரத்துச் சுகாதார இலாக்காதார் ஆரம்பப்பள்ளிச் சிறுவர்களுக்கு அடிக்கடி விஞத்தாள் கொடுத்துப் பரிட்சை செய்கிருர்கள். அவர்களுடைய கேள்வி இஃது- "பசும்பாலைவிடத் தாய்ப்பாலில் உள்ள நன்மைகள் என்ன?"

ஒரு சிறுவன் மிகுந்த சிரமப்பட்டு, சிந்தனை செய்து எழுதிய பதில் இது—

அதிகமலிவு !
வாரம் முழுவதும் கெடாதிருக்கும் !
கீழே விழுந்து டப்பா உடையாது !
பூனைவந்து திருடிக் கொண்டு போக முடியாது !
இது வேகமானது, சுத்த மானது !
பிரயாணத்தின் போது கூட எளிதாகக் கையாள லாம் !
மிகக் கவர்ச்சியான பாத்திரத்திலிருந்து வருகிறது!

தலும், தமிழன் என்பதற்கு அடையாளமாம்.

6. தமிழைத் தூய்மைப் படுத்துதல்

தமிழிற்கு இடைக் காலத்தில் நேர்ந்த இழிவினால், ஊர்ப்பெயருட்படப் பல தென் சொற்கள் வழக்கற்றுப் போயின. அவற்றை மீண்டும் வழக்கிற்குக் கொண்டு வருதல் வேண்டும்.

கால்டுவெல் கண்காணியார் முதன் முறையாகத் திரவிட மொழிகளை ஆய்ந்ததினாலும், அக்காலத்தில் தமிழ்த்தூய்மையுணர்ச்சியின்மையாலும், தமிழைத் திரவிடத்தினின்று வேறு படுத்திக் காட்டத் தேவையில்லாதிருந்தது. இக் காலத்திலோ, ஆராய்ச்சி மிகுந்துவிட்டதனாலும், வட மொழியும் இந்தியும் பற்றிய கொள்கையில் தமிழருக்கும் பிற பிற இனமொழியாளர்க்கும் வேறுபாடிருப்பதனாலும், தமிழென்றும் பிற இனமொழிகளையே திரவிடம் என்றும் வேறுபடுத்திக் காட்டுதல் இன்றியாமையாததாம்.

தமிழ் தூய்மையான தென்மொழியென்றும், திரவிடம் ஆரியங் கலந்த தென்மொழியென்றும், வேறுபாடறிதல் வேண்டும். பால் தயிராய்த்திரைந்தபின் மீண்டும் பாலாகாதது போல்,வடமொழி கலந்து ஆரிய வண்ணமாய்ப் போன திரவிடமும் மீண்டும் தமிழாகாது. வடமொழிக் கலப்பால் திரவிடம்உயரும்; தமிழ்தாழும். ஆதலால், வடசொல் சேரச் சேரத் திரவிடத்திற்கு உயர்வு; அது தீரத்தீரத் தமிழிற்கு உயர்வு. திரவிடம் என்ற மொழி நிலையே வடமொழிக்கலப்பால் தான் நேர்ந்தது. அல்லாக்கால்அது கொடுந்தமிழ் என்றே பண்டு போற் கூறப்படும். 'தமிழ் தனித்தியங்கும்; திரவிடம் வடமொழித் துணையின்றித்தனித் தியங்காது.

இங்ஙனம், வடமொழியை நட்பாகக் கொள்ளும் திரவிடத்திற்கும் பகையாகக் கொள்ளும் தமிழிற்கும், ஒரு சிறிதும் நேர்த்தம் இருக்க முடியாது. ஆதலால், தமிழ், தமிழன், தமிழ்நாடு என்ற சொற்களன்றித் திரவிடம், திரவிடன், திரவிடநாடு என்ற சொற்கள் ஒலித்தல் கூடாது. திரவிடம் அரையாரியமும் முக்காலாரியமுமாதலால், அதனொடு தமிழை இணைப்பின், அழு

கலொடு சேர்ந்த நற்கனியும் கெடுவது போல் கெட்டுப் போம். பின்பு தமிழுமிராது, தமிழனுமிரான், இந்தியா முழுதும் ஆரியமாய் விடும்.

7. திறமைபற்றி வேலை கொடுத்தல்

தகுதிபற்றி வேலையென்று தவறான முறையில் இன்று தகுதி மதிப்பிடப்படுகின்றது. தேர்வில் உயர்ந்த மதிப்பெண்வாங்கியவரே தகுதி மிக்கவரென்று பொதுவாய்க் கருதுகின்றனர். உயர்ந்த மதிப்பெண் உருப்போட்ட பயிற்சியையோ நினைவாற்றலையோ தான் காட்டும். உடலியல் தகுதி, உளவியல் தகுதி, ஒழுக்கவியல் தகுதி, மதியியல்தகுதி, கல்வியியல் தகுதி, ஆவியியல் தகுதி எனத் தகுதி அறுவகைப்படும். இவற்றோடு இடவியல் தகுதியும் சேரின் எழுவகையாம்.

தகுதிபற்றி வேலை கொடுப்பின், ஊர்காவல் துறைக்கும் படைத்துறைக்கும் கள்ளரும் மறவருமே சிறப்புத் தகுதியுடையவராம். அடவித்துறைக்கு (Forest Dept.) இருளரும் குறும்பருமே ஏற்றவராம். மருத்துவத் தொழிற்கு அருளும் அன்புமுடையாரும், தீர்ப்பாளர் அல்லது நடுவர் தொழிற்கு நடுநிலையுடையாருமே உரியவராம். இங்ஙனம் அவ்வத் துறைக்குரிய உண்மைத் தகுதிகளை நோக்காது, உயர்ந்த மதிப்பெண் வாங்கியவர்க்கே வேலை கொடுப்பது, அறியாமையின் பாற்பட்ட செயலாம்.

கடந்த மூவாயிர ஆண்டாக அரசியலுதவி பெற்ற பொதுக் கல்வி தமிழர்க்கு விலக்கப்பட்டிருந்ததினாலும், இற்றைவறுமையினாலும்பல தமிழ்ச் சிறுவர் சிறுமியரின் மதி நுட்பம் வெளிப்படவில்லை. இலவசக் கட்டாயத் துவக்கக் கல்வி புகுத்தப்பட்டுப் பல்லாண்டு சென்றபின்னரே, அது விளங்கித்தோன்

கடவுளுக்கு முதல் பரிசு!

வைத்தீஸ்வரன் கோவில் முத்துக்குமார சாமிக்கு அரசாங்கப் பரிசிப் பத்திரக் குலுக்கலில் ரூ 7500-பரிசு கிடைத்துள்ளதாம். கோயில் தேவஸ்தானம் பரிசுப் பத்திரம் வாங்கியிருந்தது.

றும். அதற்குமுன் தமிழர் உயர்நிலைக்கல்விக்குத் தகாத வர் என்று பொதுப்படக் கூறுவது இனக்கொலை யாகும்.

8. அறிவியற் கல்வி கற்றல்

அறிவை மிகுப்பதும் அடிமைத் தளையை அறுப்பதும் அறிவியற் கல்வியே. அறிவியல் வளர்ச்சியால் ஏற்பட்ட புதுப்புனைவுப்படைக் கலங்கள் தீமைக்குப் பயன் படுத்தப்பட்டின், அது அவற்றை ஆள்வார் குற்றமேயன்றி அறிவியலின் குற்றமன்று. எறியப்பட்ட கல் ஒருவரைக் காயப்படுத்தின், அது எறிந்தார் குற்றமேயன்றிக் கல்லின் குற்றமன்று.

அறிவியற் கல்வியைத் தமிழ் வாயிலாய்க் கற்றலோடு ஆங்கில வழியாகவுங் கற்றல் வேண்டும்.

அடிப்படைக்கல்வி (Basic Education) இக்காலத்திற் குரியதன்று. அது மக்களை அநாகரிகக் கால நிலைக்கே கொண்டு போய் விடும். தமிழ் மாணவர்க்குக் கைத்தொழில் மனப்பான்மை யுண்டு பண்ணுவதே அதன் நோக்கம்.

9. மொழியியல் தன்னாட்சி

தமிழ், திரவிடமொழிகளைப் போல் ஆரியச் சார்பு கொள்ளாமையாலும், வடமொழியையும் இந்தியையும் ஏற்காமையாலும், தமிழ் நாட்டிற்கு மொழியியல் தன்னாட்சி (Linguistic Autonomy) பெறுதல் வேண்டும். போக்குவரத்து, தற்காப்பு, வெளிநாட்டுறவு ஆகிய முத்துறையிலும், இந்தியக்கூட்டரசு அடங்கியிருக்கலாம்.

10. முட்டுக் கட்டையிட்டுக் கொள்ளாமை

தமிழரின் முன்னேற்றத்திற்குப் பாடு பட்டு வரும் அமைப்புக்களுள், நயன்மை (நீதி)க் கட்சி நாட்டுப்பற்றும் தாய்மொழி யுணர்ச்சியும் பொதுமக்கள் தொடர்புமில்லாமலும், திராவிடர் கழகம் நம்பாமதத்தை (நாஸ்திகத்தை)ப் பரப்பியும் திராவிடர் முன்னேற்றக் கழகம் தமிழ்நாடு என்னுங் கொள்கையை விட்டுவிட்டுத் திராவிடநாடு என்றும் பொருத்தமற்ற கொள்கையைக் கடைப்பிடித்தும், தமக்குத்தாமே முட்டுக் கட்டையிட்டுக் கொண்டன. இவை நீங்கினலொழிய முன்னேற்றமும் வெற்றியுமில்லை.

தமிழ் என்னுஞ் சொல்லிலுள்ள உணர்ச்சியும் ஆற்ற

லும், திரவிடம் என்னுஞ் சொல்லில் இல்லை, திரவிடம் பனிமலை (இமயம்)வரை பரவியுள்ளது. தமிழ் சென்னையைத் தலைநகராகக் கொண்ட தென்னாட்டில் மட்டுமுள்ளது. தமிழ்வேறு, திரவிடம் வேறு, தமிழையும் திரவிடத்தையும் இணைப்பது பாலையும் தயிரையும் கலப்பதுபோன்றதே. தமிழ்நாடு பிரிந்தபின், குறைந்த பட்சம் தென்னாட்டுத் திரவிடரெல்லாம் தமிழரோடு கூடி மிகப்பரந்த புலனங்களில் (விஷயங்களில்) ஒரு கூட்டொப்பந்தம் செய்யும் போதே,தி. மு. க சொல்லும் திரவிடம் தோன்றும். அதற்கு இன்று தமிழர் மட்டும் முயல்வது, வானத்து மீனுக்கு வன்றூண்டிலிட்ட கதையே யாம்.

இதுகாறுங் கூறியவற்றால் உண்மை நிலைமையை உள்ளவாறுணர்ந்து, நடைமுறைக் கொவ்வாத வீண் கொள்கைகளையும் வீருப்புக்களையும் விட்டுவிட்டு, எடுத்த முயற்சி இடையூறின்றி வெற்றி பெறுதற்பொருட்டு, பொது நலத்தை முன்வைத்து ஒற்றுமையாகப் போராடி, முன்னேற்றப் பாதையில் முனைந்து செல்க.

பகைவனுக்கருள்வாய் !

நேற்று ஷீலா தியேட்டரில், இரண்டாவது ஆட்டத்தில் என்னுடைய மணிப்பர்சை திருடிக் கொண்டு போன சகோதரருக்கு ஓர்வேண்டுகோள். அதில் இருக்கும் கரன்ஸி நோட்டுக்களை மாற்றவோ, பாங்கியில் செலுத்தவோ நினைக்க வேண்டாம். காரணம்அதுசர்க்கார்நோட்டல்ல! தனியார் துறையில் தயாரிக்கப்பட்டது என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

சிவ சைவம்!

கவிஞர் தமிழ்முடி

சேயாந் தனது கன்றிற்கும்-பாலைச்
சிறிதாய் நல்கிப் பெருமளவில்
தாயைப் பெற்ற பாட்டிக்கும்-பெற்ற
தாயாய் அமுதப் பாலூட்டிக்

காக்கும் அன்புப் பசுவுன்போல்-தியாகம்
காட்ட வல்லார் பிறருண்டோ?
தாக்கும் அடியுந் தான் தாங்கி-நல்ல
சாது போல நலஞ் செய்வாய்!

அன்புத் தமிழின் காதலினல்-கன்றை
அம்மா! என்றே தானழைத்து
இன்பத் தமிழை ஊட்டுவிக்கும் -பெருமை
என்னே! என்னே! பசுவாழ்க!

தென்னுடைய சிவன்-சைவம்-ஞாலம்
தெரியக் காட்டும் திருநீற்றை
நன்றே செய்யும் சாணமதை -நாளும்
நல்கும் பசுவே சிவ சைவம்

வலிமை வேல், வாள் இருந்தாலும்-அகிம்சை
வாதி அவற்றைச் செலுத்தாமல்
நலியப் பிறர்செய் துயர் தாங்கி-நன்மை
நாளும் பணிவாய்ச் செய்வதுபோல்,

பாய்ந்து கொல்லும் கொம்பிரண்டை-நீதான்
பசுவே பெற்று வாழ்ந்தாலும்
தோய்ந்த அன்பின் வழிநின்று-தீமை
தோற்று தின்ப அருள்செய்வாய்!

புண்ணியக் கங்கை நதிகளிலும்-பசுநீர்
புனிதம் திட்டைப் போக்குமுடன்!
பெண்கள் போல வீட்டிற்குச்-செல்வம்
பெருக்கும், பெருமை அழகாகும்.

எனக்கு வேணும்

அழகு மிகுந்தது வாய்—எனக்கோர்
அறை யிருக்க வேணும்-அங்கே
எழிலான மேசை யொன்றும் நல்ல
எழுது கருவிகளும்—முன்னைக்
கழகப் புலவர் செய்த-உயர்
கருத்துக் குவிந்திருக்கும்-இன்பப்
பழகு தமிழ் நூற்கள் பலப்
பலவும்இருக்க வேண்டும் !
பகலவன் ஒளிக் கதிர்கள்-அங்கே
பாய்ந்து வரவேணும்
சுகமான தென்றல் வந்து-என்னைத்
தொட்டுச் செல்ல வேணும்
அகத் தெழுமாம் கற்பனையை-நான்
அப்படியே வடித் தெடுத்துச்
சகத்திற்கு வழங்குதற்கே-தமிழ்த்
தாயின் அருள் வேணும்-தமிழ்த்
தாயின் அருள் வேணும்.

—நாரா நாச்சியப்பன்

நீ என்றேன் நான்

வலம்புரி அண்ணாமலை

தமிழ், உயிரைக் காட்டிலும் சிறந்தது என எண்ணுகின்றவன் நந்தி வர்மப் பல்லவ மல்லன், இசைத் தமிழைக் கேட்பதற்காகவே, இரு செவிகளும் படைக்கப் பட்டன என்ற எண்ணம் உடையவனும் ஆவான். அவன் மனைவியாகிய பட்டத்தரசி, கணவன் கற்பித்த வழி நடக்கும் கற்பரசி ஆவாள். நல்ல தமிழறிந்தவள். நாவன்மை மிக்கவள். மேலும், இசை இனிக்கப் பாடும் இயல்புடையவளும் ஆவாள்.

நந்தி வர்மனைக் காணப் பாவலரும் நாவலரும், பாணரும் விறலியரும், பழுத்த மரத்தை நாடி வரும் பறவைக் கூட்டங்களைப் போல வந்து கொண்டே இருப்பார்கள். வந்தவர்களை வரவேற்று வரிசை அறிந்து பரிசு வழங்குவான் நந்திவர்மன். ஒரு நாள், பாணன் ஒருவன் நந்தி வர்மனைக் காண வந்தான். கண்டான். பண்ணிசைத்தான். பரிசு பெற்றான். பண்ணிசைக்கு மன்னன் உருகுவதைக் கண்ட பாணன், ஊர் ஊராகச் சுற்றி அலைவதை விட்டுவிட்டு, மன்னவனை மயக்கி அவன் அடி நிழலிலேயே நிரந்தரமாகத் தங்குவதற்குத் திட்டம் தீட்டி விட்டான்.

கணிகை ஒருத்தியை மன்னவனுக்கு அறிமுகம் செய்து வைத்தான். நாளாசரியில், நந்திவர்மன் அரசியை மறந்தான். கணிகையே கதி மோட்சம் என எண்ணி, அல்லும் பகலும் அவள் மாளிகையிலே வாழ்ந்து வந்தான். பட்டத்தரசி ஒருத்தி உண்டு என்ற சுயநினைவே இல்லாதவனாகிவிட்டான்; இல்லை, ஆக்கப்பட்டு விட்டான். இவ்வளவும் யாரால் வந்த வினை? அந்தப் பாணனால் வந்த வினை.

அரசி கண் கலங்கினாள். கற்புடையவளாயிற்றே. கற்புடையவர்கள் கண்ணீர் விடுவதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்? கணவன் தானாக உணர்ந்து திருந்தினா

லன்றித், தாங்கள் தடுத்துத் திருத்த வழியில்லையே. ஏன் தெரியுமா? கற்புடைய மனைவி, கணவன் விருப்பத்துக்கு மாருக நடக்கக் கூடாது. அவன் விரும்பியவரை வெறுக்கவோ பழிக்கவோ கூடாது. இப்படிப் பெண் மட்டும் கட்டுப் படுத்துகிற ஒருதலைச் சட்டம் ஒன்று இருக்கிறதே. கோவலன் மனைவி கண்ணகியைப் போல, நந்திவர்மனின் மனைவியும் அச்சட்டத்திலே நம்பிக்கை உடையவளாக இருந்தாள். ஆகவேதான், காலம் வரும் என எண்ணிக் கண்ணீரை வடித்து விட்டு அமைதியாக இருந்தாள். அவள் நினைத்தபடி காலமும் வந்துவிட்டது.

மன்னவனுக்கும் கணிகைக்கும் மனக் கசப்பு ஏற்பட்டு விட்டது. எனவே, மன்னவன் கணிகையைப் பிரிந்து அரசியின் மாளிகைக்குச் செல்ல முடிவு செய்துவிட்டான். இதுவரை கணிகையின் மாளிகையிலே சுகமாக வாழ்ந்து வந்த பாணன், இதை அறிந்து வருந்தினுன். இருவரையும் சமாதானப் படுத்த முயன்ருன். முயற்சி தோல்வியைத் தழுவியது. இனி நாடோடியாக ஊர் சுற்ற வேண்டியதுதானே என்று எண்ணி ஏங்கும் பொழுது, அவன் உள்ளத்திலே ஒரு யோசனை தோன்றியது. அஃதாவது,மன்னவனுக்கும் அரசிக்கும் சமாதானத்தை உண்டு பண்ணிவிடலாம் என்று எண்ணினுன். அங்குவந்த நந்திவர்மனும் அக் கருத்தையே வெளியிட்டான்.

பாணன், அரசியிடம் சமாதானத்தூது செல்ல முடிவு செய்தான். ஏற்கனவே, அரசியிடமிருந்து மன்னவனைப் பிரித்தது நாம் தான் இனி எப்படிச் சென்று, அரசியிடம் பேச்சைத் தொடங்குவது என்று எண்ணினுன். அப்பொழுது அவன் மூளையில் ஓர் எண்ணம் பளிச்சிட்டது.'அரசியின் மாளிகை அருகில்தான் உள்ளது. அரசி இசைப் புலமை உடையவள்' எனவே, இன்று இரவு கணிகையின் வீட்டிலிருந்து இசைப் பாடல்களைப் பாடுவது. விடிந்ததும் அரசியின் மாளிகைக்குச் சென்று, இரவு பாடிய இசைப்பாடல்களைப் பற்றிய கருத்தைக் கேட்பது, அதன் மூலமாகப் பேச்சைத்தொடங்கிக் கொள்வது' என்று முடிவு செய்தான். அது போல இரவு முழுவதும் பாடினுன்.

மறுநாள் விடிந்தவுடன் பாணன் அரசியின் மாளிகைக்குச் சென்ருன். அரசியைக் கண்டான். 'தான் இரவு முழுவதும் பாடிய இசைப்பாடல்களைத் தாங்கள் கேட்டிருக்கலாமே? அதைப்பற்றிய தங்கள் கருத்து என்ன?'' என்று கேட்டான்.

அரசி, வஞ்சம் தீர்த்துக் கொள்ள இதுதான் தக்க சமயம் என்று எண்ணினாள். ஆனால், கற்புடையவளாயிற்றே, மன்னவனையோ, அல்லது அந்த மங்கையையோ, அல்லது அவர்கள் இருவரையும் ஒன்று சேர்த்து வைத்த பாணனையோ, வெறுக்கவோ பழிக்கவோ கூடாதே! அந்த ஒருதலைச் சட்டத்திற்குக் கட்டுப்பட்டு, இரத்தினச் சுருக்கமாகப் பாணனுக்குக் கூறும் பதிலைப் பாருங்கள்.

'ஈட்டு புகழ்நந்தி
பாண கேள்!

என்று தொடங்குகின்றாள். தொடங்கும்பொழுதே, மேலும், மேலும் புகழைச் சம்பாதிக்கின்ற எங்கள் நந்திவர்மப் பல்லவ மல்லரின் பாணனே கேள்' என்று, தன் மன்னவனைப் புகழ்ந்து, அதன் மூலமாகப்பாணனையும் புகழ்ந்து விடுகின்றாள். பிறகு,

"எங்கையர்தம் வீட்டிருந்து
பாட விடியளவும்

என்று கூறுகின்றாள். 'என் தங்கையின் வீட்டிலிருந்து கொண்டு நீ விடியுமட்டும் பாடியதைக் கேட்டேன்' என்று கூறுகின்றாள். இங்கே மன்னவன் விரும்பிய அந்த மங்கையைத் தன் தங்கையாக ஏற்றுக் கொண்டுவிட்டாள். இவற்றிலிருந்து, அரசி அந்த ஒருதலைச் சட்டத்திற்குக் கட்டுப்பட்டவளாகி மன்னவனையும், பாணனையும், கணிகையையும் புகழ்ந்துக் கூறியது தெரியவரும். மேலும்

"காட்டில் அழும்பேய்
என்றாள்அன்னை,"

என்று கூறினாள். அஃதாவது 'அப்பாட்டைக்கேட்ட என் தாய், சுடுகாட்டிலே பேய் அழுகிறது' என்று கூறினாள். அப்பொழுது அங்கு சுற்றியிருந்தவர்கள் எல்லோரும் ஒன்றுகூடிக் கொண்டு, என்தாய் சொன்னது தவறு. பேய் அழவில்லை என்று சொன்னார்கள். உடனே என் தாய் அவர்களைப்பார்த்துப்' பேய் அழவில்லை என்றால், பின்னே அது தான் என்ன? என்று கேட்டாள். உடனே,

பிறர்நரிஎன்றார்'

'சுற்றியிருந்த பிறர் எல்லோரும். 'அதுவா? அது, நரி சுடுகாட்டிலே ஊளையிடுகிறது' என்று சொன்னார்கள். அப்பொழுது, தோழி ஓடி வந்தாள். நீங்கள் அத்தனை பேரும் சொன்னவையெல்லாம் தவறு தவறு என்று கத்தினாள். அங்கிருந்தவர்கள் 'ஏண்டி' கத்துகிறாய்? நாங்கள் சொன்னவை தப்பு என்றால், நீ தான் சொல்லேன் பார்க்கலாம்' என்று கூறினார்கள். உடனே,

"தோழி நாய் என்றாள்

‘பேய் அழவுமில்லை. நரி ஊளையிடவுமில்லை. நாய் குலைக்கிறது’ என்று தோழி கூறினாள். நான் அவர்களை எல்லாம் பார்த்து ‘நீங்கள் அத்தனை பேரும் சொன்னது தப்பு’ என்று சொல்லிவிட்டு, உண்மையைச் சொன்னேன். என்ன சொன்னேன் தெரியுமா?

‘நீ என்றேன் நான், ‘எங்கள்நந்தி வர்மப் பல்லவரின் பாணனாகிய நீதான் பாடுவது என்று அவர்களுக்கு உண்மையை எடுத்துச் சொன்னேன்’ என்று கூறினாள். பாணன் தலை குனிந்தான். பாணனைப் பேய் என்றும், நரி என்றும் நாய் என்றும் சொல்லாமல் சொல்லிய நயம் — சுவைக்கத் தக்கதல்லவா? அந்த வெண் பாவை முழுதும் ஒரு முறை படித்துச்சுவையுங்கள்.

“ஈட்டு புகழ்நந்தி பாணகேள்!
-எங்கையர்தம்
வீட்டிருந்து பாட விடியளவும்
-காட்டிலழும்
பேய்என்றாள் அன்னை ;
-பிறர்நரிஎன் றார்தோழி
நாய்என்றாள்;
-நீஎன்றேன் நான்.”

நாலுவரி வெண்பாவிலே நந்திக் கலம் பக ஆசிரியன் தன் நாவன்மையைக் காட்டி விட்டானே! இதுவல்லவா பாடல்! சுவைக்கிறதா தமிழ்? சுவையுங்கள்! சுவையுங்கள்!

—o—

காஞ்சிப் பட்டே... காருண்யப் பட்டு...

சாதாரணமாக ஒருமுழம் பட்டு நெய்வதற்கு பல லட்சம் பட்டுப்பூச்சிகள் கொல்லப்படுவதால் காஞ்சி காமகோடி பீடத்தார் அஹிம்சாப் பட்டு தயார் செய்திருக்கிறார்களாம். அஹிம்சாப்பட்டுக்கு உபயோகிக்கப் படும் நூல் ஒரே மாதிரியான பட்டுப்பூச்சியால் கட்டப் படும் கூட்டிலிருந்துதான் தயாரிக்கப்படுகிறதாம் — ஆனால் அப்பூச்சி தன் கூட்டைவிட்டுப் பறந்துபோன பின்புதான் அந்தக் கூட்டின் நூல் பட்டுத்தயாரிப்புக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறதாம். இதனால் எந்த ஜீவனுக்கும் தொல்லையில்லையாதலால் - அந்தப்பட்டுக்குப் பெயர் அஹிம்சாபட்டாம்.

அகப்பொருள் விளக்கம்

பொருள் இலக்கணம் :

உலகத்திலுள்ள ஒவ்வொரு மொழியிலும் இலக்கண நூல்கள் உண்டு. எனினும் அவை மொழி இலக்கணத்தையே எடுத்தோதுவனவாகும். ஆயின் தமிழ் இலக்கணம் தமிழ் மொழியின் இலக்கணத்தையும் அம்மொழியினைப் பேசும் மக்களது வாழ்க்கையின் இலக்கணத்தையும் எடுத்துக்கூறுதல் வியத்தற் பாலது. இத்தகைய தனிச் சிறப்புத் தமிழ்மொழி ஒன்றுக்கே உண்டு. இஃதொன்றே தமிழரது நாகரீகம், உலக மக்களின் தனிப்பட்ட நாகரீகத்தைவிட மிகச் சிறந்தது என்பதற்குப் போதிய சான்ருகும். வாழ்க்கையின் இலக்கணம், அக இலக்கணம்' புற இலக்கணம் என இருவகைப்படும். ஒருவனும் ஒருத்தியும் கூடி வாழ்கின்ற வாழ்க்கையின் விவரங்களை விரித்துக் கூறுதல் அகப் பொருள் இலக்கணமாகும். அஃதாவது இன்பப் பகுதியே அகப் பொருளாகும். அறம், பொருள், வீடு என்னும் மூன்று பேறுகளைப் பற்றிய செய்திகளைக் கூறும் இலக்கணம் புறப் பொருள் இலக்கணம் எனப்படும். அஃதாவது ஒருவனது வாழ்க்கையின் இன்பப் பகுதி நீங்கலாக உள்ள ஏனையச்செய்திகள் புறப் பொருள் என்று தொல்லாசிரியரால் கொள்ளப்பட்டன. ஆகவே, பண்டைத் தமிழர் பாங்குற வகுத்த அகம், புறம் என்ற இரண்டினுள் வடமொழியாளர் வகுத்துக்கூறும் பேறுகள் நான்கும் (அறம், பொருள் இன்பம், வீடு) அடங்குதல் காண்க.

வாழ்க்கையின் உயிர் நாடி :

மனிதப்பேறுகள் நான்கினுள் அகப்பொருளென்னும் இன்பப் பகுதியே வாழ்க்கையின் உயிர் நாடியாக விளங்குவது. மனிதன் இன்பம் பற்றியேபொருளைத் தேடுகிருன். பொருள் கொண்டு அறஞ்

டாக்டர். மா. இராசமாணிக்கனுர்

செய்கிறான். இம் முப்பேறு களும் செம்மையுறச் செய்ப வன் நான்காம் பேற்றை இயல்பாகவே அடைவான். இதனாற்றான் பண்டைத் தமிழர் அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றை யுமே வாழ்க்கையின் உயிர் நாடியாகக் கொண்டு வாழ்ந்து வந்தனர். என்பது சங்கப் பழம் பாடல்களால் அறியக் கிடக்கிறது. தொல்காப்பியர்க்கு முற் பட்ட தொல்லாசிரியர்கள் வகுத்த அகம், புறம் என்னும் இரண்டு பகுதிகளையும் தழுவி, தம் காலத்திய மாறு தல்களையும் உள்ளடக்கித் தொல்காப்பியர் எழுதியுள்ள பொருள் இலக்கணம் ஒன்றே இன்றுள்ள சிறந்த ஆதார இலக்கண நூலா கும், அதனை இலக்கணமாக வும் அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு முதலியவற்றையும், திருக்கோ வையார் முதலியவற்றையும் இலக்கியமாகவும் கொண்டு ஆராயின், பழந்தமிழ்ப் பெருமக்கள் பகுத்தறிவோடு அமைத்த அகப் பொருளென் னும் அழகிய இன்ப மாளி கையைக் கண்டு களிக்கலாம். இவற்றுடன் சைவ சமய ஆசிரியர்கள் பாடியருளிய திருமுறைகளையும் ஆழ்வார் கள் பாடியருளிய அருட் பாடல்களையும் பக்கத்தில் வைத்து உணர்ச்சியோடு படிக்கப்படிக்க, அப் பக்த சிகாமணிகள் அகப் பொருள் இலக்கணத்தைத் தமது பக்தி நெறிக்கே உயிர் நாடியாகக் கொண்டிருந்தனர் என்பது தெள்ளிதில் உணரலாம்.

அகப்பொருள் இலக்கணம்:

இவ்வகப் பொருள் இலக் கணத்தை ஆராய்வதால் பண்டைத் தமிழ் மக்கள் மணம் செய்து கொள்ளும் முறைமை, அவர் தம் காதல் வாழ்க்கை, தலைவன் தலைவிய ரது இன்பத்திற்கு உதவும் பாங்கன் பாங்கியர், களவுப் புணர்ச்சியில் தலைவியும் தோழியும் தலைவனைச்சோதிக் கும் முறைகள், தனக்கு உண் டாகும் பல இடுக்கண்களைப் பொருட்படுத்தாமல் தலை வியை அடைவதில் தலைவன் கொள்ளும் முயற்சி, களவு வெளிப்பட்டபின் இரு திறத் துப்பெற்றோரும் நடந்து கொள்ளும் முறைமை, பெற் றோர் உடன்படாதபோது தோழி தலைவியைத் தலைவ னோடு கூட்டியனுப்புதலும் அங்ஙனம் அனுப்பும் போது அவள் தலைவனிடம் கூறும் வாழ்க்கைக்கு இன்றியமை யாத உபதேசமும், காதலர்க் குள் ஏற்பட்ட களவைத் தோழி தாய்மார்க்குக் குறிப் பாக உணர்த்தும் திறமை யும் இன்னபிறவும் நாம் அறிந்து மகிழலாம்.

களவொழுக்கம் :

இனி, இவை பற்றிய செய்தியைக் காண்போம்:-

ஓர் இளைஞன் (தலைவன்) பூம்பொழில் ஒன்றில் தனித்துப் பூக் கொய்யும் நங்கை (தலைவி) ஒருத்தியைக் காண்கிறான். இருவரும் ஒருவரையொருவர் நோக்குகின்றனர். இருவர் விழிகளும் சந்திக்கின்றன. இருவரும் மாறி இதயம் புகுகின்றனர். அவ்வமயம் உள்ளத்துத் தோன்றும் இன்ப உணர்ச்சியே அவ்விதம் பிற்காலக் காதல் வாழ்க்கைக்கு அடிப்படியாக அமைகின்றது. பார்வை ஒன்ற, உள்ளம் ஒன்ற, உணர்ச்சி ஒன்ற அவ்விருவரும் ஒருயிர் ஈருடல் ஆகின்றனர். அவ்வின்பப் பூங்காவில் உள்ள நறுமணமுள்ள மலர்களிடையே நங்கை-நம்பி ஆகிய இருவர்தம் காதல் அரும்பும் போதாகி மலர்ந்து மணம் வீசுகின்றது. அம்மட்டோ! தேனும் பிலிற்றுகின்றது. காதல் மணமும் காதல் தேனும் அப்பூங்காவைப் பொன்னுலக மாக்குகின்றது. அன்று முதல் அவர் தம் காதல் வாழ்க்கை கனவிலேயே நடந்து வருகின்றது.

எனினும் நீடித்த களவு வாழ்க்கைக்குத் தோழியும் தோழனும் உதவி செய்யும் பாத்திரங்களாக அமைகின்றனர். தோழி தலைவனது காதலைப் பரிசோதிக்கும் திறம் மிக வியந்து பாராட்டத் தக்கது. தலைவியைத் தலைவன் பெற முடியாது என்பதற்குப் பல நியாயங்களைத் தோழி கூறுகிறாள். அவளைத் தான் பெறுவிடில் ‘மடல்’ ஏறுவதாகத் தலைவன் சூள் உரைக்கின்றான். இங்ஙனம் பலவாறு முதற்கண் அவனது உள்ளத்தைச் சோதித்த தோழி, அவனோடு தலைவியைக் கூட்டுகிறாள்; அக் கட்டம் நடைபெறும் பொழுதே மீண்டும் அவனைச் சோதிக்கக் கருதி, பகலில் வருகின்றவனை இரவில் வரும்படியும், இரவில் வருகின்றவனைப் பகலில் வருமாறும் மாறி மாறி வரச் செய்து அவனுக்குத் துன்பத்தைத் தருகின்றாள். தலைவி வீட்டில் அடக்கப்பட்டாள். ஆதலின் அவளைப் பெற நள்ளிரவில் வருக என்பாள். தலைவனும் அவள் சொற்படி நடப்பான். தோழி மீண்டும், “நீ வரும்பொழுது நாய் குரைக்கிறது; காவலர் திருடன் என்றெண்ணித் தேடுகின்றனர். ஊர் விழித்துக் கொள்கிறது” என்றெல்லாம் கூறி அவனைத் துன்புறுத்துகின்றாள். தலைவன் இத்துணைச் சோதனைகட்கும் உட்பட்டு அவள் சொற்படி நடந்து, தான் தலைவி மீது கொண்ட களங்கமற்ற காதலின் உறுதியை வெளிப்படுத்துகிறான்.

அறத்தொடு நிற்றல்!

தலைவியும் நாங்களும் நீராடுகையில் தலைவி கால் தவறிச் சுனையில் வீழ்ந்து விட்டாள். நாங்கள் அலறினோம். அவ்வமயம் கட்டழகுள்ள இளைஞன் ஒருவன் அங்குத் தோன்றினான். சரேலென நீரிற் குதித்தான். தலைவியை அணைத்துக்கொண்டு சுனையினின்றும் வெளிப்போந்தான். தன் உயிரைக் காத்த அவ்வண்ணல்பால் தலைவி உள்ளம் நெகிழ்ந்தாள்.

தலைவியும் யாங்களும் பூப்பறிக்குங்கால் தலைவி விரும்பியதொரு பூவை நாங்கள் பறிக்கக் கூடவில்லை. தலைவி வாட்டமுற்றாள். அப்பொழுது நம்பி ஒருவன் தோன்றி அம்மலரைப் பறித்துத் தலைவியின் கையிற் கொடுத்தான். தலைவிஅவன்பால்நன்றியறிதல் உடையவள் ஆயினள்.

பண்டொருநாள் யாங்கள்விளையாடிக் கொண்டிருந்தபோது காட்டானை ஒன்று மதங்கொண்டு எங்களை நோக்கி ஓடிவந்தது. தலைவி அலறினாள். அவளது மையுண்ட கண்களிலிருந்து நீர் அருவிபோலப் பெருகியது. அவ்வமயம் கையில் வேலேந்திய இளைஞனொருவன் அங்குத்தோன்றினான்; அச்சத்தால் அலறிய தலைவியைத் தன் இடக்கையால் அணைத்துநின்று வலக்கையால் தாங்கிய வேலால் யானையைக் குத்தினான்; யானை பிளிறிக் கொண்டு ஓடியது. தன் உயிரைக் காத்த அத்தலைவன்பால் தலைவியின் உள்ளம் ஈடுபட்டது. இங்ஙனம் கூறுதல் முறையே; புனல்தருபுணர்ச்சி, பூத்தருபுணர்ச்சி களிறு தருபுணர்ச்சி, எனப்படும். இங்ஙனம் தோழி கூறுதலை; அறத்தொடு நிற்றல், என்று இலக்கணம் கூறும்.

தான் காதல் கொண்ட காதலனுக்குத் தன்னைத் தன் பெற்றோர் தாரா ரெனத் தெரிந்ததும், தலைவி தலைவனுடன் ஒடுதல், உண்டு. இஃது, 'உடன் போக்கு' எனப்படும். அவன் அவளைத் தன் வீடு கொண்டு சென்று மணம் முடித்துக் கொள்ளுதலும் உண்டு. போகும் பொழுதே தலைவியைச் சேர்ந்தவர் இடைமறித்துக் கொண்டு சென்று தலைவி வீட்டில் திருமணம் நடத்தலுமுண்டு. சரியாகக் கூறுமிடத்து, இவ்வுடன் போக்கிலிருந்தேகற்புத் தொடங்கி விடுகிறது. இதன் பின் நிகழ்வதெல்லாம் கற்பியற் செயல்களெனப்படும். கற்பு ஒருவன் ஒருத்தியோடு உள்ளம் ஒன்ற வாழ்க்கை நடத்தல்.

நிலம் பெயரினும்...

இன்றைக்கு எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தார் ஒரு புலவர். அவர் தற்பெருமையற்றவர். தன் வாழ்வை வையத்து வாழ்வுக்குக் கொடுத்த பெருந்தகையார். தன் பெயரும் வேண்டாத பெரியவர் அவர். அவரை, அவர் பெற்றோர் என்ன பெயரிட்டழைத்தார்களோ நாமறியோம். தமிழ் நாடு அவரை நேரில் எவ்வாறு 'வருக'வென வரவேற்றதென்பதும் நமக்குத் தெரியாது. அத்தகைய பெயர் வேண்டாப் பெருநெறியிலே வாழ்ந்து உலகையும் வாழவைக்க வழிகாட்டிய அவரை இன்றையத் தமிழ்நாடு 'இரும்பிடர்த் தலையார்' என அழைக்கின்றது. ஆம்! அவர்தம் பாடலில் வரும் நல்லபொருள் பொதிந்த தொடராகிய 'இரும்பிடர்த் தலையிருந்துஎன்றதனாலேயே அவர் நாட்டுக்கு அறிமுகமானார். இவ்வாறே எத்தனை, எத்தனை புலவர்கள் தங்கள் பேரையும், ஊரையும் விளம்பரப்படுத்தாது இருந்து அறமுரைத்து மறைந்தார்கள் என்பதை எண்ணும்போது, இன்று வாழும் வெறும் ஆடம்பரப் பெயர் விரும்பிகளை எண்ணாதிருக்க முடியவில்லை.

நிற்க, இரும்பிடர்த் தலையார் பாண்டியன் கருங்கை ஒள்வாள் பெரும் பெயர் வழுதியைக் கண்டார். அப்பாண்டியன் வீரமும், ஈகையும் அவர் உள்ளத்தைப் பிணித்தன. அப்பாண்டியர் வழிவழி ஆண்ட அறநெறியை எண்ணினர் அவர். அவன் வழிமுறையையும் அவனையும் புகழ்ந்தனர். அவற்றுடன் அப்பெரு மன்னனை நாடிவரும் புலவர் கூட்டங்களை எண்ணினர். காடிடையும் மலையிடையும் கால்கடுக்க நடந்து, வழியில் உண்டாகும் துன்பங்களையும் எண்ணாது, எப்படியாவது பெரும் பெயர் வழுதியைக் காணவேண்டுமென்ற எண்ணத்தோடு நெடுந்தொலைவிலிருந்து மக்கள் கூட்டம் வந்துகொண்டே இருக்கின்றனர். அவர்கள் அவ்வாறு வருவதற்கு இரும்பிடர்த் தலையார் காட்டும் காரணம் 'முன்னம் முகத்தின் உணர்ந்து, அவர் இன்மை தீர்த்தல் வன்மை' என்பதேயாகும். எப்படியும் 'நாம் சென்றால், பெரும் பெயர் வழுதி நம்மைப் புறக்கணிக்க மாட்டான். எப்படியும் நம்மை வறுமை வாழ்வில் இருந்து விடுவிப்பான்' என்ற

பேராசிரியர், அ. மு. பரமசிவானந்தம் M. A. M. O .L

திட உணர்வோடு அவர்கள் வருகின்றார்கள். வந்தவர்களை வழுதி வரவேற்றுச் சிறப்புச் செய்வான் என்பதைப் புலவர் நன்கு உணர்ந்தவர். எனவே, அவ்வாறுவந்தவரைத் திருப்பி அனுப்பாதே என்ற அறத்தை அவர் உணர்த்தவில்லை. மற்றும் அவன் வீரனாக இருக்க வேண்டுமென்ற உணர்வையும் ஊட்டவில்லை. எனினும் இருபத்தாறு அறிவுடைய அப்பாடலின் துறை 'செவியறிவுறூஉ' என்று குறிப்பிடப் பெறுகின்றது. காரணம் என்ன? செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடைய அப்பாண்டிய மன்னனிடம் ஒரே ஒரு அறிவுரையை உரைக்கின்றார் புலவர்.

'நிலம் பெயரினும் நின் சொல் பெயரல்' என்று அவர் கூறி அவனுக்கு அறவழி காட்டுகின்றார். இந்த ஒரு அடிதான் அப்பாட்டின் உட்பொருள் என்பதை, விளக்கத் தான் அதைச் 'செவியறிவுறூஉ' என்ற துறையின் பால் சார்த்தினார் அறிஞர்.

எத்தனையோ ஆண்டுகளுக்கு முன் இரும்பிடர்த்தலையார் கூறிய இந்த அடி, கால இட வேறுபாடுகளைக் கடந்தும் இன்றும் என்றும் யாருக்கும் தேவையான ஒரு நல்ல அறிவு விளக்கமல்லவா! அறிவுடைப் பெருமக்கள் யாராவது ஒருவரை முன்னிலைப்படுத்திக் கூறுவார்களே

உங்களுக்குத் தெரியுமா?

காது குத்தும் இந்தியப் பழக்கம் அமெரிக்கப் பெண்மணிகளிடையேகூடப் பரவிவிட்டதாம். காது குத்துவதற்கென்று ஆயிரக்கணக்கில் கடைகள் திறக்கப்பட்டு, இதுவரை ஒரு லட்சம் அமெரிக்கப் பெண்கள் காது குத்திக் கொண்டுள்ளார்களாம். இந்தச்செய்திகாதுகுத்தாகஇருக்காது என்று நம்புகிறோம்.

*　　　*

55, வயதுள்ள காலூகான் என்ற சர்க்கார் ஊழியர் இதுவரை 99 தடவைகள் இரத்த தானம் செய்துள்ளாராம். கடந்த 17 ஆண்டுகளாகத் தொடர்ந்து இந்தத் தியாகத்தைச் செய்துவருகிறாராம். கூடியசிக்கிரம் 100-வது தடவையாக ரத்த தானம் செய்வதற்கான தருணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறாராம்.

அவர் 24 வயதில் ரத்த தானம் செய்யும்பொழுது 138 பவுண்டு எடை இருந்தாராம். இப்போது அவரின் எடை 144, பவுண்டாம்.

உங்களுக்குத் தெரியுமா?

ஐந்தாவது ஜார்ஜ் மன்னர் காலத்திலிருந்து பிரிட்டிஷ் அரச குடும்பத்தில் ஏராளமான முதல்தரமான பசுக்கள் இருந்துவருகின்றனவாம். செப்டம்பர் மாதம் சுமார் 80 பசுக்கள் ஏலம் போடப்படுமாம். பசுக்களுக்குப் பதிலாக பிரிட்டிஷ் அரசி சாளைகளை வாங்கி வளர்க்கப்போகிறாராம்.

* * *

வார்சாவிலுள்ள யு. எஸ். தூதுவராலயத்தில் 1958 முதல், இரண்டாவது காரியதரிசி பதவிவகித்து வரும் இர்வின் ஸ்கார் பெக் என்பவரை ஓர் போலிஷ் கம்யூனிஸ்ட் அழகி மயக்கி அவர் தன் வலையில் விழுந்தபின்பு விஷயத்தை வெளியில் சொல்லப் போவதாகப் பயமுறுத்தி சர்க்கார் ரகசியங்களை தெரிந்துகொண்டு போய்விட்டாளாம். பெண்களை நம்பாதே என்ற பாடல் நூற்றுக்கு நூறு உண்மைதான்போலும்.

யாயினும், அவர்தம் அகக்கண் முன் என்றும்வாழும் இந்த உலகமே எதிர்நிற்குமன்றோ! இப்புலவர்முன் வழுதி மட்டுமா நின்றிருப்பான். வழி வழி வரும் மனித சமுதாயமே உருக்கொண்டிருந்திருக்குமே! அதனால் அவ்வழி இன்றும் நம்மை இடித்து அறமுரைக்கும் வகையில் அமைந்துள்ளது.

புலவர் அப்படி என்ன சொல்லிவிட்டார். "சொன்ன சொல் தவறாதே" என்று பலரும் சொல்லிய சொல் தானே இது. ஆம்; இல்லை என்று சொல்லவில்லை. எனினும் 'நிலம் பெயரினும்' என்ற தொடரும் கூடவே நிற்பதைக் காணவேண்டும். வழுதி பலத்தால் பெற்ற பெரு நிலப்பரப்பை முன்கூறி, அந்நில வளத்தையெல்லாம் வந்தோர்க்கு வாரி வழங்கும் ஈகையைப் பின்கூறி, இடையில் இவ்வறிவினை வைத்துள்ளார் புலவர். தாய் பெற்ற பெருஞ் செல்வத்தையும் நில உடைமையையும், பிற நலங்களையும் எண்ணித் தருக்கும் தனி மனிதர் வாழ்வதாலன்றோ ஊர்தோறும் பஞ்சமும், நோயும் தலைகாட்டுகின்றன. அதுபோன்ற 'அண்டமெல்லாம் கட்டி ஆளும்' பேரரசுகளாலன்றோ உலக்குக்கே அவதியும், கொடுமையும் விளைகின்றன. ஆகவே, எத்தகைய செல்வ

மும், நாடும் பிறவும் பெற்ரு லும் அவற்ருல் பயனில்லை என்பதை முன் கூறினர்.

உலகில் அறமாற்றுகின்ற பலர், இன்றும் என்றும் பண்ட மாற்றும் பொருளாகவே அவற்றைக் கருதினர். எங்கோ ஒரு ஆய், 'அறவிலை வணிகன் ஆய் அலன்' என்று புலவரால் பாராட்டப்பட்டானேயன்றி, பலரும் பயன் கருதியே அற மாற்றினுன். 'அறம் செய் தான் துறக்கம் புகுவான்' என்று இலக்கணத்திலே எடுத் துக்காட்டாக வருகின்ற அன் பிலே துறக்க வாழ்வுக்கோ மறுமை வாழ்வின் செல்வத் துக்கோ, அறம் பண்ட மாற் ருக அமைந்தது! அன்றி வேறு என்ன? தங்கள் பேரும் புகழும் பரவ வேண்டுமென்ப தற்காகத்தானே இன்றும் பலர் அற மாற்றுகின்றனர். அதுவும் செய்த விலங்கினத் தாரைப் பற்றி இப்போது நாம் எண்ண வேண்டா! அற மாற்றுகின்ற பலர் எவ்வகையி லாவது பயனே புகழோ பெற விரும்புகின்றனர். பாண்டி யன் அத்தகைய புகழைப் பெற்ருன். பொருபடையும் பரந்த நிலப்பரப்பும், புகழும் மட்டும் மனிதனை மனிதனுக் காது. மனிதன் நிறையுடை யவனுக வேண்டுமாருல் அவன் சொன்ன சொல்லைத் தவருதவனுக—நிலம் பெயர்ந் தாலும் தவருதவனுக-இருக்க வேண்டும் என்பதை நன்கு கண்டுணர்ந்தார் புலவர். உணர்ந்ததை அஞ்சாது அரச னுக்கு எடுத்துரைத்து அவன் உள்ளத்தே அறிவொளியைத் தூண்டி அவனை மனிதனுக் கினுர்.

'நிலம்புடை பெயர்வதாயி னும் நின்சொல் பெயரலா காது' என்று இவ்வளவு ஆனந்தமாக அரசனுக்கு அறி வுறுத்திய புலவர் வேறு யாரு மில்லை. நம் வாழ்வுக்கு ஆதா ரம் நிலம். நிலம் அனைத்தை யும் நமக்குக் கொடுக்கிறது. உண்ணவும், உடுக்கவும், வாழ வும், பிற செயல்களாற்றிச் சிறக்கவும் வகை செய்வது இந்நிலமே. எனவே, இந் நிலத்தை இழப்பதென்பது யாருக்கும் எளிதன்று. இதைத்தான், துறவிகள் மண் ணாசை' என்றனர் போலும். இதைப்பற்றி மற்றைய ஆசை கள் தாமே மக்களை வந்து பற் றும் என்பது கண்கூடு. எனவே 'ஆசை பற்றி நிற்கின்ற அடி நிலமே சரிந்து வீழ்ந்தாலும் நீ சொன்னசொல்லில் சரியா தே என்று சொல்வது எவ் வளவு பொருத்தமானது. இன்று உலகில் பல நாடுகளை ஆளும் நல்லவர்களும், உல குக்கு நல்லதை அறிவுறுத்தும் அறிஞர்களுமே தாம் சொன்ன சொல்லைக் காற்றில் பறக்கவிட்டு, தம் வாழ்வை யும் வளத்தையும் தேடிக் கொள்வதை நாம் கண்ணூரக் காண்கின்ருேம்! அக்காலத்

தில் அவர் உணர்த்திய அச் செவியறிவுறூஉ இன்று மிகவும் அழுத்தம் திருத்தமாகச் சொல்ல வேண்டிய ஒன்று அல்லவா? ஆனால், சொல்வது யார்? நல்லறிஞர்கள்; அவர்களுக்கு உள உரமில்லை. எனவே அறிவுறுத்தாத அரசர் ஆளும் நாடுபோல் உலகம் இன்று தன்னிலை இழந்து வருகிறது. அரசியல் தலைவரும், அறிஞரும், பிறரும் இன்று ஒன்றும் சொல்லவில்லையாயினும், அன்று பழம் பெரும் புலவர்கள் இடித்திடித்து எடுத்துக் காட்டிய நீதி வாக்கியங்கள் இன்றும் நம்மிடை இருந்து மறைந்து விடவில்லை. அவற்றுள் ஒன்று—தலைசிறந்தது. 'நிலம் பெயரினும் நின் சொல் பெயரல்' என்பது. உலகம் அதன் வழி நிற்குமாயின் உலகில் மாறுபாடும், பிணக்கும் போரும் பிற கொடுமைகளும் தோன்றுவது ஏது? ஆம்! அவ்வழி முன் தெரிகின்றது. அதில் தளராது நிமிர்ந்து செல்ல மனம்தான் வேண்டும். என்று வரும் அந்த மனம்?

சேமிப்பு இலாபம்

பிரான்சில் ஒரு முக்கிய மருத்துவர் கூட்டத்தில் ஓர் உயிர் நூல் ஆராச்சியாளர் இத் தகவலை வெளியிட்டார்.

உயிர் நூல் ஆராய்ச்சியாளரான ஒரு பெண்மணி தன் கணவனின் உயிர் அணுக்களை-உயிர் அணுக் கிளசரினில் மைனஸ்' 79 டிகிரி செண்டி கிரேடில் உறைத்து வைத்திருந்தாள். அவை எவ்வளவு காலம் உயிர்ச் சத்தோடு இருக்கும் என்று சோதித்துப் பார்க்க ஆசை.

அவள் கணவன் ஒருநாள் மோட்டார் விபத்தில் காலமாகி விட்டான். அதன் பிறகு அந்தப் பெண் இரண்டு முறை கணவனின் ஜீவ அணுக்களைக் கொண்டு செயற்கை முறையில் கருத்தரித்தாள். இரு முறையும் ஆரோக்கிய மான குழந்தைகளைப் பெற்றெடுத்தாள்.

அப் பெண்மணி யார் என்பதை வெளியிட ஆராய்ச்சியாளர் மறுத்து விட்டனர். ஜீவ அணுவை இம் மாதிரி பாதுகாப்பது பிரிட்டிஷ் நிபுணர்கள் கண்டு பிடித்த முறை என்ருர். இந்த முறையில் மனித ஜீவ அணுக்களைப் பாதுகாத்துப் பல நூறு ஆண்டுகளுக்குப் பின்னும் குழந்தை பெற வைக்கலாம் என்று அவர் கருதுகிருர். எதிர் காலத்தில் இந்தச் சேமிப்பு நம் நாட்டிலும் காலடி எடுத்து வைத்தாலும் ஆச்சரியப் படுவதற் கில்லை.

ஒரு மனிதனைக் கண்டேன்!

கவிஞர் சுப்பு ஆறுமுகம்

JAYA

கடவுளால் நாம் பெற்ற அறிவைவிட கடவுளை, நேரில் கண்டிருக்கிறோமா என்னும் கேள்வியால், நாம் பெற்றிருக்கும் அறிவே அதிகம்; இன்னும் புதுக் கேள்வி ஒன்றிருக்கிறது. அதனுல் முழு வளர்ச்சியே பெற்று விடலாம். அதுவே, 'மனிதனை நாம் கண்டிருக்கிறோமா' என்னும் கேள்வி! 'விந்தையாக இருக்கிறதா? உண்மையின் குழந்தைப் பருவப் பெயர் இதுதானே!

மனிதனைக் கண்டிருக்கிறோமா?

ஏன்? காணவில்லையா? நாங்கள் பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைந்திருப்பவன் மனிதன் ஒருவன் தானே! அப்படியிருக்க, எப்படிக்கேட்டீர்கள் இந்தக் கேள்வியை என்று ஒருசிலர் மறு கேள்வி போடலாம். அத்தகையோர்க்கு விளக்கம் தருவது - புரிந்தோர்க்குப் பூரிப்பு தருவது - என்னும் இரு நோக்கத்தால் எழும் ஒரு கட்டுரையே இது!

இந்த நூற்றுண்டில் எந்த நாட்டை எடுத்துக் கொண்டாலும் சரி, அங்கே ஏதாவது ஒரு பஞ்சம் புரிந்தோ, புரியாமலோ இருந்துகொண்டிருக்கிறது. உண்மையில் அதெல்லாம்கூட பஞ்சமல்ல. உருவினுல் பல கோடி மனிதர்கள் உலவும் இந்த உலகிலே, மனத்தினுல் சில கோடி மனிதர்களைக் கூடக் காண முடியவில்லை.மனிதனை உணருவது, காணுவது, கடவுளை உணருவது காணுவது என்பதைவிடக் கடினமான அனுபவம் என்பது என் கருத்து. "கடவுளை நேரில் கண்டு விட்டேன்' என்று சொல்லப் போகிற ஒரு விந்தை மனிதனைக்கூட, நாம் இனி விந்தையோடு நோக்க வேண்டாம்". 'மனிதனை நேரில் கண்டு விட்

டேன்' என்று எங்கிருந் தாவது ஓர் இனிய குரல் வருமாயின், அத்திசை நோக்கிக்கூப்பிய கரத்துடன் திரும்புங்கள் என்று வேண்டுகோள் விடுக்கிறேன். ஏனெனில், கடவுளைவிட மனிதன் இன்று அவ்வளவு முக்கியத்வமும், அதிசயமு மாகி விட்டான்! இந்த அளவுக்கு வளர்ந்துவிட்ட- மனிதப் பண்புள்ள-மனிதன் -ஏதாவது ஒரு நூற்றுண்டில் ஏதாவது ஒரு நாட்டில், எப் பொழுதாவது பிறந்து ஒரு சில ஆண்டுகள் வாழ்ந்து, தன் கதையை முடித்து, பிறகு ஒரு தனிக் கதையைத் துவக்கி வைத்துவிட்டுப் போகிருன்; அத்தகை யோரில் ஒருவர்தான், நமது தென்னுட்டுக் கலையுலக வரலாற்றில் தம் பெயரைப் பொன்னெழுத்துக்களால்

> மணமக்கள் இருவரும் நண்பர்களாக நடந்து கொள்ள வேண்டும். நான் ஆண்பிள்ளை என்று அதி காரம் பேசக் கூடாது.
>
> — பெரியார்

பொறித்துவிட்டு, உடலால் மறைந்த கலைவாணர், நகைச் சுவை மன்னர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள்!...

கலைவாணருக்கு முன்பும் அப்படியொருவர் வாழ்ந்த தில்லை - இன்றும் அப்படி யொருவர் இல்லை. அப்படி என்னதான் அவரிடம் சிறப் பிருந்தது?

கலைவாணரிடம் இதயம் இருந்தது; எந்தக் கலைஞ ரிடமும் இல்லாத சிறப்பு இது ஒன்றே. மற்றவர் களிடமிருக்கும் இதயத் துக்கு, தன்னைச் சேர்ந்த வர்களை மட்டும்தான் வாழ வைக்கத் தெரியும்; இவர்கள் எப்போதாவது ஒரு முறை வள்ளல் உருக் கொண்டா லும், அந்தச்சிறப்பு, 'பேதை' மகள் சீதை ரசித்த பொன் மானின் சிறப்புதான்!

வள்ளல்களில் மூன்று ரகம் உண்டு என்று கலை வாணர் நகைச்சுவையாக அடிக்கடி சொல்லுவார். அதாவது, 'அள்ளிக் கொடுப் பவர்கள்' ஒரு ரகமாம்; எவ் வளவு இருக்கிறது என்று எண்ணியும் பாராமல்-தன் பலம் தெரியாமல்-எதிரே கை நீட்டி நிற்பவனையும் புரியாமல் - கொடுத்துக் கொண்டேயிருப்பார்

களாம், இவர்கள் 'இரண்டாவது ரகம், கிள்ளிக் கொடுப்பவர்களாம் - அதாவது தீப்பிடித்த குடிசைகளுக்குப் பதிலாகப் புதிது போட்டுக் கொடுக்க ஆயிர ரூபாய் தேவைப்படும், இவரால் பல ஆயிரம் கொடுக்க முடியும், அப்படியிருந்தும் ஐம்பத்தொரு ரூபாய் கொடுப்பார்களாம், இவர்கள்! மூன்ருவது ரகம், 'கிள்ளினுல்தான் கொடுப்பவர்களாம்; அதாவது, கொடு கொடு என்று யாராவது ஒருவர் கிள்ளிவிட்டுக் கொண்டேயிருக்க வேண்டும், அப்போது தான் கொடுப்பார்களாம்!

இந்த மூன்று ரகத்திலே, கலைவாணர் எந்த ரகத்தைச் சேர்ந்தவர் என்பதை நாடு நன்கு அறியும்: அப்படியும் அறிந்திராத ஒரு அதிசயச் செய்தியை இப்போது தெரிவிக்கிறேன், கலைவாணர் காலமான ஒருசில தினங்களில் அவரது அஸ்தியை எடுத்துக்கொண்டு, துணைவியார் மதுரம் அவர்கள் காசியில் கிரியை நடத்திக் கரைத்து வரும் பொருட்டு முக்கியமான சொந்தக்காரர்களுடன் சென்றிருந்தார்கள். காசியிலே உள்ள பெரிய விடுதி ஒன்றில் தங்கினுர்கள், கிரியைகள் யாவும் ஒழுங்குற நடைபெற்றதும், விடுதி முதலாளியிடம் தாங்கள் தங்கியதற்கும் சாப்பாட்டுக்கும் உள்ள பணத்தைக் கணக்குப்படி கொடுத்தார்கள். விடுதி முதலாளி அதை எடுத்துக் கொள்ளவில்லை; சின்னக் குழந்தையைப்போலத் தேம்பித் தேம்பி அழுதார். பிறகு அம்மையார் பணத்தை எடுத்துக் கொள்ளுமாறு வலியுறுத்தினுர்கள். மறுத்தார். காரணம் கேட்டார்கள், அப்போதுதான், அந்த விடுதியே, கலைவாணரின் பொருளுதவியினுல் உருவானது என்பது தெரிய வந்தது! அப்படி, தமது மனைவியாருக்குக்கூடத் தெரிவிக்காமல், மற்றவர்களுக்காக வாரி

> தேவாலயங்களைக்கட்டியது தேவர்கள் அல்ல. மாடமாளிகைகளையும், தொழிற்சாலைகளையும் கட்டிய மனிதர்கள் தான் தேவாலயங்களையும்கட்டினுர்கள்.
>
> — கார்க்கி.

வழங்கியிருக்கிறார் கலைவாணர்! இன்றுள்ள 'வள்ளல்'களோ...? நாம் ஏன் அவர்களைப் பற்றிப் பேச வேண்டும்; அவர்களைப் பற்றியும் நாடு நன்கு அறியும்!

'ஒருவன் காலையில் பட்டினியாயிருக்கும்போது அவனெதிரில் இருக்கும் இன்னொருவன் தனது மதியச் சாப்பாட்டுக்காகத் தன் பையில் சில்லரையை ஒளித்து வைத்திருப்பது போன்ற குற்றங்களைக் கிரிமினல் குற்றங்களோடு சேர்க்க வேண்டும் என்பவர் கலைவாணர்!

ஒருவன் நாட்டிலே எந்தத் துறையில் எவ்வளவு புகழ் பெற்றாலும் சரி, அவன் எனது நாட்டவன், எனது இனத்தவன் என்று அந்தப் புகழில் சொந்தம் கொண்டாடத் தெரிந்த 'மனிதர்'களுக்கு, ஒருவனது தாழ்விலும் - தளர்ச்சியிலும் - பங்கெடுக்கத் தெரியவில்லையே! காந்தியை மகாத்மா என்று நினைத்து எப்படி மகிழ்ந்து, தலை நிமிர்ந்து நிற்கிறோமோ அப்படியே 'கோட்சே' செய்த கொடுமையை நினைந்து நம்மை நாமே வெறுத்துத்தலைகுனிந்துநிற்க வேண்டும்; அப்படி நிற்பவனே நான் ஒரு மனிதன் - எனக்கு இந்த உலகமும், இங்கு வாழும் மனிதர்களும் சொந்தம் - என்று பெருமிதத்தோடு சொல்லிக் கொள்ளத் தகுதி பெற்றவன்'' என்ற கருத்தைத் தமக்கே உரித்தான நகைச் சுவைப் பாணியில் அவர் சொல்லிக் கேட்க வேண்டும். அந்த அழகே அழகு!

''அறிஞர் பெர்னாட்ஷாவைப் புகழ்ந்துகொண்டேயிருப்பவன் சாதாரண மனிதன்தான்; அறிவற்ற புகழற்ற-ஓர் அபலையிடம் ஏதாவது சிறப்பைக் கண்டு எடுத்துக் கூறிக் கொண்டிருப்பவனே அவனைவிடப் பெரிய மனிதன்'' என்பவர் கலைவாணர்!

''மின்சாரம் கண்ட எடிசன் திருவுருவப் படத்தின் முன் புகழ் விளக்கு ஏற்றுகிறவன் இன்றைக்கு அவ்வளவாகத் தேவையல்ல; இருட் குடிசையில் தடுமாறும் ஏழையின் முன் சிறு அகல் விளக்கை ஏற்றி வைக்கக் கூடிய இதயமுள்ளவர்தான் தேவை' என்பவர் கலைவாணர்!

''கம்பன் பாடிய அற்புதக் கவிதைகளைப் புரிந்து விரி

வுரையாற்றுபவனைவிட, கையை வாயைக் காட்டி திக்கித் திக்கிப் பேசும் ஊமையின் உள்ளத்தையும்-சமூகத்தில் சூழ்நிலைக் கொடுமைகளால் பேச முடியாது தவிக்கும் பேதையின் உள்ளத்தையும் புரிந்து கொள்ளக்கூடியவனே உயர்ந்த கலைஞன்'' என்று மதிப்பவர் கலைவாணர்!

"பள்ளம் நோக்கிப் பாய்ந்து இறங்கி வருவதையே இயல்பாகக் கொண்ட தண்ணீரைப் போல், நாட்டிலே தாழ்ந்த நிலையில் இருப்பவர்களைக் கண்டு இரங்கி, தேடிப்போய் உதவி புரிவதே உள்ளத்தின் இயல்பாக அமைய வேண்டும்'' என்று கருதுபவர் கலைவாணர்!

இப்படி சிந்திக்க முடியாதவைகளை சிந்தித்த பெருமைக்கு மட்டுமல்ல, செயலில் காட்டிய பெருமை கலைவாணரோடு இருந்து பத்தாண்டுகளுக்கும் மேல் பணியாற்றும் வாய்ப்பினை பெற்றது குறித்து பெருமை அடைகிறேன்.

மற்றவர்கள் பெற்ற பயனையும் நான் அவரிடமிருந்து பெற்றேனில்லை; அதே நேரத்தில், மற்ற எவரும் பெறாத ஒன்றைப் பெற்றிருக்கிறேன்; அதுவே ''ஒரு மனிதனைக் கண்டேன்'' என்ற மன நிறைவு!!!

சொன்னானே ஒரு சொல்!

அண்ணன்-தம்பி இருவர் சாப்பிட்டுக்கொண்டிருந்தனர். மூத்தவனுக்கு வயது ஐந்து, இளையவனுக்கு வயது மூன்று மூத்தவன் சொன்னான்—

''டேய் தம்பி! அம்மாவிடம் போய் இன்னும் இரண்டு ரொட்டித் துண்டு வாங்கிக்கொண்டு வா.''

''நான் மாட்டேன், நீயே போய்க் கேள்.''

''நீ, சின்னப் பையன் கேட்டால் கோபித்துக் கொள்ள மாட்டார்கள். போடா.''

''இல்லை இல்லை, நான் உனக்குப் பிறகுதான் பிறந்தேன். எனக்கு வயது மூன்றுதான். என்னைவிட அம்மா அவர்களிடம் உனக்குத்தான் இரண்டு வருடம் அதிகமான பழக்கம் நீயே போய்க் கேள்.''

பாரதத்தில் படித்தவர்கள்

	1951-ல்	1961-ல்
டெல்லி	384	510
கேரளா	407	462
அந்தமான் நீகோபார்	258	336
குஜராத்	231	303
தமிழ்நாடு	208	302
மஹாராஷ்டிரா	209	247
மே-வங்காளம்	240	291
அஸ்ஸாம்	183	258
மைசூர்	193	253
பஞ்சாப்	152	237
திரிபுரா	155	222
ஒரிஸா	158	215
ஆந்திரா	131	208
பீஹார்	122	182
உத்திரபிரதேஷ்	108	175
ம. பிரதேஷ்	98	169
ராஜஸ்தான்	89	147
ஹிமாசல் பிரதேஷ்	77	146
ஜம்மு காஷ்மீர்	107	(கிடைக்கவில்லை)

டிக்கட் இல்லாப்பிரயாணி

ரயிலில் தொல்லை தரும்

நண்பரானார்.

விரட்டியடித்தாலும்

விடவில்லை.

விருந்தாளியாக

வீட்டுக்கு வந்தார்:

வந்த விருந்தாளியை

என் மனைவி

கொலை செய்துவிட்டாள்.

கொடுமை!

கொடுமை!

மதுரைக்குச் சென்றிருந்த நான் சென்னைக்குத் திரும்பி வந்து கொண்டிருந்தேன். புகைவண்டியில் வந்த மக்கட் திருக் கூட்டத்திற்குக் குறைவே இல்லை. "சாமான்களைக் குறைத்து பிரயாணத்தை வசதியானதாக ஆக்கிக் கொள்ளுங்கள்" என்று அரசினர் செய்யும் விளம்பரங்களை எல்லாம் அலட்சியப் படுத்தி விட்டு, வந்து கொண்டிருந்தது மானிட சமுதாயம். எப்படியோ எனக்கும் ஒரு சிறு இடம் கிடைத்தது அமர்வதற்கு.

வண்டி நல்ல வேகத்தில் சென்றது. திண்டுக்கல் தாண்டியது. திருச்சி வந்தது. மக்களின் படையெடுப்பு இங்கும் நடந்தது. இந்த நேரத்திலே எனக்குத் தெரிந்த நண்பர் ஒருவர் என் பெட்டியிலேயே என்னுடனேயே பிரயாணம் செய்து வருவதைக் கண்டேன். அந்த நண்பர் என்னைக் கண்டதும் மறைந்துகொண்டார். நான் அவரைப் பார்க்

தமிழ்ப்பித்தன்

காத நேரங்களில் அவர் என்னைப் பார்த்து, தானும் என்னுடன் பிரயாணம் செய்து வருவதை நினைவு படுத்திக் கொண்டே வந்தார். அவருடைய செயல்கள் ஒவ்வொன்றும், அவர் டிக்கெட் இல்லாத பிரயாணி என்பதை நிரூபித்துக் கொண்டே வந்தன.

வண்டிகளில் வழக்கமாகப் பேசப்படும் அரசியல் விமரிசனங்கள், கலை உலகச் செய்திகள், நடிக நடிகையரின் வாழ்க்கை வரலாறுகள், ஆகியவை அன்றைய தினம் பேசப்படவில்லை.

எல்லாப் பிரயாணிகளுமே நித்திரைத் தேவியின் சீட கோடிகளாக இருந்த காரணத்தால், பெட்டியில் உள்ள விளக்குகள் அணைக்கப்பட்டு விட்டன; உள்ளே இருந்த பெருமக்களின் தலைகளும், வண்டியின் போக்குக் கேற்ப நர்த்தனமாடத் தொடங்கி விட்டன.

விழுப்புரம் சந்திப்பில் வண்டி நின்றது. மதிப்பிற்குரிய டிக்கெட் பரிசோதகர் தனக்கே உண்டான தனித் தோரணையில் எங்கள் பெட்டிக்குள் நுழைந்தார். உள்ளே இருட்டாக இருப்பதை அறிந்து. விளக்கைப் போட்டார். அவ்வளவு தான்! அதுவரை எல்லோர் முன்னுலும் இருந்த என் அருமை நண்பர் ஓட்டம் பிடித்தார்; பிரயாணிகள் அமர்ந்திருக்கும் பலகைக்குக் கீழே தஞ்சம் புகுந்தார். போகும்போது, அவர் என்னைப் பார்த்துவிட்டுச் சென்ற பார்வை மிகவும் பரிதாபமாகவே இருந்தது. டிக்கெட் இல்லாமல் பிரயாணம் செய்யும் அந்த நண்பரைக் காப்பாற்ற நினைத்தேன். குற்றம் செய்தால் மட்டுமல்ல தண்டனை, குற்றம் செய்பவருக்கு உதவி செய்தாலும் தண்டனை உண்டு என்பது தெரியும். என்றுலும் நண்பரின் உயிரைக் காப்பாற்ற நான் முடிவு செய்ததால், பாவம், அவரைக் காட்டிக் கொடுக்கவில்லை. ஒருவழியாக பரிசோதகரிடம் இருந்து தப்பி விட்டார் நண்பர். ஆனல், சில நிமிடங்களுக்குள்ளேயே தனது பழைய நிலையை மறந்து விட்டார். மீண்டும் தொல்லை கொடுக்க ஆரம்தார். ஏனைய பிரயாணிகளை அடிக்கடி விழிக்க வைத்து, அவர்களின் கோபத்தையும் சாபத்தையும் நிறையச் சம்பாதித்துக் கொண்டார்.

சென்னை வந்தது, ரயிலில்

வந்த பரிசோதகரைத்தான் ஏமாற்றி விட்டார், நிலையத்தின் வெளியே பளபளக்கும் வெள்ளை உடையுடனும் பயங்கரப் பார்வையுடனும் நெடிய திருமேனியாக நிற்கும் 'டிக்கெட் கலெக்டருக்குத்' தெரியாமல் நண்பர் எப்படி வெளியே போகப் போகிறாரோ என்று என் மனம் அச்சப்பட்டுக் கொண்டிருந்தது. பெட்டியை விட்டு இறங்கினேன். நண்பர் வருகிறாரா என்று திரும்பிப் பார்த்தேன். என்ன அதிசயம்! நண்பரைக் காணவில்லை! நல்ல வேளை என்று எண்ணியபடி, எனது 'டிக்கெட்டைக் கொடுத்துவிட்டு நிம்மதியாக வீட்டுக்கு வந்து சேர்ந்தேன்.

என் மனம் மட்டும் நண்பர் எப்படித் தப்பித்துச் சென்றார் என்பதைப் பற்றியே எண்ணி எண்ணி வியந்து கொண்டிருந்தது. அந்த நேரத்தில் ஒரு சிறு அதிர்ச்சி! என்ன ஆச்சரியம்; தப்பிச் சென்றதாக எண்ணிய நண்பர் என் வீட்டுக்கே வந்து விட்டார். அவர் தானாகத் தப்பி வரவில்லை, எனது துணை கொண்டுதான் வந்திருக்கிறார். அவர் மீது எனக்குக் கோபம் கோபமாக வந்தது டிக்கெட் இல்லாமல் பிரயாணம் செய்து, வந்துவிட்ட அந்த நண்பரை என்ன செய்யலாம் என்று சிந்தித்துக் கொண்டிருக்கும் போது, "என்னங்க இது! ரயில் சிநேகிதமா! உருப்பட்டாப்புலேதான்" என்ற 'அர்ச்சனையுடன்' அருகில் வந்தாள் என் அருமை மனைவி அபரஞ்சி.

பாவம்! டிக்கெட் பரிசோதகரின் கண்ணில் படாமல் தப்பித்து வந்துவிட்ட நண்பர் எனது 'குடும்ப விளக்கின் கண்களில் பட்டு விட்டார். குற்றவாளி நீதி மன்றத்தில் வேண்டுமானாலும் தப்பித்து விடலாம்.

விம்கோ

வெஸ்டர்ன் இந்தியா மாச் கம்பெனிக்கு 1960ல் கிடைத்த மொத்த லாபம் $1\frac{1}{2}$கோடிரூபாய்.

விம்கோ என்பதுசென்னையிலுள்ள வெட்டும்புலி தீப்பெட்டி மூலம் சாதாரண மக்களுக்கும் தெரிந்த ஒரு நெருப்புப்பெட்டி தயாரிக்கும்கம்பெனி.

எனது இல்லத்து அரசியின் கூர்மையான கண்களி லிருந்தும், கடுமையான எண்ணத்திலிருந்தும் தப்பிக்க முடியாது. ஆம்! அருமை நண்பர் என் மனைவியின் கரங்களால் பயங்கரமாகக் கொலை செய்யப்பட்டார். என்னுல் அந்தக் கோரக் காட்சியைப் பார்க்க முடியாமல் கண்களை மூடிக் கொண்டேன். பிறகு, சிறிது சிறிதாகத்தான் மாண்டு கிடந்த நண்பரைப் பார்க்க முடிந்தது என்னுல்.

முதலில் நானும் நண்பரின் கொலைபற்றி வருந்தத் தான் செய்தேன். பிறகு, 'குடும்ப விளக்கு' செய்ததே சரி என்ற முடிவுக்கு வந்தேன். அந்த நண்பர் யாரென்று தெரிந்தால் நீங்களும் எங்கள் கருத்தைத் தான் ஆதரிப்பீர்கள்.

டிக்கெட் இல்லாமல் பிரயாணம் செய்த அந்தத் தீய நண்பர் யார் தெரியுமா?

என் இல்லத்து அரசியினுல் கொலைக் களத்துக்கு அனுப்பப்பட்ட பரிதாபத்திற்குரிய அந்த நண்பர் யார் தெரியுமா?

திருவாளர் மூட்டைப் பூச்சியார்!

உங்களுக்குத் தெரியுமா?

இந்தியாவில் தயாராகும் சிங்கள மொழிப்படங்களை இலங்கையில் காட்டக்கூடாதென இலங்கை சர்க்கார் தடை விதித்துள்ளதாம். அத் தடையுத்தரவை நீக்கிவிடும்படி தென்னிந்திய திரைப்பட வர்த்தகசபைத் தலைவரான ஏ. எல். சீனிவாசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

*　　*

உயிரோடுள்ள பல்லியின் உடலிலிருந்து ஒரு ஆசாமி எண்ணெய் எடுக்கும் தருவாயில் அந்தப்பல்லி உயிரிழந்ததாக, ஜீவகாருண்ய சங்கத்தினர் வழக்குத்தொடுத்தனர். பல்லி ஒரு மிருகம் அல்லவென்றும், அதனுல், தான் செய்தது குற்றமாகாது என்றும் எதிரி வாதித்தார்.

அகராதியின் படியும், கல்கத்தா உயர் நீதிமன்றத் தீர்ப்பின்படியும் பல்லி ஓர் மிருகந்தான் என்று நீதிபதி தீர்ப்புக்கூறி குற்றவாளிக்கு ரூபாய் 20 அபராதம் விதித்தாராம் — இது பம்பாயில் நடந்தது.

புகழின் உச்சியிலே

இராம கண்ணப்பன்

அன்புள்ளசேதுவுக்கு,

இந்த நீண்ட மடலை எதிர் பார்த்திருக்க மாட்டாய். நாம் எதிர் பாராமலே தானே நம் வாழ்க்கையில் ஒவ்வொன்றும் நடந்துவிடுகின்றன. அதனால் இந்தக் கடிதம் உனக்குஆச்சரியத்தை விளைவிக்காதென்றே எண்ணுகிறேன். மணி பனிரெண்டு ஆகிவிட்டது. மெத்தையில் புரண்டுபுரண்டு படுத்தாலும் தூக்கம் வரமாட்டேனென்று சண்டித்தனம் பண்ணுகிறது. உடம்பை வளைத்துக் கடம்பில் போட்டால் நிம்மதியாகத் தூக்கம் வரும் என்று பெரியவர்கள் சொல்லுவார்கள். உயர்வுடைய கடம்ப மரத்திலான கட்டிலில் பட்டு மெத்தையும் தலையணையும் வைத்துத்தான் படுக்கிறேன். ஆனாலும் தூக்கம் வரமாட்டேன் என்கிறது. கிராமத்தில் கரடுமுரடான, மேடும் பள்ளமுமான மண் தரையில், துண்டை விரித்துக்கொண்டு, தலையணைக்கு வலது கையை மடித்துப் படுக்கும்போது கூட நிம்மதியாகத் தூங்கி விடுவேன். ஆனால் இன்று பட்டு மெத்தையில் படுத்தும் கூடத் தூக்கம் வரவில்லையென்றால் காரணம் என்னவென்று நினைக்கிறாய்? நிம்மதி! இது எனக்குக் கிடையாது! புகைபிடிக்கக் கூட காலணா இல்லாது தெருவில் சுற்றிக் கொண்டிருந்த போதும்; நாடகக்கம்பெனியில் சேர்ந்து, அரைவயிற்றுச் சோற்றைத் தின்றுவிட்டு அரிதாரம் பூசிக்கொண்டு மேடையில் தொண்டை கிழியக் கத்தியபோதும் இருந்த மன நிம்மதி, இன்று; பணமும் புகழும் வலிய வந்து குவியும் காலத்தில் எனக்குத் துளிக்கூட இல்லை. எவ்வளவுதான் பணமிருந்தாலும் என்ன பயன்? பணத்தாலும், புகழாலும், நிம்மதியை வாங்கிவிட முடியுமா? பணமில்லாதபோது குப்பையிலெறியப்பட்டு நிம்மதியாகக்

கிடந்தவனை பணம் வந்தவுடன் கோபுரத்திலேற்றி விட்டு நிம்மதியையும் பறித்து விடுகிறார்கள். இதுதானே உலகம்!

நீயோ, நானோ, நான் இப்படி வருவேனென்று கற்பனை செய்துகூடப் பார்த்திருக்க மாட்டோம்; இன்று அந்த அளவுக்கு நான் வளர்ந்துவிட்டேன். இதை அதிர்ஷ்டமென்பதா? திறமையென்பதா? அதிர்ஷ்டத்தில் எனக்கு நம்பிக்கை இல்லை; திறமை என்று சொன்னால், என்னைவிடப் பன்மடங்கு உயர்ந்த திறமைசாலிகளெல்லாம் குடத்திலிட்ட விளக்காகத் தெருவில் சுற்றிக்கொண்டிருக்கிறார்களே அது ஏன்?... அது எப்படியோ போகட்டும். தினமும் என் வீட்டிற்கு முன்னால், விடிந்ததும் விடியாததுமாக, விலையுயர்ந்த கார்கள் பத்துக்குக் குறைவில்லாமல் நிற்கின்றன. நூறு பேர்களுக்குமேல் என்னைப் பார்ப்பதற்கு, என் முகத்தைப் பார்ப்பதற்கு, ஆட்டோகிராப் புத்தகத்தில் என் கையெழுத்து வாங்குவதற்கு என் வரவை எதிர்பார்த்து வாசலில் காத்துக் கிடக்கிடக்கின்றனர். நான் அவ்வளவு உயர்ந்தவனா? என் கையெழுத்துப் பாதுகாக்க வேண்டிய அளவு தகுதி பெற்றதா?...கால்ஷீட் கேட்க வருபவர்களும், புது ஒப்பந்தம் செய்துகொள்ள முன் பணத்தோடு வருபவர்களும் என் வருகைக்காக அறையில் குழுமிவிடுகின்றனர். தினமும் ஓய்வில்லாமல் நடிக்கிறேன்; அழுக்குப்படியா நோட்டுக்களைக் கற்றையாக வாங்குகிறேன். இவ்வளவு பணத்தையும் நான் யாருக்காக, எந்த மனைவி மக்களுக்காக்ச் சம்பாதிக்கிறேன்...? அதுதான் எனக்குப் புரியவில்லை. கும்பிக்குக் கூழும், உடுக்க உடையும், நிற்க நிழலுமில்லாமல் என் அம்மாவும், அப்பாவும் அனாதைகளாகத் தெருவில் கிடந்தபோது அவர்களைத் தூக்கிச் சென்று மண்ணில் புதைக்கக்கூட என்னிடம் அன்று காலணா இல்லை. இன்று, கற்றை கற்றைகளாகக் குப்பைபோல வந்து குவிகிறது பணம். ஆண்டியப்பனாக மேடையில் பெண் வேடம் போட்டபோது என்னை உயிருக்குயிராக காதலித்த கருப்பாயியை எனக்குக் கட்டித்தர மறுத்து, "அன்றாடம் அரிதாரம் பூசிக் கூத்தாடும் உனக்கு எதுக்கடா கல்யாணம்? உன் வயித்துக்கே தாளம்; எம் மவளுக்கு எப்பிடிடா சோறு போடுவே" என்று கேட்டார் என் மாமா. கையில் பணம் வந்தவுடன், ஆண்டியப்பன் அரவிந்தனாக மாறியபோது, என் கருப்பாயி என்மேல்கொண்ட மாறாத ஆசையாலே எறிந்து

சாம்பலாகிவிட்டாள். அவளின் உயிரற்ற சடலத்தைக் கூட என்னால் பார்க்க முடியவில்லை. பழைய நிகழ்ச்சிகளை எண்ணிப் பார்க்கும்போது எனக்கு வேடிக்கையாக இருக்கிறது. ஆனால், இன்றைய இயந்திர ஜட வாழ்க்கையை நினைத்துப் பார்க்கும்போது? செழுமையும், பசுமையும் என் கண்களுக்குத் தெரியவில்லை. நடிப்பு, பணம், புகழ் என் முன் பளபளக்கிறது; என் கண்கள் வெட்டவெளியில் தெரியும் கானலை, அதையும் தாண்டித் தெரியும் சூன்யத்தையும்தான் காணுகின்றன. என்ன வாழ்க்கை இது?

'தலை நோவுகிறது' என்று நான் சொன்னால் போதும், நாட்டிலுள்ள படமுதலாளிகளும், டாக்டர்களும் என் வீட்டில் குழுமிவிடுகிறார்கள். ஒரு முதலாளி தலையைப் பிடிக்க வருகிறார்; "இன்னொருவர் காலைப் பிடிக்கவா..." என்கிறார்; சுற்றியிருக்கும் டாக்டர்கள் ஆளுக்கொரு மருந்தாகக் கொடுத்து, 'தங்கள் மருந்து பலிக்கிறதா' என்று என்னைப் பரீட்சித்துப் பார்க்கிறார்கள். சற்று காய்ச்சலடிக்கிறது என்று படுத்தால் போதும், நாட்டிலிருக்கும் தினசரிப் பத்திரிகைகளிலெல்லாம் எட்டுக் காலத்தில் முகப்புச் செய்திகளாக ஆய்...பூய்.! என்று பிரசுரித்து அமர்க்களப் படுத்துகின்றன. இதைப்

படித்துவிட்டு ரசிகர்கள் என் வீட்டிற்கு முன்னல் குழுமி விடுகிருர்கள். பாதுகாப்புக் கென்று போலீசார் வந்துவிடு கின்றனர். நானென்ன அவ தாரமா? இல்லே' இந்த நாட்டை வாழ்விக்க வந்த தெய்வமா? எதுவுமில்லே. நான் ஒரு சாதாரண நடிகன்; அரிதாரம் பூசிக்கொண்டு, எழுதிக் கொடுக்கும் வச னத்தை நெட்டுருச் செய்து ஒருமுறைக்குப் பத்துமுறை யாக நடித்துக் காட்டும் மிகச் சாதாரணமான நடிகன்; கேவ லம், எனக்கா இத்தனே அமர்க் களமென எண்ணும்போது ஒரு மூலேயில் ஒட்டிக்கொண் டிருக்கும் கடுகத்தனே நிம்மதி யைக்கூட இழந்துவிடுகிறேன். ஒரு அறிவாளிக்கோ, மந்தி ரிக்கோ இல்லாத மதிப்பும் மரியாதையும் தந்து என்னேப் பைத்தியக்காரனுக்கி விடுகி ருர்கள், பைத்தியக்காரர்கள். இதைப் படிக்கும்போது உனக் குக் கோபம் வரும்; எனத்குத் தெரியும். தகுதி இல்லாத என்னேத் தகுதியுள்ளவனுகக் கருதிப் புகழ்ந்து, புகழ்ந்து, புகழ்மலேயின் உச்சியிலே என்னே ஏற்றிவிட்டார் கள். புகழின் உச்சியிலே நின்றுகொண்டு நான் அவர் களேப் பார்க்கிறேன்;' பைத் தியக்காரர்கள் இன்னும் என்னேப் புகழ்ந்துகொண்டு தானிருக்கிருர்கள்.

புகழ்! புகழ்! புகழ்! எங்கு பார்த்தாலும் என் புகழே!' தெருவுக்கு இரண்டு நடிக மேதை அரவிந்தன் மன்றங் கள்! ஒரு படம் அதிகநாள் ஓடினல் போதும் வெள்ளி விழா, வைர விழா, இன்னும் என்னென்னமோ விழாக்கள் நடத்திப் பாராட்டிப் பொன் னுடை போர்த்துகிருர்கள். சற்று அமைதியாகப் பத்திரி கையைப் படிப்போமெனப் புரட்டினல் அதிலும் அரவிந் தன் செய்தியே-புகழ்ச்சியே! ஆண்டியப்பனுகக் கிராமத் தின் மூலேயில் ஒருவருக்கும் தெரியாமல் ஒடுங்கிக் கிடந்த நான்? இன்று உலகத்திற்கே அறிமுகமாகி விட்டேன்! பேசத் தெரிந்த சின்னஞ் சிறு குழந்தையிடம் போய் என்னேப்பற்றிக் கேள்; அதுகூட என்னேப் புகழும்!' அளவுக்கு அதிகமானல் அமுதுகூட நஞ்சாகுமென்பது போல, என் தகுதிக்கு மீறி என்னே வந்தடைந்துவிட்ட புகழ் நஞ்சாகத் தோன்றி என் அமைதியைப் பறிக்கிறது.

தெருக்கூத்துக்களில் பெண் வேடம் போட்டுக் கொண்டி ருந்த காலத்தில் தொண்டை கெட்டுப் பாடமுடியாமல் போனபோது, நீ இனிமேலே நடிக்கிறதுக்கு லாயக்கில்லே, வீட்டுல போயி எருமை மாடு மேயி"ன்னு, புத்தி சொல்லி நிர்த்தாட்சணியமாக விரட்டி யடித்த பழைய முதலாளி இன்று என்னிடம்தான் இருக்

கிருர். அன்று "மக்கு, மடையா, ஆண்டியப்பா" என்று வசை புராணம் பாடியவர், இன்று, 'ஆண்டியப்பா' என்று அழைக்க வேண்டாம்; 'அரவிந்தா' என்று அழைக்க வேண்டாம்; 'தம்பி' என்று கூடவா அழைக்கக் கூடாது? அதற்குக்கூட அவர் பயப்படுகிருர்! அவர் இருக்குமிடம் சென்று அன்பாக மனம்விட்டுப் பேசுவோம் என்று போனுல், என்னைக் கண்டவுடன் எழுந்து நின்று, துண்டை எடுத்து இடுப்பில் சுற்றிக்கொண்டு கூனிக் குறுகிக் கொள்கிருர். அவரிடத்தில் என்னுல் என்ன பேசமுடியும்? பேசாமலே திரும்பிவிடுகிறேன். இது எவ்வளவு பெரிய சித்ரவதை என்று எண்ணிப்பார். இன்று என் நிலை எப்படியோ மாறிவிட்டாலும் நான் அவரின் மாணவன்தானே, பழைய ஆண்டியப்பன்தானே, இவர் கையில் குட்டுப் பட்டுத்தானே நடிக்கக்கற்றுக்கொண்டேன்! நான் அவருக்கு மரியாதைகொடுக்க வேண்டிய காலத்தில் அவர் எனக்கு மரியாதை கொடுக்கிருர்! என்ன கொடுமை! இவற்றுக்கெல்லாம் என்ன காரணம்...? பணம்; புகழ்! ஆண்டியப்பனைப் பணம் அரவிந்தனுக மாற்றிவிட்டது! முடிவு...? பணமும், புகழும் பார்ப்பவர்களின் கண்களுக் குத் திரையிடுகிறது; அவர் களையறியாமலேயே அவர்கள் எனக்கு மரியாதை கொடுக்கிருர்கள்! என்னை வேதனைப் பட வைக்கிருர்கள்.

"ஆண்டியப்பா, என்னடா சுகந்தானு...?" என்று அன்போடு உரிமையோடு கேட்டு என் முதுகில்தட்டிக்கொடுக்க மாட்டார்களா என ஏங்குகிறேன். என்னைப் பார்க்க வரும் பணக்காரர்களெல்லாம் அன்பாகப் பேசுவதாக நினைத்துக் கொண்டு உதட்டளவில் பேசுகிருர்கள்; என்னிடமே நடிக்கிருர்கள்! ஒரு சின்னஞ் சிறு அற்ப ஆசைகளைக்கூட என்னுல் நிறைவேற்றிக் கொள்ள முடியவில்லை. காலாரக் காற்ருடத் தனிமையில் மனம் போன போக்கில் நடந்து செல்லவேண்டுமென நினைக்கிறேன்; முடியவில்லை; புழுதியில் உட்கார்ந்து நண்பர்களோடு பேசிச் சிரித்தபடி பொரி கடலையைக் கொரித்தபடி, தெருக் கூத்துப் பார்க்க வேண்டுமென அடங்காத ஆசை என்னுள் எழுகிறது. 'முடியுமா? நடக்கக் கூடிய காரியமா இது? அகில உலகப் புகழ் நடிக மேதை அரவிந்தன் புழுதியில் உட்கார்ந்து அதுவும் தெருக்கூத்தா பார்ப்பது...? அரவிந்தனின் புகழ் என்ன ஆவது?' இப்படிப் புகழ் என்னைப் பயமுறுத்துகிறது. நான் போலிவாழ்க்கை நடத்துகிறேன்; நடிக்கிறேன்.

நான் நிம்மதியாகத் தூங்கி எத்தனையோ ஆண்டுகளாகி விட்டன. இதோ என்னிடம் வேலை செய்யும் தாத்தா, சிமிண்டுத் தரையில் துணி கூட விரிக்காமல் குறட்டை விட்டபடி நிம்மதியாகத் தூங்கு கிறார். வேலை இல்லை என்று நான் அவரை வெளியே அனுப்பிவிட்டால், அவர் தங்கி இளைப்பாரச் சின்னக் கூரை வீடுகூட இல்லை. இருந் தும் எந்தக் கவலையுமில்லாமல் நிம்மதியாகத் தூங்குகிறார். எனக்கு என்ன இல்லை; எல் லாம் இருக்கிறது. ஆனாலும் தூக்கம்தான் இல்லை!

அப்பப்பா! இந்தப் புகழால் நான் படும் வேதனைகள் போதும்! இனிமேலும் நான் அரவிந்தனாக வாழ நினைக்க வில்லை; போலி வாழ்க்கை வாழ்ந்தது போதும்! இருக் கும் ஒப்பந்தங்களை முடித்துக் கொண்டு கிராமத்திற்கு வந்து ஆண்டியப்பனாக வாழ நினைக்கிறேன்; இல்லை; முடிவே செய்து விட்டேன். புகழின் உச்சியில் நின்று வாழ்க்கையைப் பார்த்து விட்டேன்; போதும். இனி மேலும் நின்றால் இடறி விழுந்து இடுப்பை ஒடித்துக் கொண்டு விடுவேனோ என அஞ்சித்தான் இந்த முடிவுக்கு வந்தேன்.

மணி மூன்றாகிவிட்டது. இனிமேலாவது தூக்கம் வருமா என்று படுத்துப் பார்க்கிறேன்.

அன்புள்ள,

ஆண்டியப்பன்

எவரே ஒப்புவர் இதற்கு?

கனடாவில் டொரொண்டா நகரில் ஒரு சினிமாக் கம்பெனியார் சூனியக்காரியாக நடிக்க ஒரு பெண் தேவை என்று வினம்பரம் செய்திருந்தார்கள்.

அதற்கு 130 பேர் மனுப் போட்டிருந்தனர். "நாங் கள் அழைத்தது படத்தில் நடிப்பதற்கல்ல. எங்கள் அடுத்த படத்திற்கு விளம்பரமாக நீங்கள் சூனியக்காரி வேடம் போட்டுக்கொண்டு, நகர வீதிகளில் திரியவேண் டும்" என்று கம்பெனியார் விளக்கிக் கூறியதும், மனுப் போட்டவர்களில் ஐம்பது பேர் திரும்பிவிட்டனர்.

"அதோடு மூலைக்கு மூலை நின்று விகாரமாகக் கூவ வேண்டும்"-என்று சொன்னதும் மேலும் 60 பேர் போய் விட்டனர்.

"அதுமட்டுமல்ல, எல்லோரும் பார்க்கும்படி தவ ளைக் கால்களைத் தின்னவேண்டும்" என்று அறிவித்ததும் மீதமிருந்த இருபது பேரும் எழுந்து போய்விட்டார்கள்!

விவசாய வருமான வரி

கோயம்புத்தூர்	மாவட்டம்	46,67,397
செங்கற்பட்டு	,,	2,26,299
வட ஆற்காடு	,,	1,16'208
தென் ஆற்காடு	,,	5,67,336
தஞ்சாவூர்	,,	30,33,894
திருச்சி	,,	5,91,308
மதுரை	,,	10,01,890
இராமநாதபுரம்	,,	1,57,171
திருநெல்வேலி(செங்கோட்டை வட்டம் நீங்கலாக)		2,51,558
கன்யாகுமரி (செங்கோட்டை வட்டம் உட்பட)		13,67,561
நீலகிரி		29,63,242
சேலம்		4,28,403
		153,72,267

தமிழ்க் கலைக் களஞ்சியம்

தமிழ்க் கலை களஞ்சிய வெளியீட்டிற்காக தமிழ்வளர்ச்சிக் கழகத்திற்கு (1959-ல் கடைசியாக) அரசாங்க உதவித் தொகை கொடுக்கப்பட்டது ரூ 4,31,551.

என்னிக்கு?

வே. கபிலன்

உலகம் உருமாறிக் கொண்டே இருக்கிறது. ஆனால் அதன் தொடர்பிலுள்ள உயிரினங்கள்-?

என்றும்போல் இன்றும் இருக்கின்றன! அவைகளிடத்தில் எந்தவித மாற்றமும் கிடையாது. அறிவுடைய மனிதனிடத்தில்தான் மாற்றமும் முன்னேற்றமும் மாறிமாறித் தோன்றி மறைந்தவண்ணம் இருக்கின்றன.

மிருகத்திற்கும் மனிதனுக்கும் வித்தியாசம் தெரியாத காலம் ஒன்றிருந்தது. அந்தக்கால வெள்ளம் மாறுபாடடையவே, 'மனிதன் வேறு' மிருகம்வேறு. என்ற வேறுபாடு முளைத்தது.

--இப்படிப் படிப்படியாக வளர்ந்துவந்த மனிதன், மனிதபிமானத்தின் நிலைக்களானான்; பகுத்தறிவுக்கும் பரந்த மனப்பான்மைக்கும் பெருந் தூணானன். இம்மட்டுமா?

நன்மைக்கும் தீமைக்கும்-பொய்ம்மைக்கும் வாய்மைக்கும்-ஆசைக்கும் நிராசைக்கும்-பேராசைக்கும், பெருந் தொல்லைக்கும் - அறிவுக்கும் அறியாமைக்கும் - அகத்துக்கும் புறத்துக்கும்- ஏமாறவும் ஏமாற்றப்படுவதற்கும் நீதிக்கும் அநீதிக்கும்-இகழ்ச்சிக்கும் புகழ்ச்சிக்கும் இலக்கானன்: இலக்காகிக்கொண்டிருக்கிறன்.

தோன்றிய உயிரினங்கள் யாவும் முன்னேறவுமில்லை; பின்னேறவும்இல்லை. அன்று அவைகள் எப்படி இருந்தனவோ அப்படித்தான் இன்றும் உள்ளன. ஆனல் மனிதன் மட்டும் பல்வகையில் உருமாறிக்கொண்டே இருக்கிறன்.

அவைகளிடத்திலே, அந்தக் காலத்திலே என்ன முறைகள் இருந்தனவோ அவைகளேஇன்றுமுள்ளன.

மனிதன் மட்டும் காலத்துக்குக் காலம் மாறிக் கொண்டே வந்துவிட்டான்.

எதையோ நினைத்து, என்னவோ செய்து முன்னேறி விட்டான். அவனுடைய முன்னேற்றத்தில் ஒருமித்து வாழும் மனப்பான்மை வளர்ந்ததா வென்றால் இல்லை. எடுத்தகாரியத்தில் கண்ணும் கருத்துமாக இருந்தானு வெனில் அதுவுமில்லை.

மனிதன், மனிதனை மதிக்க, துதிக்க எந்தெந்த அடிப்படையான பாடத்தைக் கற்றுக் கொள்ள வேண்டுமோ அதைக்கற்றுக் கொள்ளவில்லை. அவன் கற்றுக் கொண்டிருப்பது தன்னை வளர்த்துக் கொள்வதற்கு எது வேண்டுமோ அதுதான்! காரணம், பொதுநலக் கண்ணோட்டம் மிகக் குறைந்து விட்டதே இதற்கு அடிப்படையும் வெளிப்படையுமாகும்.

குறை சொல்வது, மன மாற்றம்பெறுவது, வஞ்சிப்பது, பொருமைப்படுவது, பூசலை உருவாக்குவது, ஒற்றுமை இழப்பது, நன்மையை அழிப்பது, பிளவு படுத்துவது, செய்ந்நன்றி மறப்பது, விருப்பத்திற் கேற்ப நடந்து கொள்வது போன்ற கீழான செயல்களால், மனிதன், மனிதத் தன்மைக்கப்பாற் சென்று கொண்டிருக்கிறுன், இவற்றிற்கெல்லாம் என்ன காரணம்?

எண்ணித் துணிந்து செயலாற்ற மறந்து போனதேயாகும். 'மெய்ப்பொருள்' காணவிழையும் மனத்தை அப்புறப் படுத்திவிட்டுப் 'பொய்ப்பொருள்' காணும் இதயத்துக்கு முதலிடம் கொடுத்து நடக்கத்தொடங்கியதேயாகும்.

இந்தக் குறை குடும்பத்திலிருந்து அரசியல் வரையில் ஆல்போல் தழைத்து அருகுபோல் வேரூன்றி உள்ளது. இதுவும் ஒருவித அறியாமையேயாகும்,

இந்த நாட்டைப் பொறுத்தவரையில் எத்தனையோ வகையான அறியாமைகள் உலவுகின்றன. அந்த அறியாமைகளினுல் தான் நம்முடைய சந்ததியினர், சாதிக்க வேண்டியவைகளை யெல்லாம் விட்டு விட்டு, நம்முடைய சமூகம் சீரழிந்து போகத்தக்க அளவிலே தேவையற்றவற்றின் மீதெல்லாம் மோகம் கொண்டு, இன்னமும் சொல்லப்போனுல் வெறிபிடித்து அலைந்து முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை

போட்டுத் தடைப்படுத்தும் கல்லாக நின்றுவிட்டனர். அதையே கடவுளாகவும் கடமையாகவும் கொண்டு விட்டனர். இப்படிப்பட்ட அறியாமைகளினுல்தான் எல்லாநாடுகளேவிட இந்த நாடு மிகவும் சீரழிந்து போயிற்று. இந்தச் சீரழிவைப் போக்கி, சிறப்பான தொரு சமூக அரங்காக இனியேனும் மாற்ற நாம் முன்வரவில்லையானுல் எதிர் காலத்தில் தமிழகத்தின்நிலே எந்தத் திசையை நோக்கி அடிமையாகும் என்பதே புரியாத புதிராகிவிடும்.

இந்த இருபதாம் நூற்ருண்டில்கூட நாமும் நம் சந்ததியினரைப்போல் திருப்பதிகங்களேப் பாடிக் கொண்டிருப்போமேயானுல் இறுதியில் கிடைப்பது திருவோடும் தெருவோடுமாகத் தான் அமையும்.

இன்றைக்குக் கண்கூடாகப் பார்க்கிருேம், ஒவ்வொரு நாடும் எப்படியெல்லாமோ போட்டிபோட்டுக்கொண்டு முன்னேறிக் கொண்டிருக்கிறது. எங்கெந்த விதத்திலெல்லாமோ வளர்ச்சி பெற்றபடி இருக்கிறது. ஆனுல் நாம் மட்டும் நம் முன்னேர்களேவிட மிகவும் கீழ்த்தரமான எண்ணங்களுக்கு முதலிடமளித்து, அதுவே நமக்குச் சிறந்தது; உயர்ந்தது என்று எண்ணிக் கொண்டு பல துறைகளில் பல கோணங்களில் தாய்த் திருநாட்டுக்குத் தவறிழைத்து வருகிருேம். இந்தத் தவறு, இனியும் தொடராதிருக்கும் வகையில் நம்மை நாமே செப்பனிட்டுக் கொள்ள முன்வரவேண்டும். இன்னமும் நம்மில் சிலர்

எனக்கு எதிலும் பேதமில்லே. கறுப்பர், சிவப்பர் என்று நிறம் பார்த்து நேசிக்கமாட்டேன். உயர் தாழ்வு பார்த்து தழுவிக்கொள்ள மாட்டேன். எல்லோருடைய இதயங்களும் விசாலமாய் இருக்க வேண்டும். இதோ என் வீட்டின் கதவு திறந்தே இருக்கிறது. எல்லா நாடுகளின் கலாச்சாரக் காற்றும் என் வீட்டில் தடையின்றி வீசட்டும்.

— மகாத்மா காந்தி

பொறுமைக்கும் பேராசைக்குமே முதலிடமளித்து வருகின்றனர். இதனால் விளைவது என்ன? எண்ணிப் பார்க்கவேண்டும். இந்த எண்ணிப்பார்க்காத குறையினால்தான் தமிழகம் தாழ்ந்தது. அதன் அழகு வடிவமும் சீரழிந்து போயிற்று. ஆகவே இனியாகிலும் எண்ணித் துணிந்து செயலாற்ற வேண்டும், செயலாற்ற முன்வந்து விட்ட பிறகு அதைப்பற்றி மீண்டும் மீண்டும் எண்ணிப் பார்க்க முனையக்கூடாது. முதலிலேயே ஒருமுறைக்குப் பலமுறை எண்ணவேண்டும். அதுதான் இன்றைய நடைமுறைக்குத் தேவையானது. இந்த நடைமுறை ஈடேறும் காலந்தான் இன்பத் தமிழருக்குரிய மறுமலர்ச்சிக் காலம்!

இந்த மறுமலர்ச்சி வருவதற்குள், நமக்குள்ளாக இன்றிருக்கும் பகைமை உணர்ச்சி மறையவேண்டும். அந்தப்பகைமையை மறந்து பாசத்தை வளர்த்தால் தான், பல்வகையில் தாழ்ந்துபோயுள்ள தமிழகம் புதிய பொலிவைப் பெற முடியும். அதைவிட்டு விட்டு, எதைஎதையோ எண்ணி இனியும் நாம் நடைபோடுவோமேயானால் இருப்பதையும் இழந்து, இழந்ததையும் மீட்க முடியாத அளவுக்குக் குன்றி, எடுப்பார் கைப் பிள்ளையாகவே போய்விடுவோம். 'இதுசரியில்லை; அது சரியில்லை' என்று சொல்லிக் கொண்டே இருப்பதில் சுவை இருப்பதாகச் சிலர் கருதுகின்றனர், இதனால் அவர்களுக்கும் பலன் இருப்பதில்லை; சமூகத்திற்கும் நன்மை விளைவதில்லை. இறுதியில் மருத்துவன் காய்கறிக் கடைக்குப்போன கதையாகத்தான் முடியும். ஆகவே இனியாகிலும் எண்ணித் துணிந்து விட்டபின், 'எண்ணுவோம்' என்ற இழிநிலைக்கு அடிமையாகாமல் தொண்டாற்றவும், தூய வாழ்க்கை நடத்தவும் முன்வர வேண்டும். அப்போது தான் அறியாமை அகலும்; அடிமைத்தளை ஒழியும்; தாய்மொழி செழிக்கும்; தமிழகம் தலைதூக்கும்; அதற்காகவாவது முதலிலேயே எண்ணித் துணிந்து செயலாற்ற வாருங்கள்!

"எண்ணித் துணிக கருமம்; துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு"—குறள்

மளகாய்க் கூடை

வெறுங் கூடையோடு வீட்டுக்குள் நுழைந்தபோது துளசியின் நெஞ்சம் இனிக்கத்தான் செய்தது.

என்னவோ ஒரு மகிழ்ச்சி.

தன்னைக் கேலி செய்தவர், எதிர்ப்பக்கம் பலவீனப் பட்டுவிட்டதென்று தெரிந்து, கேலியை வளர்த்திக் கொண்டே போகப் போக எதிர்ப்பக்கமிருந்து அவர் இதயத்தைத் தொடுகிறமாதிரி ஒரு அடி அடிக்கப் படுவதுபோல ஏதோ ஒன்றைச் செய்து விட்டு வந்த எக்காளம்!

''என்னடி துளசி? கூடை விற்பனைக்குக் கணக்குத் தராமல் அப்படித் திண்ணையிலே போய் உட்கார்ந்திட்டே! ஊமாங் கடாயாட்டம்?'' என்றுகேட்டுக்கொண்டே அங்கே வந்தாள், பொன்னுத்தாள்.

தாயிடம் சொல்லலாமா வேண்டாமா என்று துளசிக்கு!

எதற்காகச் சொல்ல வேண்டும் என்று பகுத்தறிவு இடக்கு செய்தது!

மகளை அதற்கு மேல் ஒன்றும் கேட்காமல் நின்று கொண்டிருந்த பொன்னுத்தாளுக்கு, மகளின் புதுவகை மௌனம் பேரதிசயத்தையே கொடுத்தது!

"நான் கேட்டிட்டே இருக்கேன். நீ பாட்டுக்குப் பேசாமலிருக்கையே!'' என்றாள், தாய்!

''ஏன்...இப்படிச் சள்ளுன்னு விழறே?'' என்று சிணுங்கினாள், துளசி.

பழைய மகளையே திடீரென்று கண்ட பொன்னுத்தாள், எதுவும் பேசாமல் நகர்ந்து போனாள்.

'ஏடாகூடமாகத் தன்னுடைய மகள் காசைச் செலவு செய்துவிட மாட்டா ளென்று பொன்னுத்தாள் அறிவாள்.

சிறிது நேரத்தில் துளசி எழுந்து 'கொத்தை' எடுத்துக்கொண்டு படுகைக்கு நடந்து கொண்டிருந்தாள்.

பொன்னுத்தாளின் அம்மாவைப் பெற்ற அம்மாவுக்குச் சில அரிய குணங்கள் இருந்தனவாம். எதிலும் கரு ராக இருந்து தான் அந்தப் பரம்பரை நிலத்தை வளப் படுத்தினுளாம். தன் பெண்ணுக்கு அவள் பெயரையே வைத்தார்கள். மகள் வளர வளர ஒவ்வொரு செயலும் பாவனையும் பொன்னுத்தாளின் மூதாதையிடம் இருந்த தென்று கேள்விப் பட்டவைகளாகவே தென்பட்டன, துளசியிடத்திலும்!

கொள்ளுப் பாட்டியின் பெயரைத் தன் மகளுக்குச் சூட்டியிருக்கா விட்டாலும் கூட தன் மகளுக்கு அந்தச் சுபாவங்களே அமைந்திருக்க முடியும் என்பது பொன்னுத் தாளின் எண்ணம்.

தன்னுடைய மூதாதையரின் நினைவுகளும், மறு பிறவியின் மூலம் அவளோடே இருந்தன. அந்த நம்பிக்கைக் குள் ஏதோ ஒரு தத்துவம் இருந்தது!

தன் மூதாதையர் வழியில் ஒருத்தி தன் குடும்பத்தோடு வாழ்ந்து வருவது போன்ற தெம்பில் அந்த நம்பிக்கை அடங்கிக் கிடந்தது.

அந்த ஊரின் ஒதுக்குப் புறமாக நிலமிருந்ததால், வேறு எந்தத் தொந்திரவும் அந்தக் குடும்பத்துக்குக் கிடையாது?

பெண் பிள்ளையைப் படிக்க வைக்க வேண்டுமென்றுங் கூடப் பக்குவப்படாத ஊர் அது. துளசிக்குப் பிறகு பொன்னுத்தாள் பெற்றெடுக்கவில்லை. ஆகவே, கை வேலைக்காதரவாகத் துவங்கின அவள் துடிப்பு, ஏற்றம் இறைக்கிற வரையில் வளர்ந்து நின்றது. பட்டிக் காட்டுப் பாணியிலேயே அவள், அம்மாவைப் போலவே-மேனி ஒளி குளிக்க வேலை செய்து வந்தாள்.

துளசியைக் காலா காலத்தில் கலியாணம் செய்து கொடுத்துவிட வேண்டுமென்று பொன்னுத்தாள் நினைக்க ஆரம்பித்தது, துளசியின் பதினெட்டாவது வயதில்தான்.

புருஷனும் மனைவியுமாகப் பக்கத்து கிராமத்திற்குப் போய் மாப்பிள்ளை பார்த்தார்கள்.

ஆனுல்...?

தினசரி காலையில் மிளகாய் பறித்து ஊருக்குள்ளிருந்து தினசரிச் சந்தையில் விற்று வந்த அந்தப் பெண்ணைத் தப்புக் கணக்குப் போட்டு விட்டு மாப்பிள்ளைக்காரன்; "பெண் வேண்டாம்" என்று சொல்லி விட்டானும்! அதைப் பொன்னுத்தாள் துளசியின் காதுக்கு எட்ட விடாமலேயே செய்து விட்டாள்.

தன் பெண்ணுக்கும் ஒருத்தனைக் கட்டிக்கொண்டு வாழ்கிற யோகம் இல்லாமல்

போகவில்லை என்பது அவள் நம்பிக்கை.

சந்தையில் பொருளெடுத்து விற்பனை செய்கிறதற்குத் தன் பெண்ணை அனுப்புவதினால் இப்படிப்பட்ட தப்புக் கணக்கு வீழுமென்று பொன்னுத்தாள் எண்ணவே இல்லை!

அந்த மாப்பிள்ளையின் இருதயம் பலவீனப்பட்டதென்று அவள் சும்மாவே இருந்து விட்டாள். தன் பெண் மிளகாய் விற்றதில் கேவலம் என்ன இருக்கிறது?

'தொழில் மனித வாழ்வுக்குத் தலையானது' என்று ஏட்டில் படித்தறியாத பொன்னுத்தாளுக்கு ஒரே ஒரு நம்பிக்கை:

''தொழிலை வைத்து மனுசரை எடை போடறது தப்பு! விவசாயம் இல்லேன்னு மனிசன் நாறிப் போவான்!''

பாத்திரத்தில் பழயதை எடுத்துக்கொண்டு படுகைக்கு விரைந்தாள்; பொன்னுத்தாள். மகளை வயிறு காய வைக்கத் தாய்க்கு விருப்பமில்லை.

காலையில் கலகலப்பாகக் கூடையை எடுத்துக்கொண்டு சென்றவள், சந்தையிலிருந்து திரும்பியபோது எதையும் பேசாமல் இருந்ததின் காரணத்தை பொன்னுத்தாள் கூட்டிப் பிடித்து ஏதோ ஊகம் செய்து கொண்டாள்.

சந்தை விற்பனைப் பணத்தைத் தினமும் தாயிடம் எண்ணிக் கொடுக்கிறவள், அதைச் செய்யாமலிருந்த புதினத்தை அறிந்து கொள்ள அவளுக்கு ஆவலாக இருந்தது.

வரப்புக்கு வரப்பு காவாயிட்டு மிளகாய்ச் செடிக்கு நீர் பாய்ச்சிக்கொண்டு நின்றிருந்தாள், துளசி. அவள் முகத்தில் என்னவோ ஒரு நிறைவு.

அவளுடைய நினைப்புக்களைத் தொட்டுப் போன ஏதோ ஒரு சம்பவத்தினால் பெற்றிருந்த அனுபவம் ஒன்று தந்த நிறைவு போல அது இருந்தது.

''அடியே...துளசீ!''

''யம்மோவ்!''

கொத்துடன் நிமிர்ந்தாள், மகள்.

''கஞ்சி குடிக்கல்லே...?''

—கேள்வி பொன்னுத்தாளுடையது!

''எனக்குக் கஞ்சி வாணும்!''

''ஏண்டி...துளசி, மிளகாயை யாருக்காவது கடனுக்குக் கொட்டிக் கொடுத்திட்டையா என்ன?''

பொன்னுத்தாள், அறிய வேண்டிய பிரச்சினைக்கே மீண்டும் தாவினாள்.

ஆனால், துளசி தன் பிரச்சினையிலிருந்து அதற்குத் தக்க பதில் சொல்லவில்லை.

''உனக்குக் கறுப்பாத்தாளைத் தெரியுமா அம்மா?'' என்றாள், துளசி.

''எந்தக் கறுப்பாத்தாள்?''

ஊரின் வட கோடியிலி

ருந்து தென்கோடி வரை எத்தனை 'கறுப்பாத்தாள்கள்' வேண்டும் அந்தக் குக்கிராமத்தில்?

"மொட்டையாச்சொன்னல் எனக்கு எவளைத் தெரியும்? பட்டப் பேரில்லையா?" என்ருள், பொன்னுத்தாள்.

"பட்டமாவது பவிசாவது? ஒட்டபாளையத்தாள்னு சொன்னு ஊருக்கே தெரியுமாமே!"

கொத்திக் கொண்டே மகள் சொன்னதும் சுருக் கென்றது பொன்னுத்தாளுக்கு!

"ஆமாம்! அவளுக்கு என்னவாம்?"

"அவளுக்கு ஒண்ணும் இல்லே! எனக்குப் பார்த்த புருஷன் என்னுச்சின்னு கேட்டாள்!"

"ஓகோ!" என்று இழுத்த தாய், விஷயத்தை மென்று விழுங்கினுள்.

தெரியுமே—

பொன்னுத்தாளுக்கா தெரியாது? துளசிக்குப் பார்த்த மாப்பிள்ளை, கருப்பாத்தாள் பெண்ணைக் கட்டிக் கொண்டிருக்கிறதையா அவள் அறிய மாட்டாள்.?

இருந்தும்—பொன்னுத்தாளையும் புருஷனையும் கேலி செய்கிற மாதிரி, முகத்திலடிக்கிற மாதிரிப் பேச்சை இந்த ஒட்டபாளையம் கருப்பாத்தாள் துளசியிடம் ஏன் கேட்க வேண்டும்?

அவளவள் மருமகனெடுத்தால், அவளவளோடு பெருமை நிற்கணும்? இன்னும் என்னென்ன வெல்லாம் கேட்டாளோ, மகள் உள்ளத்தில் எத்தகைய சலனங்களை யெல்லாம் எழுப்பினுளோ...

கள்ளங் கபடம் தெரியாமல் வயதோடு வாலிபத்தையும் சுமந்து கொண்டு வளர்ந்திருந்த பெண்ணிடம் போய் இதை யெல்லாம் கேட்டு வைக்கலாமா அந்தப் பெருமைக்காரி?

பொன்னுத்தாளால் பேச முடியவில்லை! அப்படி ஒரு வாய்ப்பைத் தட்டிக் கொடுத்தது தாயும் தந்தையும் அல்லவா? வளர்ந்த பெண்ணுக்குக் காலாகாலத்தில் ஒரு கணவனைக் கட்டிப் போட வேண்டியது பெற்ருேரின் செயலல்லவா?

இப்போது மகளை 'நாலு பேர்' கேட்கிருர்கள் என்று எதற்காகக் குமைய வேண்டும்?

மகள் அதைக் கேள்விப் பட்டு விட்டுத் தன்னிடமே திருப்பிக் கேட்கும் போது எதற்காக இப்படிப் பொன்னுத்தாள் அஞ்ச வேண்டும்?

"என்னம்மா தெரியுமா உனக்கு?" என்ருள், துளசி மீண்டும்.

"தெரியும்; தெரியும்! அவள் கிடக்கிருள். நீ கஞ்சியைக் குடித்து விட்டு வேலையைப் பார்!"

தாயின் பதிலுக்குப் பின்

ஞல் விடுவிடென்ற நடை தான் தெரிந்தது துளசிக்கு!

துளசி மனத்துக்குள் சிரித்துக் கொண்டாள்.

அடுத்த நாள் காலை பனைப் பொழுது இருக்கும்.

சந்தையிலிருந்து திரும்பி வந்திருந்தாள், துளசி. பண்ணைப் பக்கமிருந்து எருதுகளை ஓட்டிக் கொண்டு வந்த பொன்னுத்தாளுக்கு மகளைப் பார்க்க அதிசயமாக இருந்தது.

ஒண்டிப்புதூர் செட்டுக்காரக் கெட்டிச் சேலையோடு மட்டும் சந்தைக்குப் போன தன் மகள் ஒரு பட்டுத் துணியால் உடல் மூடியிருந்தாள்.

''ஏதுடியம்மணி ரவிக்கே?'' என்று கேட்டுக் கொண்டே அங்கே வந்தாள், பொன்னுத்தாள்.

'புது மாதிரித் துணி. இந்தப் பக்கம் இப்படிப் பட்ட துணியையே போடுவதில்லையே குமரிகள்? தன் மகள் மட்டும் ரவிக்கை மீது ஆசைப்பட்டதெப்படி?' என்பது அவள் சந்தேகம்!

துளசி சொன்னாள்:

''சந்தைக் குத்தகைதாரர் எடுத்துக் கொடுத்தார்! எனக்கு!''

-அவளுக்கு அதைச் சொல்லும் போது வெட்கமாக இருந்தது.

பொன்னுத்தாள் அதைப் பொருட் படுத்தாமலேயே,

''ஓகோ, நேற்றைக்கு மிளகாய் விற்ற பணத்தை அவன் கிட்டே கொடுத்தனுப்பினையா?'' என்று கேட்டாள்.

''இல்லேம்மா, நேத்தைக்கு மிளகாய் தானம் பண்ணினேன்!'' என்று துளசி சொல்லும் போது, அவள் கண்கள் நிறைந்தன.

''என்னது...?'' என்றாள், தாய்.

''எனக்குத்தான் ஒரு மாப்பிள்ளை பார்த்திருந்ததே, அந்த மாப்பிள்ளைதான் என் புருஷன் என்று நேற்றுவரை நெனைச்சிட்டே இருந்தேன். அப்புறம் சங்கதி தெரிஞ்ச போது...''

''என்னடீ சங்கதி?''

தாய் துருவிக் கேட்டாள்.

''அந்த மாப்பிள்ளைக்குத் தான் கறுப்பாத்தாள் பொண்ணைக் கட்டிக் கொடுத்திருக்காங்க என்ற சங்கதி!''

''அவன் போனால் உனக்கு உலகத்திலே வேறு மாப்பிள்ளையாடி இல்லே?'' என்று சீறினாள் பெண்ணைப் பெற்றவள்.

''அதில்லேம்மா! கறுப்பாத்தாள், இதையெல்லாம் தெரிஞ்சும் வந்து என்னைக் கேட்டது குத்தலா இருந்தது. அதனாலே தான் நேத்தைக்குத் தானம் பண்ணீட்டேன்!''

''என்னடி சொல்கிறாய்? ஒண்ணும் விளங்கலையே.''

''அந்த மாப்பிள்ளைக்கு என்னை ஏன் பிடிக்கல்லே தெரியுமாம்மா... நான் மிளகாய் விற்கறேன்னு, என்னைக் கேவலமா நெனைச் சிட்டான்,

அவன்!''

பொன்னுத்தாள் மறைத்து வைத்த விஷயம் துளசிக்குத் தெரிந்து விட்டது! இனி அவளிடம் எதையும் தாய் மறைக்க முடியாது, மௌனத்தைத் தவிர.

''...ஆனல் ஒண்ணு தெரியுமோ, கறுப்பாத்தாள் சொன்னுள். அவனுக்கு மொளகா வத்தல்னு உசிராம்; அதற்காகவே கறுப்பாத்தாள் ரெண்டு வள்ளம் மொளகா வாங்கிப் போனுள்'' என்றுள் துளசி. ''...அதோடு இல்லே! நான்தான் அவளை மறுபடியும் கூப்பிட்டு உன் மருமகனுக்கு மொளகாய் பிடிக்குமானு இந்த மொளகாக்காரி பேரைச் சொல்லி இதையெல்லாம் சாப்பிடச் சொல்லுன்னு, கொட்டிக் கொடுத்திட்டேன்!'' என்று துளசி முடித்த போது பொன்னுத்தாள் ஒன்றும் புரியால் நின்றுள்.

''அவனுக்குக் கறுப்பாத்தாள் மகளைத்தான் கலியாணம் கட்டிவெச்சாங்கன்னு உனக்கு ஆரடி சொன்னுள்?'' என்றுள், பொன்னுத்தாள்.

''நீ மூடி வைக்கலாம்! ஊரு மூடிவைக்குமா? எனக்குச் சுங்கக்காரர் சொன்னுர். அதனுலே இனி நானேன் அவனை நம்பி இருக்கணும்னு சுங்கக்காரர் கிட்டேயே ரவிக்கையெடுக்கச் சொன்னேன்.''

துளசி ஆவேசத்தோடு சொன்னுள்: ''ரவிக்கை எடுக்கச் சொன்னுல்... அவரையே நீ கட்டிக்கறையா என்ன?''

''அதுதான் என் ஆதிப் பேச்சே! ஒரு நாள் அவன் ஏன் துளசி மேல் துணி போடலேயா'ன்னுன். நான், 'ஒன்னைக் கலியாணம் பண்ணிக்கறதுன்னு நீ ஒன்னு எடுத்துக் குடேன்'னு சொன்னேன்.''

துளசியின் பேச்சைக் கவனத்தோடு கேட்ட பொன்னுத்தாள், அவளுடைய கருருக்குள் கருராய் அடங்கிக் கிடந்த பெண்மை உணர்ச்சிகளுக்கு ஏதோ ஒரு புகலிடம் வலுவில் கிடைத்துவிட்டதை எண்ணி ஆகவேண்டிய காரியத்துக்குச் சிந்தனையை ஓட்டினுள்.

* * *

அதிகாலையிருக்கும், செடிகளில் காய்பறித்துக் கொண்டிருந்தாள், துளசி.

''ஏண்டியம்மா.......சுங்கக்காரன் உன்னைப் பிடிக்கல்லேன்னு சொல்லிட மாட்டானே! ஆம்பிளைகளை அவ்வளவு சீக்கரம் நம்பிடாதேடி!'' என்று கூறிக் கொண்டே அருகே நடந்தாள், பொன்னுத்தாள்.

''துளசி மோந்தால் மணக்கும்; வாயிலே போட்டுமெல்ல நினைச்சா காரும். தெரியுமா, அம்மா?'' என்றுள், அந்தப் பெண்.

அவள் தந்தது...!

பூவை எஸ். ஆறுமுகம்

மண்ணைப் பொன்னாக்கும் வண்ணப் பொழுது; தங்கத் துகள்கள் தரணி தனை அந்தம் மிகுந்த கனவுலகாக உருமாற்றிக் கொண்டிருந்த ஆனந்தமான வேளை. பின், இளஞ் சுடரொளியிலே கனவுகள் சதிராடக் கேட்கவா வேண்டும்?

தேதிப்படத்தாளைக்கிழித்து விட்டு, அன்றையத் தேதியையும், அது ஏந்தி நின்ற கிழமையையும் பார்த்தாள் கல்யாணி அம்மாள். இனம் புரியாத மகிழ்வும், இனம் புரிந்த இன்னலும் சமன் அளவிட்டுத் தோன்றலாயின. தும்பைப் பூ நிறப்புடவையின் முகதலைவில் கண்ணீரின் முத்துச்சரம் ஒடுங்கியது, யோகியாரின் உள்ளமென! ஆளோடியைக் கடத்தினாள் அவள். கதிர்களின் சதிராட்ட விளையாட்டு நடைப்பகுதியிலும் நடந்தது. அவள் ஏறிட்டு விழித்தாள். விழி விரிப்பில் படர்ந்த உருவத்தைக் காண எதிர்ப்புறம் கண்ணோட்டம் செலுத்தினாள் அவள். பெரிது செய்யப்பட்ட அந்தப் புகைப்படம் அண்டியது. கால்பாதங்கள் தத்தளித்தன; தடுமாற்றம் கண்டன. தரையில் பாவிய ஸ்மரணை இல்லை. கால் விரல்கள் ஈரம் ஏந்தின. 'அத்தான்!... நான் செஞ்சது குத்தம் தானா?... இதைத்தவிர, வேற வழி ஒண்ணுமே எனக்கு மட்டுப்படலேங்களே?... நான் என்ன செய்வேன், பாவி?...' வாய்ப் புலப்பமும், சுடுநீரின் குழப்பமும் அவளுடைய அறிவுணர்வைத் தட்டிப் பறித்துக் கொண்டன போலும். தாலாட்டுப் பொம்மையைப் பறிகொடுத்த விளையாட்டுக் குழந்தைபோலச் செருமிச் செருமி அழுதாள்!

“அம்மா...!” என்று அழைத்தபடி கோமதி வந்தாள். அவள் மட்டும்தானா வந்தாள்? அவளைத்தொடர்ந்து அன்பும் பாசமும் வந்தன; புன்னகையும் புத்தெழிலும் வந்தன. அவள் கையில் கடிதமொன்று இருந்தது. “அத்தான் உனக்கு எழுதியிருக்காங்க, அம்மா!”

அன்னை கடிதம் ஏந்தினாள்.

ஆவணி இருபத்தேழாம் தேதி முகூர்த்தம் வைப்பதற்கு 'வேளை' பொருந்தியிருக்கிறதென்றும், அன்றைக்கே கலியாணத்தை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறும் எழுத்துக்கள் ஓடியிருந்தன. ஓடக்காணும் பூம்புனல் வெள்ளமாய் அவள் நிறைவு அடைந்தாள். நிறைவு ஆனந்தத்தைக் காட்டிற்று; ஆனந்தம் அமைதியைச் சுட்டியது; அமைதி கண்ணீரைக் கூட்டியது. கண்ணீரிலே தெய்வத்தைத் தரிசித்தாளோ?

சற்றைக்கெல்லாம் அவளது மனம் மீண்டும் அலைபாயத் தொடங்கிவிட்டது. தாலி கொடுத்து, 'கொண்டவன்' எனும் ஸ்தானத்தை ஏந்திய 'அந்த நாள்' நினைவில் குதித்திருக்கவேண்டும்; கொண்டவன் . தாலியுடன் கொண்டோடிய 'அந்த நாள்' நெஞ்சத்தில் குத்தியிருக்க வேண்டும்! சதா சர்வகாலமும் சிணுங்கிக்கொண்டிருக்கும் கைக்குழந்தைகள் போலவே தான் இந்த நினைவுகளும்!

''அம்மா, ஆசாரி வந்திட்டாரு, அம்மா''!

குரல்கொடுத்தாள்கோமதி. நிலைப்படியைக் கடந்துவந்த ஆசாரியைக்கண்ட சடுதியில், அவள் தூணுக்குத் துணை ஆனாள். மார்பகச் சேலையை இழுத்துப் போர்த்திக்கொண்டாள். இமைகளில் வண்ணாத்திப் பூச்சிகள் குந்திக்கொண்டன சிறகடிக்காமல் தப்புமா?

ஆசாரியைக் கண்டதும், கல்யாணி அம்மாளுக்கு அதிர்ச்சி விளைந்தது. சமாளித்துக்கொண்டாள். ''வாங்க ஐயா! நகை நட்டெல்லாம் சாடாவையும் செஞ்சு முடிச்சுப்பிட்டீங்களா?'' என்று கேட்டாள்.

''ஒ, ஒங்க மனசுப்பிரகாரம் சகலத்தையும் கச்சிதமாச் செஞ்சுப் பிட்டேனுங்க!... நீங்க குடுத்த பழைய நகை அம்புட்டையும் உருக்கி, ஒங்க பொண்ணு மாதிரி காட்டினது போலவே அற்புதமாச் செஞ்சிருக்கேனுங்க!... நீங்க என்னை நம்பினீங்க. அதாலே தான் எங்க வீட்டோடவே பட்டறையை வச்சுக்கிட்டு அலுவல்பார்க்க ஒத்து வந்திச்சுது. இந்த நம்பிக்கை தானுங்கஅம்மா எங்கமாதிரிப் பட்டவுங்களுக்குச் சொத்து சுகம் எல்லாம்!... எங்க அப்பாரு படிச்சுக் குடுத்திருக்கிற நல்லபாடமும் இது தானுங்க!...''

மூச்சுப்பிடிக்கப் பேசினவன், மறந்துபோகாமல் மூச்சைப் பிரித்துவிட்டான்! செய்து வந்த ஆபரணங்களை 'வெல்வெட்' துணிப் பெட்டியினின்றும் பிரித்தான் ஆசாரி சிங்காரம். ஜடைபில்லை, மோதிரம், கைவளை, சங்கிலி, மூக்குத்தி, லோலாக்கு என்று

அணிகலன்கள் அணிவகுத்துக் கொண்டன.

கல்யாணி அம்மாளின் பெற்றமனத்தளத்தில் நின்ற பாசம் என்ற கம்பத்தில் மகிழ்ச்சி கொடிகட்டிப் பறந்தது. ஆனால், அவள் இதயம், அந்த இதயத்தின் இதயம் ஏன் அப்படி அல்லாடித் தள்ளாடுகிறது?

"ஏம்மா கோமதி, உன் மனசுக்குப்பிடிச்சிருக்குதாம்மா?"

"பேஷா!"

"உன் அத்தானுக்கும் பிடிச்சிருக்குமில்லே?"

"உங்க அண்ணன் பிள்ளை சமாச்சாரம் உங்களுக்குத் தானே அம்மா தெரியும்?"

"எம் பொண்ணுச்சே? பேச்சுக்குக் கேட்கணுமா?"

சிங்காரத்துக்கும் சிரிப்பு, வாய்ப்பிடியில் பிடிபட மறுத்தது.

"கணக்கு எம்பிட்டு ஆகுது?"

ஆசாரி துண்டுச்சீட்டு ஒன்றைச் சமர்ப்பித்தான். நகைகளின் மொத்த எடை, பிறகு உருக்கப்பட்டதும் உருவான தங்கக்கட்டிகளின் எடை, கழிவு - சேதார எடை, கற்கள் விலை, கூலி—இப்படிக் 'கூட்டுப்புள்ளி' காட்டிற்றுக் கடுதாசி.

மூன்று நாள் கெடுவைத் தாள் வீட்டுத்தலைவி.

பதில் பேசவில்லையே சிங்காரம்!...

கூடப்பிறந்தவரிடமிருந்து வந்துசேர்ந்த கடிதம், "உன் இஷ்டப்பிரகாரமே, உன்மகள் கோமதி ஜாதகமும் என் மகன் சேதுவின் ஜாதகமும் கனகச்சிதமாய்ப் பொருந்திவிட்டது. ஆவணி பிறந்தவுடன், கல்யாணத்தை முடித்துவிடவேண்டியதுதான். முகூர்த்த நாளைப் பார்த்து அப்புறம் எழுதுகிறேன்!" என்ற சேதியை அஞ்சல் செய்தது; 'அஞ்சேல்' என அபயம் தந்தது.

ஆவணி பிறந்ததோ, இல்லையோ, பெற்றவள் உற்ற மகளை அழைத்து அவளிடம் சொன்னாள்: "அம்மா கோமதி! உன்னைப் பெத்தவ கிட்ட நீ எதொண்ணையும் ஒளிவு மறைவாக வச்சுக்கிட வேணும். உனக்கு என்னென்ன நகை நட்டு வேணுமிங்கிறதைச் சொல்லிப்பிடு. உன்னோட சிநேகிதிங்க யாரானும் போட்டிருக்கிற தினுசு உம் மனசுக்குப் பிடிச்சிருந்தாக்க, அதுகளை வாங்கியாந்து காட்டு. செட்டிநாட்டுப்பக்கத்திலேருந்து நாணயமான ஆசாரி யாரோ வந்திருக்காராம். அவரை அழைச்சிட்டு வரச்சொல்லி, அவர்கிட்டக் காண்பிக்கலாம். உன் அப்பா இருந்து, உனக்கு வேணுமிங்

கிறதைச் செஞ்சு போட்டு அழகு பார்க்கக் கொடுத்து வைக்கலே. இதை நினைச்சாத் தான் ராத்தூக்கம் பகல் தூக்கம் கொள்ளலே! ம்...பிடிச்சுப் போட்டவன் ஆட்டிப்படைக்கிறான். சரி அம்மா! நாளைக்கு நல்ல நாள்தானும். நான் சொன்ன தாக்கலை மறந்துப் புடாதே!''

உடன் தொடர்ந்த நாள் விடிந்தது.

தாய் வீட்டில் பீரோவிலிருந்த தன்னுடைய பழைய நகைகளைப் பெட்டியினின்றும் பிரித்தெடுத்தாள். நகையோடு நகையாக 'அந்தத் தாலி'யும் வந்து சேர்ந்தது. அவ்வளவுதான், தன் உயிரையே யாரோ பிரித்தெடுத்தாற்போல உணரலானாள் கல்யாணி அம்மாள். தன்னைத் தானே ஒருமுறை குனிந்து பார்த்துக் கொண்டாள். வெள்ளையுடை காட்சியளித்தது. காலச்சிமிழைப் பதமாகத் திறக்கக்கூடவில்லை. பதட்டம். 'பொல, பொல'வென்று மணிகள் உதிர்ந்தன. கண்ணீர் மணிகளுக்கு ஓசை ஏது? உரு வந்தானே உண்டு? உருவமொன்று தோன்றியது. அது அவள் புருஷனின் உருவம். சோமசேகரன் 'ஜம்'மென்று இருந்தார். மாப்பிள்ளை அல்லவா? மனம் அறிந்து, மணம் முடித்தார்கள். கெட்டிமேள முழக்கத்தூடே திருப்பூட்டப்பட்டது. அவள் அவரதுசொத்து ஆனாள். காலப்பூ இதழ்கள் சிலவற்றை உதிர்ந்துச் சிரித்தது. கோமதி பிறந்து சிரித்தாள்; பெற்றோர்கள் பேணிச்சிரித்தார்கள். முன் சிரிப்பு, பின் அழுகை என்பார்கள். அது கல்யாணி அம்மாள் வரை மெய்யேதானே?

இமை பிதுங்க, மனம் பிதுங்க, அந்தத் தாலியையே உறுத்துப் பார்த்தாள் அவள். மங்கலநாண் எனும் சிறப்புப் பெற்ற அந்தத்தாலி இருந்தது. ஆனால், அந்தத் தாலிக்கு உடையாளி போய்விட்டார், பாவம்! பாவமும் புண்ணியமும் ஊழ் விளையாட்டு!

நினைவு மீண்டது.

''ஆசாரி சிங்காரமுங்க அம்மா!'' என்று தன்னை அறிமுகம் செய்வித்து நின்றான் வந்தவன். தாலியைப் பெட்டியில் பக்தியுடன் வைத்தாள்; பிற நகைகளை வெளியே எடுத்தாள். மகள் கொண்டுவந்து காட்டிய 'மாதிரிகளை'யும் முன்னேவைத்தாள். தன் கைவசமுள்ள நகைகளை உருக்கினால், மகள்விரும்புவதுபோலச் செய்ய இயலுமாவென்று கேள்விக்குறியைப் போட்டாள் அவள்.

''நகைங்களை உருக்கி எடை பார்த்துத் தானுங்க சொல்ல முடியும். நீங்க சம்மதிச்சா, நான் இதுகளை வீட்டுக்குக் கொண்டுபோய், உருக்கி, எடைபோட்டுக் காண்பிக்

கிறேனுங்க. என்னைப்பத்திப் பக்கத்துத் தெரு 'மு,லெ' வீட்டிலே கேட்டுக்கிடுங்க அம்மா,'' என்று உரைத்தான் அவன். அவன் பேச்சு அவனது நாணயத்துக்கு உரைகல் ஆனது. நம்பினாள். சென்றான். திரும்பினான். ''இன்னம் இரண்டு சவரன் எடை தங்கம் தேவைப்படுதுங்க. இரு,நூறு ரூபாய்பணம் கொடுத்தாலும், தங்கம் வாங்கலாங்க!...'' என்றான்; எடை படிக்கற்களையும் தராசையும் தரையில் வைத்தான்.

கல்யாணி அம்மாளுக்குத் திகைப்பு வளர்ந்தது. 'தெய்வமே!' என்று நெடு மூச்சைப் பிரித்தாள். பிரஹதீஸ்வரர் ஆலயம் மணி முழக்கம் செய்தது. அவளுக்கு ஓர் ஆலோசனை புறப்பட்டது, புறப்பட்ட நடுக்கத்தைப் போர்த்தி மூடியவளாக, உள்ளே சென்றாள். சற்றுமுன் தரிசனம் தந்த தாலியைத் தொட்டாள். தொட்டகை நடுங்கியது. ''அத்தான், என்னை நீங்க மன்னிச்சிருங்க. நம்ம பொண்ணு நல்லகாரியத்துக்குத்தான் இந்தத் தப்பைச் செய்யவேண்டியிருக்குது. ஆசாரிசொல்லுற பணத்துக்கு வகை இல்லீங்க. பொண்ணைப் பொறந்தவ நான் வேறே எங்கே போயுங்க பணம் புரட்டுவேன்?... இந்தத் துப்பு சம்பந்தி வீட்டுக்கு எட்டப்புடாதுங்களே?... இல்லேன்னா, ஆயிரம் ரெண்டாயிரம்கூட மறுபேச்சாடாம எங்க அண்ணன் தருமே?... பொண்ணோட கல்யாணச் செலவுக்கே இந்த வீட்டை அடமானம் வச்சுதானுங்க தீரணும்!... அத்தான், நீங்க தெய்வமாவே இருந்து, என்னைப் பெரிய மனசு பண்ணி மன்னிச்சுக் கிடுங்க!... அத்தான், அத்தான்!...''

மகள் அறியாமல், ஆசாரியிடம் அந்தத் தாலியை நீட்டி அதையும், 'அழித்து'ப்பயன் படுத்திக்கொள்ளுமாறு கோரினாள் கல்யாணி அம்மாள். அன்றிரவு பூராவும் ஆயிரம் தரம் ''அத்தான்'', ''அத்தான்!'' என்று நாமாவளி பாடிக் கொண்டேயிருந்தாள்!

முகூர்த்த தினம் நிர்ணயம் ஆனது.

மகள் கோமதியின் வதுவை விழாவுக்கான பூர்வாங்க ஏற்பாடுகளைச் செவ்வனேமுடித்த நிறைவில் மனம் மகிழ்ந்துநின்றாள் கல்யாணி அம்மாள். திருமண விழாவுக்காக வீட்டை 'அடமானம்' வைத்துப் பணம்பெற ரகசிய ஏற்பாடுகளைச் செய்தாள் அவள். மானம்புச்சாவடியில் தெரிந்தவர் ஒருவரை வரவழைத்து விஷயத்தைச் சொன்னாள். அவர் யோசித்து முடிவுசொல்வதாகக் கூறிப்போனார். போன பெரியவர் திரும்பிய போழ்தில், வாஸ்தவமாகவே

'பெரிய மனிதராகவே' வந்தார். வீட்டை அடமானம் வைக்கத் தேவையில்லையென்றும், தேவைப்படக்கூடிய பண உதவியைச் செய்வதாகவும், மெதுவாகப் பணத்தைத்திருப்பித் தரலாமெனவும், இந்த விஷயம் மூன்றும் பேருக்குத் தெரியாமல் காப்பதாயும் உத்தாரம் மொழிந்தார். அந்த விஞடியில் அவளுக்கு இரண்டு தெய்வங்கள் தோன்றினர். ஒன்று: உலகினை ஆண்டவன். அடுத்தது: அவளை ஆண்ட சோமசேகரன்!

நாடியம்மனையும் அங்காளம்மனையும் துணைக்கு அழைத்துக்கொண்டு அழைப்பிதழ்கள் சுற்றுலா புறப்படலாயின.

'அம்மா, எங்கழுத்திலே அத்தான் மூணு முடிச்சுப் போடட்டும். அப்புறம் பாரேன், நம்ம கஷ்டம் எல்லாம் பறந்து போயிடும்!' என்று அடிக்கடி தேறுதல் அளித்து, துயரம் அழித்து வந்த அருமைப்புதல்வியை எண்ண எண்ண, கல்யாணி அம்மாளின் இதயம் இனித்தது. '...எங்குடும்ப கவுரவத்தைக் காப்பாத்தத்தான் எனக்கு இம்பிட்டுத் தொல்லைங்க. ஆனு, இதெல்லாம் எங்க கந்தசாமி அண்ணனுக்குப் பட்டுக்கோட்டைக்கு எட்டிப்பிடாமல் இருக்க வேணும்!...''

உருமப்பொழுது.

'குடமிளகாய்' சாப்பிட்டதற்கு அனுசரணையாக வெள்ளோட்டம் வந்த செஞ்சுடர்ச் செல்வன் திடுதிப்பென்று 'ஊசி மிளகாய்' கடித்தாற் போன்று உரைக்கத்தொடங்கினுன்.

காலையில் நல்ல நேரம் கணித்து, மகளுக்குச் செய்திருந்த புது நகைகளைப்பூட்டி அழகு பார்த்து மகிழ்ந்த காட்சிக், கல்யாணி அம்மாளுக்குச் சரபோஜிமஹால் சிற்பத்தை நினைவூட்டிக் கொண்டேயிருந்தது. பெட்டகத்தில் நூறுரூபாய் நோட்டுக்களின் வாசம் வேறு அவளுக்கு இதம் அளித்தவண்ணம் இருந்தது. லாபநஷ்டக்கணக்கை எழுதிக் காட்டியவாறு இருந்த காலக் கணக்கனின் நியதிப் பொறுப்பு அவளது கண்களைப் பொசியச் செய்யத் தவறவும் இல்லை!

வாசலில் இரட்டைமாட்டு வண்டி ஒன்று வந்து தேங்கியது.

"அம்மா!"

கண் நிமிர்த்தி, நோக்கை நிமிர்த்திவிட்டாள் கல்யாணி அம்மாள். கையில் சாவிக் கொத்துக் குலுங்கியது. முந்திரிப் பருப்புத்துணுக்கள் பற்களுக்கிடையே நசுங்கிச் சுவை காட்டின!

வாசற்புறத்தே ஆசாரி சிங்காரம் நின்றுன்.

'இவருக்குத்தான் நகை

செஞ்ச கூலி அவ்வளவையும் அணு பைசா பாக்கிவைக்காம குடுத்துப்பிட்டேன்?... அப்பாலே, ஏதுக்கு இப்ப மறுபடியும் வந்திருக்காராம்...?'

தவழ்ந்துவந்த கேள்விக்குத் தக்க விடை தவழ்ந்து வந்தது!

சிங்காரத்தின் துணை கொண்டு நடந்துவந்த, 'அந்த உருவம்' அவளுடைய கண் நோக்கில் தென்பட்டதுதான் தாமதம்; அவளது தலை 'தலையாட்டிப் பொம்மை' ஆனது. '...இந்த ஆண்ட பெருமாள் ஆசாரி இத்தனை காலங் கழித்து இப்போ இங்கே ஏன் வந்திருக்கார்?...' வினாவின் சுழிப்பில் விதிச்சுழல் நிழலாடியதா?

குடும்பச் சொந்தம் கட்டு விட்டுப்போகாமல் இருக்க வேண்டி, கல்யாணியை அவளின் மாமன் முறைமை கொண்ட சோமசேகரனுக்குக் கல்யாணம் செய்துகொடுப்பதாக, இரு தரப்புப் பெற்றோர்களிடையிலும் நடந்த பேச்சு வார்த்தைகளின் பேரில், ஒரு முடிவு நிர்ணயம் ஆயிற்று! மாப்பிள்ளை வீட்டினர் குல வழக்கத்தை ஒட்டி, 'முகூர்த்தத்தாலி' செய்து, மணவறையில் வைக்கவேண்டும். அவ்வாறே தாலி செய்வதற்கு, அப்போது நற்கியாதி பூத்து விளங்கிய ஆண்ட பெருமாள் ஆசாரியை ஏற்படுத்தி, வெற்றிலைபாக்குக் காணிக்கை முதலியன வைத்தார்கள். அவர் கைராசி வாய்க்கப்பெற்றவர் என்பது ஏகப் பிரசித்தம்! ஆனால், விவாக தினத்துக்கு முந்திய நாள், உருக்கப்பட்ட தங்கக்கட்டியைத் திருப்பிக் கொண்டுவந்து கொடுத்துவிட்டார் ஆசாரி. அதற்கப்புறம் அவரை அந்த வட்டாரத்திலேயே காணோம்! இந்தப் பதினெட்டு வருஷங்களாக அவர் எங்கே அஞ்ஞாதவாசம் இருந்தாரோ?...

காம்புவிட்டு உதிரக் காத்திருக்கும் கனிந்த பழமென நின்றார் ஆண்டபெருமாள் ஆசாரி. தளர்ந்த உடல்; முதிர்ந்த நரம்புகள். நெற்றியில் விபூதிக்கோடுகள். நரை திரண்ட முடியை 'அள்ளி முடிந்து'விட்டிருந்தார்.

ஆசாரியைக் கண்ணுற்றதும், கல்யாணி அம்மாளுக்குத் துணுக்கென்றது. காலச் சவுக்கு அவள் நெஞ்சைத் தஞ்சமடையாமல் இருக்குமா, என்ன?

'ஒருவேளை, இவர் கையாலே செஞ்ச தாலி எங்கழுத்திலே ஏறியிருந்தால், என்னோட அத்தான் பிழைச்சிருப்பாரோ?... என் மாங்கல்யம் பிழைச்சிருக்குமோ?...'— எண்ணம் பிறந்த பகைப்புலத்தில், தன் தாலி உருமாறிய நிகழ்ச்சியும் கோடு அமைத்து நகைத்தது! 'என் விதி!... ம்!...'

"அம்மா!"

"வாங்க, ஆசாரி ஐயா!"

முகப்பு வெளித் திண்ணையில் அமர்ந்தார் ஆண்டபெருமாள் ஆசாரி.

தாம்பூலத் தட்டு ஓடி வந்தது.

"அம்மா! என்னை மறந்திருக்கமாட்டீங்க நீங்க!... உங்களுக்குத் தாலி செய்ய இருந்த வேளையிலே, எம் மகளுக்குப் பிரசவவேதனை அதிகமானதாகத் தந்தி வந்திச்சு. ஆனபடியினலே, நான் பொன்மலைக்கு ஓடிப்போயிட்டேனுங்க. கடவுள் புண்ணியத்தாலே எம் மகள் பெற்றுப் பிழைச்சுது. ஆனு, இங்கே வந்து பார்க்கையிலே, உங்க கல்யாணம் முடிஞ்சிருந்திச்சு. பிழைப்புக்காக அலையவேண்டி வந்திச்சு. கடைசிலே, உங்க பரிதாபமான நிலைமையைக் கேள்விப்பட்ட நான் கழுத்திலே கத்திபட்ட ஆட்டுக்கிடாமாதிரி துடிச்சிப் போனேனுங்க. எங்கையாலே உங்களுக்குத் திருமங்கலியம் செஞ்சு தரத்துக்கு எனக்கு அதிர்ஷ்டம் வாய்க்காட்டியும், உங்க பொண்ணுக்காச்சும் கட்டாயம் தாலி செஞ்சு தந்துப்பிடவேணும்னு ஆண்டவனை எண்ணி உறுதி எடுத்துக்கிட்டேனுங்க. என்னைக் கானும் ஒருநாள் உங்ககிட்ட வந்து, விவரத்தைச் சொல்லி மன்னிப்புக்கேட்கணும்னு இருந்தேன். இப்போ வேளை கூடியிருக்குதுங்க!...இந்தாலே இருக்கானே சிங்காரம். இவன் எம்மவன்!...இவன் மூலம் உங்க பொண்ணு கல்யாணச் சேதியை அறிஞ்சேன். அம்மா உங்ககிட்ட ஒரே ஒரு வரம் வாங்கிட்டுப் போகத்தானுங்க இப்போ வந்திருக்கேன். எங்க குலதெய்வத்தை நேந்துக்கிட்டு, என்னுேட சொந்தத் தங்கத்திலே செஞ்ச தாலி இது! உங்க அண்ணன் வீட்டிலேயும் என் ஆசையைச் சொல்லியனுப்பிச்சேன். இதுக்குப் பதிலாக நீங்க எனக்கு யாதொண்ணும் தரப்பிடாதுங்க. இந்தத் தாலியையே உங்க மகளுக்குப் பூட்டறதுக்கு சரியின்னு ஒப்புக்கிட்டீங்கண்ணு, அப்பதானுங்க தாயே என் மனசு ஆறும்!..."

ஆண்டபெருமாள் விம்மினர்.

"அம்மா!"

"என்னுங்க!"—கண்ணீர் பொழிந்தாள். அவளுடைய வலது கையில் புதுத்தாலி மின்னிப் பளிச்சிட்டது!

ஆசாரி இருமினர்; "இன்ஞெரு சேதிங்க!...இந்தாங்க, இது உங்க தாலி!...இதைப் பத்திரமாய் வீட்டிலே வச்சுக்கிடுங்க. உங்க மகளுக்குச் செஞ்ச நகைகளுக்குக் குறைஞ்ச தங்கத்தையும் நானே வாங்கிப் போட்டுப்பிட்டேனுங்க, அம்மா! இலையும் பழுப்பும் எல்லாருக்குந் தாங்க! உங்க அன்பு மனசு

இந்த ஒரு காரியத்துக்கும் மறுப்புச் சொல்லிப்புடாதுங்க. உங்க வீட்டுக்காரருதானுங்க எங்களை அந்த நாளையிலே ஆதரிச்ச தெய்வம்!... நீங்க இதை மறுக்காதீங்க. அப்பதான், இத்தனை காலம் எனக்குள்ளாற வீசிக்கிட்டிகிற புயல் ஓயுமுங்க!...''

தேம்பினுர் ஆசாரி.

கல்யாணி அம்மாளின் சம்மதம் கிடைத்ததும், புதுப் பிறவி பெற்ற பாவனையாகச் சிரித்தார் ஆசாரி. உந்திக்கமலம் வெளியேற்றிய சிரிப்பு அது! நீட்டிய காப்பியை நிறைவோடு குடித்தார் அவர்; தாம்பூலம் தரித்துக் கொண்டார். 'எங்கையினுலே உங்களுக்குத் தாலிப் பொட்டு செஞ்சு கொடுத்திருந்தாக்க, ஒரு சமயம், உங்களோட தாலி நிலேச்சாலும் நிலேச்சிருக்குமோ?...நான் எங்க கடமையைச் செய்யாததற்கும், உங்க அவலக் கோலத்தை நான் கண்டதுக்கும் ஊடாலே என்னுலே இப்படித்தானுங்க ஒரு ஆறுதல் வழியை உண்டாக்கிட முடிஞ்சது, தாயே! ஊம்!...வாழ்க்கை ஒரு நாடகமாகத்தான் இருக்குது. வாழ்ந்து நொடிச்ச குடும்பத்தைக் காணவே ஆறமாட்டேங்குதே!...அம்மா வீட்டை அடமானம் வச்சு, மகள் கல்யாணச் செலவைச் செய்ய இருந்திருக்காங்க. அந்தச் சேதி கிடைச்சடியும், அதுக்கும் நானே ஒரு வழியை உண்டாக்கி, திரைமறைவிலே ஒரு உபகாரம்' செஞ்சுப்புட்டேன். சோமசேகரம் ஐயா குடும்பத்துக்கு ஆபத்துக்கு உதவாத என்னேட நிலபுலம் இருந்தென்ன?... பட்டினத்தார் பாடின மாதிரி, நடுவிலே வந்த சிவன் தந்த சொத்து இப்படிப்பட்ட சுபகாரியத்துக்கு உதவுகிறதே என் மனசுக்கு ஆறுதல் தரும்! ஈசனே, எல்லாம் நீ காட்டுகிற நல்ல பாதைதான்!...'

அமைதியில் நெஞ்சு தழைத்துக் கொண்டிருந்தது!

"தாமரை"

"ஊர் எனப்படுவது உறையூர்'' என்றும்,
"பூ வெனப்படுவது பொறி வாழ் பூ'' என்றும்,

குறிப்பிடுவார்கள் புலவர்கள். 'பூ' என்று மட்டும் தமிழ் இலக்கியத்தில் எங்கெல்லாம் வருகிறதோ, அங்கெல்லாம் தாமரை மலர் என்றுதான் பொருள். அத்தகைய சிறப்புடைய தாமரை மலரைக்கொண்டு நமது தமிழை அலங்கரிப்பவர்—ஓவியர் ஆனந்தன்.

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் ச. சொக்கலிங்கம்,
பாரதம் அச்சகம், 14. உஸ்மான் ரோடு, தி' நகர், சென்னை-17.

Regd. No. M. ஜூன் 1961

இளங்கோ பதிப்பகத்தார் தரும் சுவைமிகு நூல்கள்

விரைவில் விற்பனைக்கு வரும்

தமிழன் கண்ட கடவுள்

—தவத்திரு குன்றக்குடி அடிகளார்

உலக மதங்கள்

—வெங்கடேசன்

பரத நூல் *உரையாசிரியர்கள் :*

—வலம்புரி அண்ணாமலை

—வித்துவான் சு. நாராயணசாமி

★

விவரங்களுக்கு:

இளங்கோ பதிப்பகம்

தியாகராயநகர் — சென்னை - 17